# இலங்கையில் சமஷ்டி எண்ணக்கருவின் தோற்றமும் வளர்ச்சியும் (1926-2005)



பதிப்பாசிரியர்
லயனல் குருகே

வெளியீடு
மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

# இலங்கையில் சமஷ்டி எண்ணக்கருவின் தோற்றமும் வளர்ச்சியும் (1926-2005)

பதிப்பாசிரியர்
**லயனல் குருகே**

ஆலோசனை
**சட்டத்தரணி எஸ்.ஜீ.புஞ்சிஹேவா**
**சுனந்த தேசப்பிரிய**

தொகுப்பாசிரியர்
**எஸ். சிவகுருநாதன்**

"இலங்கையின் எதிர்காலமும் சமஷ்டி எண்ணக்கருவும்" என்ற தொனிப்பொருளில் 06.02.2006ல் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற தேசிய மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்டது.

**மாற்றுக் கொள்கைளுக்கான நிலையம்**



இலங்கையில் சமஷ்டி எண்ணக்கருவின் தோற்றமும் வளர்ச்சியும்

முதற்பதிப்பு : 2006 பெப்ரவரி

ISBN : 955-8037-93-1

கணினி வடிவமைப்பு- சுகந்தி மணிமாறன் - 2330071

வெளியீடு : மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

இலங்கை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் என்பது பொது மக்களின் கொள்கைகள் தொடர்பான விவாதங்களுக்கு சிவில் சமூகத்தின் ஒத்துழைப்பைப் பலமிக்கதாக்க வேண்டுமென்ற நம்பிக்கையுடன் அமைக்கப்பட்ட ஓர் நிறுவனமாகும். அது ஆராய்ச்சி மற்றும் ஆலோசனை நிகழ்ச்சித் திட்டங்கள் ஆகியவற்றினூடாக அரச நிர்வாகத்திற்கும் மற்றும் மோதல் தவிர்ப்பிற்குரிய பிரச்சினைகளுக்கும் தனது கவனத்தைச் செலுத்தும்.

மேலதிக விபரங்களுக்குக் கீழ் குறிப்பிடப்படும் விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும்:
இலங்கை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்
24/2 28வது ஒழுங்கை, கொழும்பு - 07
தொலைபேசி: 94-11- 2565304/6 தொலைநகல் : 94-11-4714460
ஈ.மெயில் : cpa@sri.lanka.net

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| அறிமுகவுரை :<br>சமஷ்டி எண்ணக்கரு | 6 |
| திரு. பண்டாரநாயக்காவின் உரை 1926 | 9 |
| மலைநாட்டுச் சிங்களத் தலைவர்களின்<br>சமஷ்டி ஆட்சிக் கோரிக்கை - 1927 | 12 |
| இலங்கை தேசிய சங்கத்தின்<br>யோசனைகள் - 1944 | 16 |
| இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின்<br>தீர்மானங்கள் - 1944 | 18 |
| பண்டா - செல்வா ஒப்பந்தம் - 1957 | 21 |
| சிறிமா -சாஸ்திரி ஒப்பந்தம் - 1964 | 25 |
| டட்லி சேனநாயக்கா - செல்வநாயகம்<br>ஒப்பந்தம் -1965 | 26 |
| தமிழர் விடுதலைக் கூட்டணியின்<br>பொதுத் தேர்தல் விஞ்ஞாபனம் - 1977 | 28 |
| திம்புப் பேச்சு வார்த்தைகள் - 1985 | 32 |





| | |
|---|---|
| இந்திய இலங்கை ஒப்பந்தமும்<br>மாகாண சபைகள் சட்டமும் -1987 | 34 |
| திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க<br>ஜனாதிபதித் தேர்தலுக்கென<br>முன்வைத்த அதிகாரப் பகிர்வு<br>வேலைத் திட்டம் - 1988 | 69 |
| தமிழீழ விடுதலைப் புலிகள் முஸ்லிம்<br>ஐக்கிய விடுதலை முன்னணி கூட்டறிக்கை<br>1988 | 71 |
| மங்கள முனசிங்கா தெரிவுக்குழு<br>அறிக்கை - 1991 | 76 |
| ஜனாதிபதித் தேர்தலுக்காக<br>திரு. காமினி திசாநாயக்க முன்வைத்த<br>யோசனைகள் -1994 | 78 |
| மோதல் தவிர்ப்பு ஒப்பந்தப் பிரகடனம் 1995 | 80 |
| பொதுஜன ஐக்கிய முன்னணி<br>அரசாங்கத்தின் அரசியல்<br>யோசனைகள் - 1997 | 82 |
| போர் நிறுத்த ஒப்பந்தம் - 2002 | 83 |
| இடைக்காலத் தன்னாட்சி அதிகார<br>சபைக்காக விடுதலைப் புலிகள்<br>முன்வைக்கும் யோசனைகள் - 2003 | 100 |
| சுனாமி பொதுக் கட்டமைப்பு - 2005 | 119 |

## அறிமுகவுரை : சமஷ்டி எண்ணக்கரு

இலங்கையில் சமஷ்டி எண்ணக்கரு புதியதொன்றல்ல. குறைந்த பட்சம் இதற்கு எழுபது ஆண்டு கால வரலாறு உண்டு.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு ஐக்கிய இலங்கைக்குள் தீர்வைத்தேடும் எவராயினும், ஆராய வேண்டிய மையப்பொருள் சமஷ்டி எண்ணக்கருவாகும்.

ஐக்கிய இலங்கை என்பது சமஷ்டி எண்ணக்கருவின் அடிப்படையில் உச்ச அளவில் அதிகாரத்தைப் பகிர்வதற்கு இடமளிக்கும் அரச கட்டமைப்பாகும். இதற்கு எதிராகப் பேரம் பேசும் இரண்டு மாற்றுக் கருத்துக்கள் எமது அரசியல் சொல்லாடலில் உண்டு. ஒன்று இலங்கை இரண்டு சுயாதீன அரசுகளாக பரிணமித்தல். மற்றையது எண்ணிக்கையில் பெரும்பான்மையாகத் திகழும் இனத்தின் ஆட்சிக்குக் கட்டுப்பட்ட ஒற்றையாட்சியைத் தொடர்தல்.

சமஷ்டி எண்ணக்கரு என்பது, ஐக்கிய இலங்கைக்குள் சகல இன மக்களும் தம்மைத் தாமே ஆட்சி செய்வதற்கான மாற்று வழியாகும். இது தமிழ் மக்களின் சிவில் அரசியல் உரிமைகளைப் போலவே ஒரு சனசமூகம் என்ற வகையில் அவர்களுக்குரிய கூட்டு உரிமைகளை அங்கீகரிப்பதாகும். இவ்வங்கீகாரத்தை அடிப்படையாகக் கொண்ட சமஷ்டி எண்ணக்கரு, இலங்கைக்கு ஏற்ற வகையில் பகிர்ந்து கொள்ள வேண்டும் என நாம் நம்புகின்றோம்.

சமஷ்டி எண்ணக்கருவை ஏற்றுக் கொள்ளும் நாம் அனைவரும் இலங்கையில் மேற்படி எண்ணக்கரு தோன்றி வளர்ச்சியடைந்த வரலாற்றைப் புரிந்து கொள்வது அவசியமாகும். சமஷ்டி எண்ணக்கரு இன்றைய இலங்கையில் ஓர் யதார்த்தமாகும். தொடர்ந்து ஓர் எண்ணக்கருவாகத் திகழும் இந்த யதார்த்தத்திற்கு எதிராக - சமஷ்டியை வெறுத்துக் குரல் எழுப்புவோர் மேற்கொள்ளும் பாரிய எதிர்ப்பு நடவடிக்கைகள் சமஷ்டி மீது அவர்கள் கொண்டுள்ள அச்சத்தையும் பீதியையும் எடுத்துக் காட்டுகின்றன.

சமஷ்டி எண்ணக்கருவின் அடிப்படையில் தோன்றி வளர்ச்சியடைந்த பல்வகை சமஷ்டி முறைமைகள் உலகில் உள்ளன. அதே சமயம் இடையிடையே எமது நாட்டு அரசியல் இயக்கத்தில் முன்மொழியப்பட்ட சமஷ்டி மற்றும் அரைச் சமஷ்டிக் கட்டமைப்புக்கள் உண்டு. இத் தொகுப்பின் மூலம் மேற்படி முன்மொழிவுகளையே நாம் சமர்ப்பிக்கின்றோம்.



இக்கட்டுரைகள் மூலம் முற்றுப்பெற்ற முன்மொழிவுகள் முன்வைக்கப்படவில்லை. உதாரணமாக 1926ல் திரு. பண்டாரநாயக்க அவர்களின் உரையை எடுக்கலாம். இவ்வுரையில் சில மேலோட்டமான கருத்துக்களே உள்ளடக்கப்பட்டுள்ளன. அதாவது, இலங்கைக்கு மூன்று வகை சமஷ்டிக் கட்டமைப்புக்கள் இருக்க வேண்டும் என்றே அவருடைய கட்டுரை வலியுறுத்துகின்றது.

திரு. செல்வநாயகத்தின் கருத்துக்களும் கிட்டத்தட்ட அவ்வாறானவையே.

ஆனால், இக்கட்டுரைகள் எமது நாட்டில் சமஷ்டி எண்ணக்கரு எவ்வாறு தோன்றி வளர்ந்தது என்பதைக் காட்டுகின்றன. இலங்கையில் சமஷ்டி எண்ணக்கருவின் சார்பில் செயற்படுவதற்கும் அதனை வலியுறுத்தி பரப்புரை செய்வதற்கும் இவ்வரலாற்றை நாம் அறிந்திருப்பது மிக மிக அவசியமாகும்.

இக் கட்டுரைத் தொடரோடு சேர்க்கப்பட வேண்டிய வேறு பல முக்கிய கட்டுரைகளும் உண்டு. இக் கட்டுரைத் தொகுப்பு சமஷ்டி எண்ணக்கருவின் முழுமையான தோற்றத்தையும் வளர்ச்சியையும் எடுத்துக் காட்டவில்லை. எனவே, இச் சிறு நூலை ஆரம்ப கட்டுரைத் தொகுப்பாகவும் முழுமை பெறாத கட்டுரைத் தொகுப்பாகவுமே வெளியிடுகின்றோம்.

எவ்வாறாயினும் சமஷ்டி எண்ணக்கரு அரச சார்பற்ற நிறுவனங்களும்-வெளிநாட்டவர்களும் பரப்புரை செய்யும் ஒரு கருத்தியலே என்ற குற்றச்சாட்டுக்களை இக் கட்டுரைத் தொகுப்பு பொய்யாக்குகின்றது. கோடிட்டுக் காட்டக் கூடிய சில பிரச்சினைகளுக்குத் தீர்வான ஒரு நடைமுறைக் கருவியாகவே சமஷ்டி எண்ணக்கரு இந் நாட்டில் தோன்றி வளர்ந்தது. இவ்வெண்ணக் கருவை சிதைக்க முயற்சித்த சகல சந்தர்ப்பங்களிலும் சமஷ்டி எண்ணக்கரு இலங்கைத் தமிழ் மக்களின் அபிலாசையாகப் பலம் பெற்றது.

சமஷ்டி எண்ணக்கருவின் அடிப்படையிலேயே தமிழ் மக்கள் தம்மைத் தாமே ஆட்சி செய்ய வேண்டும் என்ற அபிலாசை இன்று முன்வைக்கப்படுகின்றது.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் பிறப்பதற்கும் முன்னரேயே சமஷ்டி எண்ணக்கரு இலங்கையில் தோன்றியது. அதே சமயம், என்றோ ஒரு நாள் அவர் இறந்த பின்னர் சமஷ்டி எண்ணக்கரு இல்லாதொழிக்கப்பட

மாட்டாது. இன்று சமஷ்டி என்பது ஒரு சன சமூகத்தின் அரசியல் அபிலாசையாகும். ஒரு சன சமூகத்தின் அபிலாசைகளை வழங்காவிட்டால் அதனை அழிக்கும் ஒரே வழி அச் சமூகத்தைப் படுகொலை செய்வதாகும்.

இக் கட்டுரைத் தொகுப்பு மூலம் மற்றுமோர் விடயம் எடுத்துக் காட்டப்படுகின்றது. நாம் சுதந்திரமடைந்த பின்னர் கைவிடப்பட்ட பல சந்தர்ப்பங்கள் உண்டு. ஒரு சனசமூகம் நாடு என்ற வகையில் புத்தெழுச்சி பெறும் பல சந்தர்ப்பங்களை நாம் தவறவிட்டு விட்டோம். சுதந்திரம் அடைந்த பின்னரான வரலாறு என்பது நழுவவிடப்பட்ட சந்தர்ப்பங்களின் வரலாறாகும் என்பதை இக் கட்டுரைகள் சான்று பகர்கின்றன.

வரலாற்றை மாற்றியமைப்பதற்கே நாம் வரலாற்றைக் கற்க வேண்டும். மனித நேயம் மிக்க - நீதியான அமைதியான எதிர்காலத்தை உருவாக்கவே நாம் வரலாற்றிலிருந்து கற்க வேண்டியுள்ளது. உங்களுடைய புத்தக அலுமாரியை அலங்கரிக்கும் மற்றுமொரு நூலாகவோ அல்லது தூசுபடுவதற்கான மற்றுமோர் புத்தகமாகவோ இக்கட்டுரைத் தொகுப்பு அமையக் கூடாது. மக்களின் புரிந்துணர்வையும் அறிவையும் மேம்படுத்துவதற்கு இவ்வரலாற்றுக் கட்டுரைத் தொகுப்பை பயன்படுத்துவீர்கள் என நம்புகின்றோம்.

எமது சரளமான குறிக்கோள் இதுவே. இத்தகைய கட்டுரைகளைத் தொகுத்து வெளியிட வேண்டும் என்பது எமது நீண்டகால அவாவாகும். இவ்வவாவை சமஷ்டி எண்ணக்கரு என்ற கட்டுரைத் தொகுப்பு மூலம் வெளியிடுவதில் சமஷ்டிவாதிகள் என்று எம்மைப் பெருமையுடன் அடையாளப்படுத்த விரும்பும் அனைவரதும் பேருவகைக்குக் காரணமாக அமையும்.

சமஷ்டிவாதிகளின் கூட்டு முயற்சி மூலமே நாம் எமது கடமைகளை வெற்றிகரமாக அமுல்படுத்த முடியும். சமஷ்டிவாதிகளாகிய நாம் ஓர் எதிர்வு கூறலை எழுதி வைக்க விரும்புகின்றோம்.

“இலங்கையின் அனைத்துச் சமூகங்களுக்கும் சமத்துவ உரிமைகளை உறுதிப்படுத்தும் அமைதியான நீதியான எதிர்காலத் தொலைநோக்கே சமஷ்டி எண்ணக்கரு. இதன் கட்டமைப்பு ஐக்கிய இலங்கையாகும்.

**சுனந்த தேசப்பிரிய**
ஊடகப்பிரிவுத் தலைவர்,
மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்.



# 1926இல் திரு.பண்டாரநாயக்க நிகழ்த்திய உரை



இலங்கைக்கு ஒரு சமஷ்டி ஆட்சிமுறை அவசியம் என ஈழம் ஆதரவாளர்களே குரலெழுப்பி வருகின்றார்களென ஒரு சில இனவாதிகளும், கல்விமான்களும் குற்றம் சாட்டி வருகின்றனர். இது உண்மையானது தானா? அவ்வாறு அது உண்மையானதாக இருந்து வந்தால், இலங்கையின் முதலாவது ஈழம் ஆதரவாளர் காலஞ்சென்ற பிரதமர் திரு.எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்கா ஆவார். ஏனெனில், நீண்ட காலத்திற்கு முன்னரேயே 1926இல் இலங்கைக்கு ஒரு சமஸ்டி ஆட்சிமுறை குறித்த ஒரு யோசனையை அவர் முன்வைத்திருந்தார்.

இது தொடர்பாக திரு. பண்டாரநாயக்க அவர்கள் வெளியிட்ட கருத்து 1926ஆம் வருடம் ஜூலை மாதம் 17ஆம் திகதி வெளிவந்த சிலோன் மோர்னிங் லீடர் பத்திரிகையில் வெளியிடப்பட்டிருந்தது. அது வருமாறு:

இலங்கையில் வாழ்ந்து வரும் பல இன மக்கள் ஒருவரை ஒருவர் சந்தேகக்

கண் கொண்டு நோக்கி வருகின்றனர். அவர்களுக்கிடையில் நிலவி வரும் வேறுபாடுகள் அடிப்படையான வேறுபாடுகளாக இருந்து வரவில்லை எனக் கருதுவது தவறானதாகும். சுமார் நூறு வருடங்களுக்கு முன்னர் அத்தகைய வேறுபாடுகள் இருந்து வரவில்லை. தமிழர்கள், மலைநாட்டுச் சிங்களவர்கள் மற்றும் கரையோரச் சிங்களவர்கள் ஆகிய அனைவரும் ஆங்கிலேயரின் ஆட்சியின் கீழ் இருந்து வந்த காரணத்தினால் அத்தகைய வேறுபாடுகள் தலைதூக்கவில்லை. ஆனால், ஆட்சியதிகாரத்தை தமது கைகளில் எடுத்துக்கொள்ள வேண்டுமென இலங்கை மக்கள் குரலெழுப்பத் தொடங்கியமையை உடனடுத்து, உள்ளே அமுங்கிக் கிடந்த இத்தகைய வேறுபாடுகள் தீப்பொறிகள் போல வெளிக்கிளம்பத் தொடங்கின.

தமிழர்கள், கரையோரச் சிங்களவர்கள் மற்றும் மலைநாட்டுச் சிங்களவர்கள் ஆகிய சமூகப் பிரிவினர் சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக இந்நாட்டில் வாழ்ந்து வந்திருந்த போதிலும், ஒருவருடனொருவர் இணைந்து கொள்வதற்கு அவர்கள் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் ஆயத்தமாக இருந்து வரவில்லை என்ற விடயத்தையே வரலாறு எமக்கு எடுத்துக்காட்டுகின்றது. அவர்கள் தங்களுடைய பழக்கவழக்கங்கள், மொழி மற்றும் சமயம் என்பவற்றை தனித்தனியாகப் பின்பற்றி வருகின்றனர். இந்த வேறுபாடுகள் காலப்போக்கில் ஒழிக்கப்பட்டு விடுமென ஒரு முட்டாள் மட்டுமே கருதிக் கொள்ள முடியும்.

சமஷ்டி ஆட்சி முறையின் கீழ் இடம்பெறும் ஒரு விடயம் அனைத்து சமஷ்டி அலகுகளுக்கும் தன்னாதிக்கம் கிடைப்பதாகும். அதேவேளையில், அனைத்து அலகுகளும் ஒன்றாக இணைந்து காணப்படுகின்றன. முழு நாட்டையும் பாதிக்கக்கூடிய பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடுவதற்கு அவர்களுக்கு ஒரு அரசாங்கச் சபை அல்லது இரு அரசாங்க சபைகள் இருந்து வருகின்றன.

ஐக்கிய அமெரிக்காவில் இத்தகைய ஒரு ஆட்சி முறையே காணப்படுகின்றது. கனடா, அவுஸ்திரேலியா, மற்றும் தென்னாபிரிக்கா போன்ற சுயாட்சிக் குடியரசுகளிலும் அத்தகைய ஒரு ஆட்சி முறையே இருந்து வருகின்றது. சுவிட்சர்லாந்தில்




காணப்படும் ஆட்சி முறை இலங்கைக்கு மிகவும் பொருத்தமான ஒரு முன்மாதிரியாக இருந்து வருகின்றது. அது மிகவும் சிறிய ஒரு நாடாகும். எனினும், அங்கு பிரான்ஸ், ஜேர்மனி மற்றும் இத்தாலி ஆகிய நாடுகளைச் சேர்ந்த சமூகக் குழுக்கள் வாழ்ந்து வருகின்றன. சுவிட்சர்லாந்தில் சமஷ்டி வகையைச் சேர்ந்த ஆட்சி முறை மிகவும் வெற்றிகரமாக இடம்பெற்று வருவதனைக் காண முடிகின்றது.

இலங்கையின் ஒவ்வொரு மாகாணத்துக்கும் முழுமையான சுயாட்சி உரிமை இருந்து வருதல் வேண்டும். நாட்டின் விசேட வருமானங்கள் மற்றும் செலவுகள் என்பன குறித்த முடிவுகளை மேற்கொள்வதற்கு ஒரு அரசாங்க சபை அல்லது இரு அரசாங்க சபைகள் இருத்தல் வேண்டும். இந்த ஆட்சி முறைக்கெதிராக எண்ணற்ற தர்க்க நியாயங்களை எவரும் முன் வைக்க முடியும். எனினும், அந்த எதிர்ப்புக்கள் குறைவடைந்து சென்ற பின்னர் சமஷ்டி ஆட்சி முறையே இலங்கைக்குள்ள ஒரேயொரு தீர்வு என்ற நிலை ஏற்படும்.”

1920களில் ஓர் இளைஞராக இருந்து வந்த திரு பண்டாரநாயக்க முன்வைத்த மேற்படி கருத்துக்கள் இலங்கைக்கு ஒரு சமஷ்டி ஆட்சிமுறை தேவைப்படுவது ஏன் மற்றும் அதற்கெதிராக முன்வைக்கப்படும் தர்க்க நியாயங்கள் ஆதாரமற்றவையாக இருந்து வருவது ஏன் என்ற இரு கேள்விகளுக்கும் பதிலளிக்கின்றன.

# மலைநாட்டுச் சிங்களத் தலைவர்களின் சமஷ்டி ஆட்சிக் கோரிக்கை - 1927



இலங்கைக்குப் பொருத்தமான ஆட்சி முறையொன்றை சிபாரிசு செய்வதற்கென டொனமூர் ஆணைக்குழு 1927இல் நியமனஞ் செய்யப்பட்டது. இந்த ஆணைக்குழுவின் முன் ஆஜராகி கருத்துத் தெரிவித்த மலைநாட்டுச் சிங்களப் பிரதானிகள், தாம் கரையோரச் சிங்களவர்களிலும் பார்க்க வேறுபட்ட ஒரு மேலான குடியினராக இருந்து வருவதனால் தமது தனித்துவமான அடையாளத்தை நிலைநிறுத்திக் கொள்ளும் பொருட்டு ஒரு சமஷ்டி ஆட்சி முறையை உருவாக்குமாறு கேட்டுக் கொண்டனர். அது தொடர்பாக டொனமூர் ஆணைக்குழுவின் அறிக்கையில் காணப்படும் விபரங்கள் வருமாறு:

அதிகாரமும் செல்வாக்கும் மிக்க மலைநாட்டைச் சேர்ந்த ஒரு தரப்பினர், மலைநாட்டுப் பிரதேசத்திற்கு சுயாட்சி வழங்கப்பட வேண்டுமென ஒரு கோரிக்கையை முன்வைத்திருந்தனர். அண்மையில் அமைக்கப்பட்டிருந்த மலைநாட்டுத் தேசிய சபையின் பிரதிநிதிகள் இந்தக் கோரிக்கைகள் குறித்து மிகத் திறமையாகவும், ஆணித்தரமாகவும் தமது கருத்துக்களை முன்வைத்திருந்தனர்.



இந்தச் சபை பெருமளவுக்கு உயர் குடி தலைவர்களினதும், கிராம அதிகாரிகளினதும் அபிப்பிராயங்களையும், அச்ச உணர்வுகளையும் பிரதிபலிக்கும் ஒரு சபையாகவே இருந்து வருகின்றது. எனினும், மலைநாட்டில் மட்டுமன்றி நாடு முழுவதற்கும் பொதுவான ஒரு சில அமைப்புக்களும் ஒரு சில மலைநாட்டவர்களும் இதனைக் கடுமையாக எதிர்த்தனர்.

அக்காலப் போர்களில் முன்னணியில் இருந்த தலைவர்கள் மற்றும் மக்கள் சிவில் அமைப்புக்களின் தலைவர்கள் ஆகியோரின் பிரதிநிதிகள், அரசியல் சீர்திருத்தங்களைக் கோரி முன்னெடுத்துச் செல்லப்படும் ஓர் இயக்கம் குறித்து சந்தேகப்படுவதும், அதற்கென முனைப்புடன் செயற்பட்டு வரும் நபர்களின் வாதப்பிரதிவாதங்களை அதிர்ச்சியூட்டும், தேசத்துரோகக் கருத்துக்களாக நோக்குவதும் இயல்பாகும். மேலும், அனைத்து விடயங்களுக்கும் மிகக் கடுமையான விமரிசனங்களுக்கு உட்படுத்தப்பட்டு வரும் இன்றைய யுகத்தில், தாம் இதுவரை காலமும் மிகுந்த பயபக்தியுடன் வாழையடி வாழையாகப் போற்றிப் பாதுகாத்து வந்த தமக்கேயுரித்தான பழக்கவழக்கங்கள் மற்றும் சம்பிரதாயங்கள் என்பவற்றின் எதிர்காலம் குறித்து அவர்கள் மத்தியில் ஓர் அச்ச உணர்வு தோன்றுவதும் இயல்பானதேயாகும். மலைநாட்டுத் தலைவர்கள் இந்த விதத்திலான ஒரு கருத்தினைத் தெரிவிப்பதற்கு வழிகோலிய மூன்று காரணங்கள் இருந்து வருகின்றன.

பொருளாதார நெருக்கடிகள் காரணமாக கரையோரச் சிங்களவர்களும், தமிழர்களும், முஸ்லீம்களும், சனச்செறிவு மிகுந்த கரையோரப் பிரதேசங்களிலிருந்து வெளியேறி மலைநாட்டுக்கும் ஏனைய பிரதேசங்களிலிருந்து வெளியேறி மலைநாட்டுக்கும், பிற பிரதேசங்களுக்கும் குடிபெயர்ந்தனர். இது முதலாவது காரணமாகும். இரண்டாவது காரணம் : அவ்விதம் குடிபெயர்ந்து சென்றவர்களால் கல்வியறிவில் மிகவும் பின் தங்கிய நிலையிலிருந்து வந்த மலைநாட்டைச் சேர்ந்த அப்பாவிக் கிராம மக்களை மிக எளிதில் சுரண்டக் கூடிய ஒரு சூழ்நிலை நிலவியது. தமக்குப் பொறுப்புக் கூற வேண்டிய அரசாங்கமொன்றை ஸ்தாபித்துக் கொள்வதற்கான இயக்கத்தை ஆரம்பித்தவர்களில்

பெரும்பாலானவர்கள் கரையோரச் சிங்களவர்களாக இருந்து வந்தமை மூன்றாவது காரணமாகும். கரையோரச் சிங்களவர்களின் கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டால் என்றோ ஒரு நாள் தமது சொந்த நாட்டில் தாம் அந்நியப்படுத்தப்பட முடியும் என்ற அச்ச உணர்வும் மலைநாட்டுச் சிங்களவர்கள் மத்தியில் நிலவி வந்தது. இவ்விதம் வந்து குடியேறியவர்கள் மிகவும் தந்திரமான முறையில் தமது காரியங்களைச் சாதித்துக் கொள்ளும் சாமர்த்தியத்தைக் கொண்டிருந்தனர்.

வந்தேறு குடிகளின் பிடியிலிருந்து தப்பிக் கொள்ளும் அளவுக்கு ஆற்றல் கொண்டவர்களாக மலைநாட்டு மக்கள் இருந்து வரவில்லை. மறுபுறத்தில், மலைநாட்டிலிருந்து அரசாங்க சபைக்கு தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகள் மலைநாட்டவர்களாக இருந்து வந்த போதிலும் அவர்களின் எண்ணிக்கை கரையோரப் பிரதேசங்களிலிருந்து தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகளின் எண்ணிக்கையிலும் பார்க்க பெருமளவுக்குக் குறைவாக இருந்து வந்தது. கரையோரச் சிங்களவர்களுக்கும், இலங்கைத் தமிழர்களுக்கும் இடையில் ஓர் ஒப்பந்தம் நிறைவேற்றப்படுவதனையும் அதற்கூடாக மலைநாட்டுப் பிரதேசத்தின் அரசியல் அதிகாரம் இந்த இரு பிரதான குழுக்களின் கைகளில் போய்ச் சேருவதனையும் மலைநாட்டு மக்களின் உரிமைகள் மற்றும் தனித்தன்மை என்பன ஒழிக்கப்படுவதனையும் எந்த விதத்திலும் தடுத்துக் கொள்ள முடியாது போய்விடுமென அவர்கள் கருதினர். நாட்டில் முன்னெடுக்கப்பட்ட அரசியல் சீர்திருத்த இயக்கங்களை மலைநாட்டுச் சிங்களவர்கள் சந்தேகக் கண்கொண்டு நோக்கினர். இந்த இயக்கங்களுக்கூடாக பெருமளவுக்கு முன்னேறியிருக்கும் கரையோரச் சமூகங்களுக்கு மத்தியில் தமது தனித்தன்மை மங்கிச் செல்ல முடியும் என்றும், அதிகரித்து வரும் கரையோரச் சமூகத்தினரின் செல்வாக்கிற்கு தாம் இரையாக வேண்டியிருக்குமென்றும் அவர்கள் சிந்திக்கத் தலைப்பட்டனர்.

இத்தகைய நெருக்கடிகளை தவிர்த்துக் கொள்ளும் பொருட்டு இலங்கை மூன்று சுயாட்சி அலகுகளாகப் பிரிக்கப்பட வேண்டுமென்ற யோசனையை மலைநாட்டுத் தலைவர்கள் முன்



வைத்தனர். அவையாவன:

(1) தமிழர்கள் பெரும்பான்மையாக வாழ்ந்து வரும் வடக்கு, கிழக்கு மாகாணங்கள்.

(2) மலைநாட்டு மாகாணங்கள்

(3) கரையோரச் சிங்களவர்கள் செறிவாக வாழ்ந்து வரும் தென் மற்றும் மேல் மாகாணங்கள்.

இந்த முறையின் பிரகாரம், இம்மூன்று சமூகப் பிரிவினருக்கும் சுயாட்சியுடன் கூடிய ஓர் அரசாங்கம் கிடைக்கும். அதற்கூடாக மலைநாட்டவர்களின் தேசிய மேன்மை பாதுகாக்கப்படுவது மட்டுமன்றி, தெற்கிலிருந்தும் வடக்கிலிருந்தும் அவர்கள் எதிர்கொள்ள நேரிடும் அச்சுறுத்தல்கள் குறித்த அச்சமும் போக்கப்பட்டு விடும். முழு நாட்டுக்கும் நன்மையை எடுத்து வரக் கூடிய விடயங்களைச் செயற்படுத்துவதற்கும் இந்த மூன்று அரசாங்கங்களையும் இணைத்து ஒரு சமஷ்டி அரசாங்கத்தை அமைத்துக் கொள்ள முடியும். அப்பொழுது எந்த ஒரு சமூகப் பிரிவினாலும் மற்றொரு சமூகப் பிரிவை அடக்கியாள முடியாத நிலை தோன்றும்.

# இலங்கை தேசிய சங்கத்தின் யோசனைகள் - 1944



இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் இலங்கை தேசியச் சங்கம் இணைந்து இலங்கை தொழிற்சங்க சம்மேளனத்தின் ஓர் ஆவணமாக 1944.10.02இல் சமர்ப்பிக்கப்பட்டது.

- இலங்கை மக்களின் சமத்துவத்தையும் இறைமையையும் அங்கீகரித்தல்;
- சிங்கள தமிழ் தேசிய இனங்களுக்கு சுதந்திரமும் சுயநிர்ணய உரிமையும் உண்டு என்பதை அங்கீகரித்தல்;
- மேற்படி தேசிய இனங்கள் தமக்கென தனியான அரசை நிறுவ விரும்பினால் அதற்கான உரிமையை அங்கீகரித்தல்;
- இரு தேசிய இனங்களினதும் மரபு வழித்தாயகம், மொழி, பொருளாதார வாழ்வு, கலாசாரம், உளவியல் பாங்கு என்பவற்றை அங்கீகரித்தல்.



**சிறுபான்மையினரின்,**

- அரசியல், சமூக, பொருளாதார, கலாசார, கல்வி, மற்றும் மொழி உரிமைகளை சட்டரீதியாக அங்கீகரித்தல்;
- சாதி, இனம், மற்றும் சமூக அந்தஸ்து என்பவற்றிற்கு அமைய சலுகைகள் அநீதிகள் என்பவற்றை சட்டரீதியாக இல்லாதொழித்தல்
- மேற்கூறியவற்றை மீறுவோருக்கு தண்டனை விதிக்க வேண்டும்.

**(இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி 1944இல் வெளியிட்ட பிரகடனமும் இதற்குச் சமமானது).**

# இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் தீர்மானங்கள் - 1944



இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியினால் கூட்டப்பட்ட கொழும்புப் பிரஜைகளின் இந்தக் கூட்டம், இலங்கைத் தேசிய காங்கிரசின் விசேட அமர்வொன்றின் போது நாட்டுக்கு சுதந்திரத்தையும், சுதந்திர ஆட்சி முறையொன்றையும் பெற்றுக் கொடுப்பது தொடர்பாக சர்வகட்சி மாநாடொன்றைக் கூட்ட வேண்டுமென முன்வைத்திருந்த கோரிக்கையை தாமதமின்றி நிறைவேற்ற வேண்டுமென்று தீர்மானித்தது.

அது, அனைத்து அரசியல் கட்சிகளிடமும், மக்கள் இயக்கங்களிடமும், தனிப்பட்ட பிரதிநிதித்துவம் மற்றும் தனிக்கட்சிப் பிரதிநிதித்துவம் என்பவற்றை ஏற்படுத்த வேண்டாமென்றும், அதற்குப் பதிலாக சர்வகட்சி மாநாடொன்றுக்கு ஒத்துழைப்பைப் பெற்றுத் தந்து, தேசப்பற்று மற்றும் சுதந்திரம் என்பன குறித்த பொதுவான அங்கீகாரத்தையும், ஏனையவர்களின் நியாயமான கோரிக்கைகளின் அடிப்படையில், சுதந்திரத்தையும் ஒரு புதிய அரசியலமைப்பையும் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க



வேண்டுமென வலியுறுத்துகின்றது. அது அமைச்சரவையிடமும், அரசாங்க சபை உறுப்பினர்களிடமும் முன்வைக்கும் வேண்டுகோள்: அவர்கள் தமக்கிடையில் ஓர் சமரசத்தை ஏற்படுத்திக் கொள்ளாமல், அதற்குப் பதிலாக மக்களுடன் இணைந்து செயற்பட்டு சுதந்திரத்தையும், ஒரு புதிய அரசியலமைப்பையும் பெற்றுக் கொள்வதற்கு ஒரு பொது முயற்சியில் ஈடுபட வேண்டுமென்பதாகும்.

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியினால் கூட்டப்பட்ட கொழும்புப் பிரஜைகளின் இந்தப் பொதுக் கூட்டம் பல்வேறு இனக் குழுக்களுக்கிடையில் ஒற்றுமை, சுதந்திரம் மற்றும் அரசியலமைப்பு என்பன தொடர்பாக முன்னெடுக்கப்பட்டு வரும் பொதுக் கோரிக்கைகள் தொடர்பாக இலங்கையின் முன்னோக்கிய பயணம் ஒரு பல்லின இயல்பைக் கொண்டதாக இருந்து வரும் என்பதனையும், இலங்கையில் வாழ்ந்து வரும் சிறுபான்மைக் குழுக்கள் மற்றும் சமூகங்கள் என்பவற்றின் முழுமையான சமத்துவமானது உரிமைகளை அங்கீகரிப்பதன் மூலமே சுதந்திரமான ஐக்கிய இலங்கையொன்றைக் கட்டியெழுப்ப முடியும் என்பதனையும் குறிப்பிட விரும்புகின்றது. வரலாற்று ரீதியில் வளர்ச்சியடைந்திருக்கும் ஏனைய மக்கள் பிரிவினர் சிங்களவர்களாகவும் தமிழர்களாகவும் தமக்கேயுரிய நிலப் பிரதேசங்களுடன், மொழிகளுடன், பொருளாதார வாழ்க்கையுடன் கலாசார மற்றும் உளவியல் கட்டமைப்புடன் வாழ்ந்து வருகின்றனர். அதேவேளையில், அவர்களுக்கு மத்தியில் வேறு சிறுபான்மைக் குழுக்களும் இருந்து வருவதனால் சுதந்திர ஐக்கிய இலங்கையின் அரசியலமைப்பு பின்வரும் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட வேண்டுமென இக்கூட்டம் வலியுறுத்துகின்றது.

(அ) இலங்கை மக்களின் இறைமையையும் சமத்துவத்தையும் அங்கீகரித்தல்.

(ஆ) இனங்களுக்கு சுய நிர்ணயம் தொடர்பாக பராதீனப்படுத்த முடியாத உரிமை இருந்து வருகின்றது என்பதனை

அங்கீகரிப்பதும், அவர்கள் விரும்பினால் அவர்களுக்கே உரித்தான சுயாதீன அரசுகளை உருவாக்கிக் கொள்ள முடியுமென்பதனை அங்கீகரிப்பதும்.


(இ) சுதந்திர அரசியலமைப்பொன்றின் மூலம் நாட்டில் பரந்துபட்டு வாழும் சிறுபான்மைச் சமூகங்களின் அரசியல் சமூக, பொருளாதார, கல்வி மற்றும் மொழியுரிமைகளையும், சமய சுதந்திரத்தையும் அரசியலமைப்பின் அடிப்படையில் உத்தரவாதப்படுத்துதல். இனம் மற்றும் சமூகம் என்பவற்றின் அடிப்படையில் வழங்கப்படும். அனுகூலங்களும் அதே போல புறக்கணிப்பும் அரசியலமப்பு ரீதியாக குற்றச் செயல்களாக ஆக்கப்படுதல் வேண்டும்.

(ஈ) தற்பொழுது இலங்கையில் வாழ்ந்து வரும் இந்தியர்கள் இந்நாட்டை தமது நிரந்தர வசிப்பிடமாக ஆக்கிக் கொள்ள விரும்பினால் மற்றும் இந்நாட்டின் பிரஜாவுரிமையைப் பெற்றுக் கொள்ள விரும்பினால், ஏனைய சமூகப் பிரிவுகள் அனுபவிக்கும் அதே உரிமைகளை அவர்களுக்கும் பெற்றுக் கொடுத்தல்.

அதே போல பொருளாதாரரீதியில் அபிவிருத்தி அடைந்திருக்கும் பிரதேசங்கள் சிங்கள மக்களின் பாரம்பரிய வாழிடமாக இருந்து வருவதனாலும், தமிழர்களும் ஏனைய சிறுபான்மைச் சமூகங்களும் நாட்டின் அபிவிருத்திக்கு பெருமளவுக்குப் பங்களிப்புச் செய்து வருவதனாலும், எதிர்காலத்தில் அவ்வாறு பங்களிப்புச் செய்ய இருப்பதனாலும், ஐக்கிய மற்றும் சுதந்திர இலங்கையின் அரசியலமைப்பின் மூலம் இணையான இரு பிரதிநிதித்துவ சபைகளை உருவாக்க வேண்டுமென்றும், அவற்றில் ஒன்று சர்வஜன வாக்கின் அடிப்படையில் பிரதேசங்களின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட வேண்டுமென்றும், ஏனைய சபை இனக் குழுக்களுக்கிடையிலான சமத்துவத்தின் அடிப்படையிலும் சர்வஜன வாக்கெடுப்பின் அடிப்படையிலும் தெரிவு செய்யப்பட வேண்டுமென்றும் இக்கூட்டம் மேலும் தெரிவித்துக் கொள்கிறது.



# பண்டா - செல்வா ஒப்பந்தம் (1957)




## பகுதி - அ

நாட்டில் வளர்ந்து வரும் நெருக்கடியை ஏற்படுத்தி வந்த கருத்து வேற்றுமைகளைத் தீர்க்கும் முயற்சியாக, அகில இலங்கைத் தமிழரசுக் கட்சிப் பிரதிநிதிகள் பிரதமரோடு அவை தொடர்பான பேச்சுவார்த்தைகளை நடத்தினார்கள்.

உரையாடலின் தொடக்கத்திலேயே அகில இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சில கோரிக்கை களைப் பிரதமர் ஏற்பது சாத்தியமற்றதென்பது தெளிவாகியது.

சமஷ்டி அரசியல் அமைப்பையோ, பிரதேச சுயாட்சியையோ ஏற்படுத்துவது பற்றிப் பேசவோ, அல்லது உத்தியோக மொழிச் சட்டத்தை அழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவோ அரசாங்கத்தின் நிலையில் தன்னால் இயலாது என்று பிரதமர் கூறினார்.

அகில இலங்கைத் தமிழரசுக் கட்சி தனது அடிப்படைக் கொள்கைகள், நோக்கங்கள் எவற்றையும் கைவிடாத வகையில் ஓர் இடைக்கால ஒழுங்குக்கு வர இயலுமா என்பதை ஆராயும் கேள்வி பின் எழுந்தது.

அரசாங்கத்தின் பிரதேச சபைகள் மசோதாவை ஆராய்ந்து, அதன் கீழ் அகில இலங்கைத் தமிழரசுக் கட்சி கருத்திற் கொண்டிருக்கும் சில விடயங்களை நியாயமாக உள்ளடக்கக் கூடியதாக ஏற்பாடுகள் செய்ய இயலுமா என்று பார்க்குமாறு பிரதமர் ஆலோசனை கூறினார். அங்கு ஏற்பட்ட உடன்படிக்கை ஓர் தனியான பத்திரத்தில் தரப்படுகிறது.

## இடைக்கால ஒழுங்கு

மொழி விடயத்தில் அகில இலங்கைத் தமிழரசுக் கட்சி சம அந்தஸ்துக் கோரிக்கையை வலியுறுத்தியது. ஆனால் இவ்விடயத்தில் பிரதமரின் நிலையை உத்தேசித்து இடைக்கால ஏற்பாடாக ஓர் உடன்படிக்கைக்கு வந்தனர். தமிழ் ஒரு தேசிய மொழியாக அங்கீகரிக்கப்படுவதும், வடக்குக் கிழக்கு மாகாணங்களின் நிர்வாக அலுவல்கள் தமிழில் நடைபெறுவதும் முக்கியமானவை என்று அவர்கள் சுட்டிக் காட்டினர்.

தான் முன் குறிப்பிட்டது போல, உத்தியோக மொழிச் சட்டத்தை நீக்கக்கூடிய நடவடிக்கை எடுப்பது சாத்தியமற்றது என்று பிரதமர் கூறினார்.

கருத்துப் பரிமாறலின் பின், இயற்ற உத்தேசிக்கப்படும் சட்டத்தில் இலங்கையின் தேசிய சிறுபான்மையோரின் மொழியாகத் தமிழை அங்கீகரிக்க வேண்டுமென்றும், உத்தியோக மொழியின் நிலையைப் பாதிக்காத வகையில் வடக்குக் கிழக்கு மாகாணங்களின் நிர்வாக மொழியாகத் தமிழே இருக்கும் வகையில் பிரதமரின் நாலு அம்சத்திட்டத்தில் ஏற்பாடு இருக்க வேண்டுமென்றும், வடக்கு-கிழக்கு மாகாணங்களில் வசிக்கும் தமிழ் பேசுவோரல்லாத சிறுபான்மையோருக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டுமென்றும் இரு தரப்பினரும் ஒப்புக்கொண்டனர்.

இந்திய வம்சாவளியினருக்கு இலங்கைக்குக் குடியுரிமை வழங்குவது பற்றியும், குடியுரிமைச் சட்டம் பற்றியும் தமது கருத்துக்களை அகில இலங்கைத் தமிழரசுக் கட்சிப் பிரதிநிதிகள் பிரதமருக்கு எடுத்து விளக்கி, விரைவில் இப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டுமென்று வற்புறுத்தினர்.



இப்பிரச்சினை விரைவில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று பிரதமர் அறிவித்தார்.

இம்முடிவுகளின் காரணமாகத் தமது உத்தேச சத்தியாக்கிரக நடவடிக்கையைக் கைவிடுவதாக அகில இலங்கைத் தமிழரசுக் கட்சி அறிவித்தது.

## பகுதி - ஆ

1. பிரதேச சபைகளின் எல்லைகள் - சட்டத்திலேயே அட்டவணையாகச் சேர்க்கப்பட்டு வரையறுக்கப்பட வேண்டும்.
2. வடக்கு மாகாணம் ஒரு பிரதேச சபையாகவும், கிழக்கு மாகாணம் இரண்டு அல்லது கூடிய பிரதேச சபைகளாகவும் அமையும்.
3. மாகாண எல்லைகளையும் தாண்டி இரண்டு அல்லது மேற்பட்ட பிரதேச சபைகள் இணைவதற்குச் சட்டத்தில் விதி இடம்பெறும். பாராளுமன்றத்தின் அங்கீகாரத்துக்கு அமைவாக, ஒரு பிரதேச சபை தன்னைப் பிரித்துக் கொள்ளவும் இடம் இருக்கும். இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பிரதேச சபைகளுக்குப் பொதுவான குறிப்பிட்ட நோக்கங்களுக்கு, அவை சேர்ந்து செயல்படச் சட்டத்தில் இடம் இருக்கும்.
4. பிரதேச சபை உறுப்பினர் நேரடியாகத் தெரிவு செய்யப்படுவர். அதற்கான தொகுதிகளை வகுப்பதற்குத் தொகுதி நிர்ணயக் குழுவோ, குழுக்களோ அமைப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும். பிரதேச சபையின் எல்லைக்குள் அமைந்த மாவட்டங்களின் பாராளுமன்ற உறுப்பினர் - பிரதேச சபைத் தலைவராவதற்குத் தகுதி பெறுவது பற்றி ஆலோசிக்கப்படும். அரசாங்க அதிபர்கள் பிரதேச

ஆணையாளர்களாக நியமிக்கப்படுவது ஆலோசிக்கப்படும். பெரிய பட்டணங்கள், கேந்திர நகரங்கள், மாநகர சபைகள் ஆகியவற்றை மேற்பார்வை செய்யும் அதிகாரங்கள் ஆராயப்படும்.

5. அதிகாரங்கள் பாராளுமன்றத்தினால் வழங்கப்பெற்றுச் சட்டத்தில் வரையறுக்கப்பட வேண்டும். விவசாயம், கூட்டுறவு, காணியும் காணி அபிவிருத்தியும், குடியேற்றம், கல்வி, சுகாதாரம், கைத்தொழில், மீன்பிடித்துறை, வீடமைப்பு, சமூக சேவை, மின்சாரம், தண்ணீர்த்திட்டங்கள், நெடுஞ்சாலைகள் ஆகியவை உள்ளடங்கிய குறிப்பிட்ட விடயங்கள் - பிரதேச சபைகளின் அதிகாரத்திற்கு உட்பட்டிருக்க வேண்டுமென்று ஒப்புக் கொள்ளப்பட்டது. வேண்டிய அதிகார எல்லைகள் சட்டத்திலேயே வரையறுக்கப்படும்.

6. குடியேற்றத் திட்டங்களைப் பொறுத்தவரை, தமது அதிகார எல்லைக்குட்பட்ட காணிகள் வழங்கப்பட வேண்டிய குடியேற்றவாசிகளைத் தெரிவு செய்வதும், அத்திட்டங்களின் படி வேலைக்கமர்த்தப்படும் ஆட்களைத் தெரிவு செய்வதும் பிரதேச சபையின் அதிகாரத்திற்குட்பட்டதாக இருக்கும் என்று ஒப்புக் கொள்ளப்பட்டது. இப்போது கல்லோயா அபிவிருத்திச் சபையினால் நிர்வகிக்கப்படும் பிரதேசத்தின் நிலை ஆராயப்பட வேண்டும்.

7. சட்ட மூலத்தில் பிரதேச சபைகளையொட்டி உள்ளூராட்சி அமைச்சருக்கு அளிக்கப்பட்ட அதிகாரங்களை மாற்றித் தேவையான இடத்தில் பாராளுமன்றத்திடம் ஒப்படைக்கும் பொருட்டு அவ்விதிகள் திருத்தப்படும்.

8. பிரதேச சபைகளுக்கு மத்திய அரசாங்கம் மொத்தமாக நிதி வழங்கும். அத்தொகை கணக்கிடப்பட வேண்டிய கொள்கை - பின் ஆராயப்படும். பிரதேச சபைகளுக்கு வரி விதிக்கவும், கடன் வாங்கவும் அதிகாரம் இருக்கும்.



# சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம் - 1964



சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம் 1964.10.30ம் திகதி இந்தியப் பிரதமர் திரு.லால் பகதூர் சாஸ்த்திரிக்கும் மற்றும் இலங்கைப் பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவிற்கும் இடையே கைச்சாத்திடப்பட்டது.

**ஒப்பந்தத்தின் குறிக்கோள்**

இலங்கை பிரஜையாகவோ அல்லது இந்தியப் பிரஜையாகவோ ஏற்று அங்கீகரிக்கப்படாமல் இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளி மக்களுக்கு இரு நாடுகளில் ஏதாவது ஒரு நாட்டுப் பிரஜா உரிமை வழங்கல்.

- ஒரு பகுதியினருக்கு இலங்கைப் பிரஜா உரிமை வழங்கல்.
- ஒரு பகுதியினருக்கு இந்தியப் பிரஜா உரிமை வழங்கல்.
- எஞ்சிய நபர்களில் 150,000 பேர் பற்றி தனியான ஓர் உடன்பாட்டைக் காணுதல்.
- மேற்படி விடயங்கள் தொடர்பான முக்கிய பெயர்ப் பட்டியலைத் தயாரித்தல்.

# டட்லி சேனநாயக - செல்வநாயகம் ஒப்பந்தம் - 1965

திரு.டட்லி சேனநாயக அவர்களும், திரு.எஸ்.ஜே.வி. செல்வநாயகம் அவர்களும் 24.03.1965ல் சந்தித்துத் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகள் சம்பந்தமாக நடாத்திய பேச்சுவார்த்தைகளுக்கமைய, ஒரு நிரந்தர அரசாங்கத்தை அமைக்கும் நிமித்தம் - கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ளவற்றிற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுமென்று திரு.டட்லி சேனநாயக்கா ஒப்புக்கொள்கின்றார்.

1. வடக்கு, கிழக்கு மாகாணத்தில் தமிழில் நிர்வாகம் நடப்பதற்கும், அவற்றைத் தமிழிலேயே பதிவதற்கும், தமிழ்மொழி விசேட விதிகளுக்கமைய உடனே நடவடிக்கைகள் எடுக்கப்படும். தமிழ் பேசும் குடிமகன் நாடு முழுவதிலும் தமிழிலேயே காரியமாற்ற உரிமையுள்ளவன் என்பதே - தன் கட்சியின் கொள்கை என்பதையும் திரு.டட்லி சேனநாயக விளக்கினார்.

2. வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள சட்ட பூர்வமான நடவடிக்கைகளை நடாத்தவும், அவற்றைப் பதிவதற்குத் தமிழே நீதிமன்ற மொழியாக இருப்பது தான் - தன் கட்சியின் கொள்கை என்று திரு.டட்லி சேனநாயக்கா ஏற்றுக் கொள்கிறார்.



3. இரண்டு தலைவர்களின் பரஸ்பர சம்மதத்தின் பேரில், மக்கள் வசமுள்ள அதிகாரங்களுக்கேற்ப - இலங்கையில் மாவட்டச் சபைகள் அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும். எனினும் தேசிய நன்மை கருதி, சட்டங்களுக்கமைய - மாவட்ட சபைகளுக்கு மேலான அதிகாரங்கள் அரசாங்கத்துக்கு உண்டென்று ஏற்றுக் கொள்ளப்பட்டது.

4. இலங்கைப் பிரஜை காணிப் பங்கீடுகளில் காணி பெறும் வண்ணம் காணி அபிவிருத்தி விதிகள் திருத்தி அமைக்கப்படும். குடியேற்றத் திட்டங்களில் காணிகள் வழங்கப்படும் போது - வட, கிழக்கு மாகாணங்களில் கீழ் காணும் விடயங்கள் முதன்மையாகக் கவனிக்கப்படும் எனவும் திரு.டட்லி சேனநாயக ஏற்றுக்கொண்டார்.

   (அ) வட, கிழக்கு மாகாணங்களிலுள்ள காணிகள் - அம்மாகாணங்களிலுள்ள காணியற்றவர்களுக்கே முதலில் வழங்கப்படல் வேண்டும்.

   (ஆ) இரண்டாவதாக - வட, கிழக்கு மாகாணங்களில் வசிக்கும் தமிழ் பேசும் மக்களுக்கே வழங்கப்படல் வேண்டும்.

   (இ) மூன்றாவதாக - இலங்கையின் ஏனைய பகுதிகளிலுள்ள தமிழ் பேசும் இனத்தவர்களுக்கே முதலிடங் கொடுத்து ஏனையர்களுக்கும் வழங்கலாம்.

# தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொதுத் தேர்தல் விஞ்ஞாபனம் - 1977



எதிர்வரும் பொதுத் தேர்தலில் இந்நாட்டில் தமிழ் பேசும் மக்கள் பாரம்பரியமாக வாழும் பிரதேசம் முழுவதையும் உள்ளடக்கியதான ஓர் சுதந்திர, இறைமையுள்ள, மதச் சார்பற்ற, சமதர்ம தமிழ் ஈழ அரசை நிறுவுவதற்குத் தமிழ் தேசிய இனத்தின் ஆணையைத் தமிழர் விடுதலைக் கூட்டணி நாடி நிற்கின்றது.

அதே நேரத்தில் தமிழ் ஈழத்தில் அரசியல், சமூக, பொருளாதார அமைப்புப் பற்றிக் கீழ் காணும் உத்தரவாதங்களைத் தமிழர் விடுதலைக் கூட்டணி அளிக்கின்றது. இந்த உத்தரவாதங்களுக்கு அமைவாகவே தமிழ் ஈழ அரசு அமைக்கப்படும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணி உறுதி அளிக்கின்றது.



**1. தமிழ் ஈழ அரசில் கீழ்க் கண்டோர் குடியுரிமை பெறுவர்.**

அ. தமிழ் ஈழத்தின் நிலப்பரப்பில் இன்று வாழ்ந்து கொண்டிருக்கும் மக்கள் எல்லோரும்,

ஆ. தமிழ் ஈழக் குடியுரிமையை நாடும் இலங்கையின் எப்பாகத்திலும் வாழும் தமிழ் பேசும் மக்கள்,

இ. தமிழ் ஈழக் குடியுரிமையை நாடும் உலகில் எப்பாகத்திலும் வசிக்கும் இலங்கை வம்சாவளித் தமிழ் மக்கள்.

2. "தமிழ் ஈழத்தில் அதிகாரம் பரவலாக்கப்பட்டு எந்தப் பிரதேசத்தவரோ, மதத்தவரோ ஏனையோர் மீது அதிகாரம் செலுத்த இயலாத வகையில் அவ்வப்பகுதி மக்களின் சுயாட்சிக்கு வழிவகுக்கும் சுவிற்சர்லாந்து தேசத்தில் உள்ளது போன்ற சமஷ்டி ஆட்சி முறை கைக்கொள்ளப்படும். குறிப்பாக தமிழ் ஈழத்தின் அங்கமான முஸ்லீம் மக்கள் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் பிரிந்து செல்லும் உரிமையுள்ள ஓர் சுயாட்சி மாகாணமாகத் தாம் பெரும்பான்மையாக வாழும் பிரதேசத்தில் உள்ளடக்கப்படுவர்" என்று தமிழர் விடுதலைக் கூட்டணி உத்தரவாதமளிக்கின்றது.

3. தமிழ் ஈழத்தில் தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில் முஸ்லீம் மக்களையோ, முஸ்லீம் மக்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில் தமிழ் மக்களையோ குடியேற்றுவதன் மூலம் பெரும்பான்மையினரைச் சிறுபான்மையினராக்கும் எத்திட்டத்திற்கும் இடமளிக்கப்படமாட்டாது என்று தமிழர் விடுதலைக் கூட்டணி உத்தரவாதம் அளிக்கின்றது.

4. தமிழ் ஈழத்தில் சாதி முறை ஒழிக்கப்படுவதோடு கொடியத் தீண்டாமையையும், பிறப்பினால் மனிதனுக்கு மனிதன்

உயர்வு தாழ்வு கற்பிக்கப்படும் அநீதியும் வேரோடு களையப்பட்டு அதை எவ்விதத்திலும் அனுட்டிப்பது சட்டத்தினால் கடுமையான தண்டனைக்குள்ளாக்கப்படும்.

5. தமிழ் ஈழம் மதச் சார்பற்ற அரசாகத் திகழும். அதே நேரத்தில் அங்கு வாழும் மக்களினால் அனுட்டிக்கப்படும் மதங்கள் எல்லாவற்றிற்கும் சமமான பாதுகாப்பும் உதவியும் வழங்கப்படும்.

6. தமிழ் ஈழத்தின் ஆட்சி மொழியாகத் தமிழ் இருக்கும். அதே நேரத்தில் தமிழ் ஈழத்தில் வாழக்கூடிய சிங்கள மக்கள் தம் தாய் மொழியில் கல்வி கற்க, அரசுடன் கருமம் ஆற்ற உள்ள உரிமை பாதுகாக்கப்படும். அதே போன்று சிங்கள அரசின் கீழ் வாழக்கூடிய தமிழ் பேசும் மக்களின் உரிமைகளுக்கும் சிங்கள அரசிடம் உத்தரவாதம் நாடப்படும்.

7. அறிவியல்ரீதியான பூரண சமதர்ம அரசாக விளங்கும் தமிழ் ஈழத்தில்:-

அ. மனிதனை மனிதன் சுரண்டுவது சட்டத்தினால் தடுக்கப்படும்.

ஆ. உழைப்பின் கௌரவம் பாதுகாக்கப்படும்.

இ. சட்டத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகளுக்குட்பட்டு தனியார் துறை இயங்க அனுமதிக்கப்படும். அதே நேரத்தில் உற்பத்தி சாதனங்களும் விநியோக முறைகளும் அரசுடமைக்கும், கட்டுப்பாட்டுக்கும் உட்பட்டவையாக இருக்கும்.

ஈ. குத்தகை விவசாயிக்கும் தனியார் நிலங்களில் குடியிருப்போருக்கும் பூரணப் பாதுகாப்பு அளிக்கப்படும்.



உ. சமதர்ம திட்டமிடுதலின் அடிப்படையில் தமிழ் ஈழத்தில் பொருளாதார அபிவிருத்தி மேற்கொள்ளப்படும்.

ஊ. தனி மனிதனோ தனிக்குடும்பமோ சேர்த்து வைக்கக் கூடிய சொத்துக்கு உச்ச வரம்பு விதிக்கப்படும்.

8. சமதர்ம அரசான தமிழ் ஈழம் அணிசேரா வெளிநாட்டுக் கொள்கையை கைக்கொள்ளும். அதே நேரத்தில் ஏகாத்திபத்திய எதிர்ப்புச் சக்திகளுக்கும் சனநாயக விடுதலை இயக்கங்களுக்கும் சர்வதேச அரங்கில் ஆதரவு அளிக்கும்.

9. சகோதரத்துவ அடிப்படையில் சிங்கள அரசின் முற்போக்குச் சக்திகளுடன் நட்புறவை வளர்த்து அதன் மூலம் இரு தேசிய இனங்களின் பரஸ்பர பிரச்சினைகளுக்கும் சமாதானத் தீர்வு காண தமிழ் ஈழ அரசு உழைக்கும்.

# திம்புப் பேச்சுவார்த்தைகள் - 1985



இலங்கையின் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வைக் காணும் குறிக்கோளுடன் 1985ல் அனைத்துத் தமிழ் அரசியற் கட்சிகளின் பங்களிப்புடன் பூட்டான் நாட்டின் திம்பு நகரத்தில் இலங்கை அரசாங்கப் பிரதி நிதிகளுடன் பேச்சு வார்த்தைகள் இடம்பெற்றன. இப்பேச்சுவார்த்தைய களில் EPRLF, EROS, LTTE, PLOTE, TELO, மற்றும் TULF; ஆகிய தமிழ் கட்சிகளின் பிரதிநிதிகள் பங்குபற்றினர்.

**திம்புப் பேச்சுவார்த்தைகளின் போது தமிழ் அரசியல் கட்சிகள் முன்வைத்த கோரிக்கைகள்:**

1. தமிழ் மக்களின் பாதுகாப்பு மற்றும் உரிமைகள் உறுதிப்படுத்தப்படும் வகையில் அவர்களை ஓர் தேசிய இனமாக ஏற்றுக்கொள்ளல்.
2. தமிழர் மரபு வழித் தாயகக் கோட்பாட்டை ஏற்றுக் கொள்ளல்.



3. தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக் கொள்ளல்.
4. இலங்கையைத் தமது தாய் நாடாக ஏற்றுக் கொள்ளும் அனைவரது பிரஜா உரிமையை ஏற்றுக் கொள்ளல்.
5. தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளை ஏற்றுக்கொள்ளல்.

திம்புப் பேச்சுவார்த்தைகளில் பங்கு பற்றிய தமிழ் ஆயுதக் குழுவினர் மேற்படி பேச்சுவார்த்தைகளில் பங்குபற்றிய போதிலும் திம்புக் கொள்கைகள் பற்றி ஆழமானதும் தீவிரமானதுமான கலந்துரையாடலை அவர்கள் மத்தியில் முன்கூட்டியே ஒழுங்குபடுத்தவில்லை. பேச்சுவார்த்தைக்குத் தேவையான நிகழ்ச்சி நிரலை மாத்திரம் அவர்கள் சமர்ப்பித்தனர். இந்நிகழ்ச்சி நிரலின் யோசனைகளை ஆழமாகக் கவனத்தில் எடுத்துக் கொள்ள அன்றைய ஜே.ஆர்.ஜயவர்தனவின் தலைமையின் கீழான ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் தயாராக இருக்கவில்லை.

ஐக்கிய அரசின் கீழ் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக்கொள்ளல், தமிழ் மக்களை ஓர் தேசிய இனமாக அங்கீகரித்தல் மற்றும் தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களை மரபுவழித் தாயகமாக ஏற்றுக் கொள்ளல் போன்ற பிரேரணைகள் இப்பேச்சுவார்த்தைகளுக்கு அடிப்படையாக அமைந்தன. இவை திம்பு யோசனைகள் என பகிரங்கப்படுத்தப்பட்டன. திம்பு யோசனைகள் நிகழ்காலத்திற்கு எவ்வகையில் ஏற்புடையதாகும் என்பது இதிலிருந்து தெளிவாகிறது.

# இந்திய இலங்கை ஒப்பந்தமும் மாகாண சபைகள் சட்டமும்

**(1987 நவம்பர் மாதம் 14 ஆந் திகதி மாகாண சபைகள் சட்டம் அத்தாட்சிப்படுத்தப்பட்டது)**



## இந்திய - இலங்கை ஒப்பந்தம் - 1987

இந்தியப் பிரதமர் ரஜீவ் காந்தி அவர்களுக்கும் இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்தனாவிற்கும் இடையே 1987.07.29ம் திகதி இந்திய - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

- இலங்கையின் ஐக்கியம், இறைமை மற்றும் ஆட்புல ஒருமைப்பாடு என்பவற்றைப் பாதுகாத்தல்.
- இலங்கை பல இனங்களையும், பல மொழிகளையும் கொண்ட பன்முகச் சமூகம் என ஏற்றுக் கொள்ளுதல்.
- அனைத்து இனக்குழுமங்களும் பேணிப்பாதுகாக்க வேண்டிய, குறிப்பாக கலாசார மொழி அடையாளம் உண்டென்பதை அங்கீகரித்தல்.



- வடக்கு கிழக்கு மாகாணங்கள் தமிழ் பேசும் மக்கள் வரலாற்று ரீதியாக வாழும் பிரதேசம் என ஏற்றுக் கொள்ளுதல்.
- இலங்கையின் அனைத்துப் பிரஜைகளும் சமத்துவமாக பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும் என ஏற்று அங்கீகரித்தல்.

**மேற்கூறிய உடன்பாடுகளுக் கமைய கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தம் பின்வருமாறு:**

1. வடக்கு, கிழக்கு மாகா ணங்களை ஒன்றிணைத்து ஓர் நிர்வாக மாவட்டத்தை அமைத்தல்.
   தேவைப்படும் போது பொதுசன அபிப்பிராய வாக் கெடுப்பு மூலம் இரண்டு மாகாணங்களாகப் பிரித்தல் அல்லது இணைத்தல்.
2. பொதுசன அபிப்பிராய வாக்கெடுப்பு நடைபெறும் வரை வடக்கு - கிழக்கு மாகாணங்களை ஓர் நிர்வாக மாவட்டமாக ஏற்க வேண்டும்.
3. 1988.12.31ம் திகதியோ அல்லது அதற்கு முன்னரோ பொதுஜன அபிப்பிராய வாக்கெடுப்பை நடாத்துதல்.
4. 1987.12.31ம் திகதிக்கு முன்னர் மாகாண சபைத் தேர்தலை நடாத்துதல்.
5. போர் நிறுத்தத்தின் பின்னர் போராளிக் குழுக்கள் ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டும். இராணுவம் முகாம்களுக்கு வரையறுக்கப்பட வேண்டும்.
6. வடக்கு- கிழக்கு மாகாணங்களில் இலங்கை அரசாங்கம் சட்டத்தையும் ஒழுங்கையும் பேணுதல் வேண்டும்.
7. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள போராளிகள் அனைவருக்கும் பொது மன்னிப்பு வழங்கப்பட வேண்டும்.

மேற்படி உடன்படிக்கைக்கு அமைய இலங்கைப் பாராளுமன்றம் 1987ன் 42ம் இலக்க மாகாணசபைச் சட்டத்தை

அங்கீகரித்தது.மாகாண சபைகளில், மாகாண பொது சேவை தொடர்பான விடயங்களிலும், அத்தோடு தொடர்பான விடயங்களிலும் அல்லது அதன் நியமமான செலவுடன் கூட ஏற்படும் சிறு செலவுகளில் பின்பற்ற வேண்டிய நடைமுறையை அளிப்பதற்கான சட்டம்.

இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் பாராளுமன்றத்தால் சட்டமாக்கப்படல் பின்வருமாறு:

**1. குறுகிய தலைப்பும் நடைமுறைப்படுத்தப்படும் திகதியும்**

இச்சட்டம் மாகாண சபைகளின் 1987 ஆம் ஆண்டின் 42ம் இலக்கச் சட்டமாக எடுத்துக் காட்டப்படலாம். அத்துடன் சகல அல்லது ஏதோ ஒரு உடன்படிக்கை சம்பந்தமாக வர்த்தமானி பத்திரிகையில் வெளியிடப்பட்ட கட்டளையால் ஜனாதிபதி நியமிக்கக் கூடிய பதின்மூன்றாவது அரசியலமைப்புத் திருத்தம் அமுலாவதற்கு முந்தாத வகையில் திகதி அல்லது திகதிகளில் நடைமுறைக்கு வரலாம்.

**பாகம் 1**

**மாகாண சபையின் அங்கத்துவம்**

**2. மாகாண சபையின் பெயரும் அங்கத்துவமும்**

அரசியல் அமைப்பின் 15யு இலக்கச் சட்டத்தின் தன்மையால் ஒரு மாகாணத்திற்கு ஒரு மாகாண சபையை ஏற்படுத்தும் பட்சத்தில் ஜனாதிபதி வர்த்தமானி பத்திரிகையில் வெளியிட்ட கட்டளையால் இவ்வாறான சபைக்கு ஓர் பெயர் இட்டு இப்படியான மாகாண சபை உள்ளடக்கக் கூடிய அங்கத்தவர் எண்ணிக்கையையும் குறிப்பிடலாம். இவ்வாறான தொகையைக் குறிப்பிடுகையில் ஜனாதிபதி அந்த மாகாண சபை அமைக்கப்படும் மாகாணத்தின் விஸ்தீரணத்தையும், சனத்தொகையையும் கருத்திற் கொள்ளுவார்.



**3. மாகாண சபையின் அங்கத்துவத்திற்கான தகைமை**

எந்த ஒரு நபரும் ஓர் மாகாண சபையின் அங்கத்தவராக தெரிவு செய்யப்படவோ அல்லது ஓர் மாகாண சபை அங்கத்தவருக்கு சபையில் அமர்ந்து வாக்களிக்கவோ தகைமையுடையவராக மாட்டார்.

(அ) இப்படியான நபர் அரசியல் அமைப்பின் 91(1) சட்டத்தின் ஒரு சரத்தின் (அ), (இ), (உ), (ஊ), (எ) பந்திகளில் குறிப்பிடப்பட்ட ஏதாவது ஒரு தகைமையீனத்திற்கு உட்பட்டிருந்தால்.

(ஆ) இப்படியான நபர் ஏதாவது ஒரு சட்டத்தின் கீழ் ஓர் உள்ளூர் அதிகாரத்திற்கு அங்கத்தவர்களைத் தெரிவு செய்வதில், வாக்களிப்பதில் நன்கு தகைமை அற்றவராயிருந்தால்.

(இ) இப்படியான நபர் ஓர் பாராளுமன்ற அங்கத்தவராக இருத்தல்.

(ஈ) அவர் வேறு ஒரு மாகாண சபை அங்கத்தவராக அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட மாகாண சபைக்கு வேட்பாளராக நியமனம் பெற்றிருந்தால்.

(உ) அவர் ஓர் மாகாண சபைக்கு ஒன்றுக்கு மேற்பட்ட அங்கீகாரம் பெற்ற அரசியல் கட்சியால் அல்லது சுயேட்சைக் குழுவால் தேர்தலுக்கு வேட்பாளாராக நியமனம் பெற்றிருந்தால்.

**4. உறுப்பினர்களினால் செய்யப்படும் சத்தியம் அல்லது உறுதியுரை**

மாகாண சபையின் உறுப்பினர் எவரும், அவர் அரசியலமைப்பின் நான்காம் அட்டவணையில் தரப்பட்டுள்ள சத்தியத்தைச் செய்து கீழொப்பமிடும் வரை அல்லது உறுதியுரை மொழிந்து

கீழொப்பமிடும் வரை அத்தகைய உறுப்பினராக அமர்தலோ அல்லது வாக்களித்தலோ ஆகாது.

**5. மாகாண சபையின் உறுப்பினரொருவர் - ஆசனங்களை வறிதாக்கல்**

(அ) 3 ஆம் பிரிவிற் கூறப்பட்ட ஏதேனும் தகைமையீனத்துக்கு அமைந்தவராகவரின் : அல்லது

(ஆ) தவிசாளருக்கு முகவரியிட்டனுப்பப்படும் அவரது கைப்பட்ட எழுத்தின் மூலம் தமது ஆசனத்திலிருந்து விலகின், மாகாண சபையில் அவரது ஆசனம் அதன் மேல் வறிதாதல் வேண்டும்.

1. தொண்ணூறு நாட்களைக் கொண்டவொரு காலப்பகுதிக்கு மாகாண சபையின் உறுப்பினரொருவர் சபையின் அனுமதியின்றி அதன் எல்லாக் கூட்டங்களுக்கும் வருகை தராதிருப்பின் சபையானது அவரது ஆசனத்தை வறிதானதென வெளிப்படுத்தலாம்:

ஆயின், சொல்லப்பட்ட தொண்ணூறு நாட்களைக் கொண்ட காலப்பகுதியைக் கணிக்கையில், அடுத்தடுத்து வரும் நான்கு நாட்களுக்கதிகமாக சபையானது அமர்வு நிறுத்தப்பட்டுள்ள ஏதேனும் காலப்பகுதி பற்றிக் கணக்கெதுவும் எடுக்கப்படுதலாகாது.



**6. சத்தியம் செய்யுமுன்னதாக அல்லது தகைமையற்றவராகவிருக்கும் போது, அமர்வதற்கும் வாக்களிப்பதற்குமான தண்டம்**

ஆளொருவர் மாகாண சபையொன்றின் உறுப்பாண்மைக்காக 4 ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுக முன்னதாக அல்லது தாம் தகைமையுடையவரல்லர் என அல்லது தகைமையற்றவர் என அறிந்து கொண்டு அச்சபையின் உறுப்பினரொருவராக அமர்ந்தால் அல்லது வாக்களித்தால், அவர் அவ்வாறு அமரும் அல்லது வாக்களிக்கும் ஒவ்வொரு நாள் தொடரிலும் நூறு ரூபா வரையிலான தண்டத்துக்கு ஆளாதல் வேண்டும். இத்தொகை அரசுக்கு வருமதியான கடனொன்றாக அறவிடப்படுதல் வேண்டும்.

## பாகம் II

## மாகாண சபைகளின் கூட்டங்களும் அதன் அலுவல்களை நடாத்துதலும்

**7. தவிசாளரும் பிரதித் தவிசாளரும்**

1. மாகாண சபை ஒவ்வொன்றும் இயன்றளவு விரைவாக முறையே சபையின் தவிசாளராகவும் பிரதித் தவிசாளராகவும் இருப்பதற்கென சபையின் உறுப்பினர்கள் இருவரைத் தெரிவு செய்தல் வேண்டுமென்பதுடன், தவிசாளரின் அல்லது பிரதித் தவிசாளரின் பதவி வறிதாக வருகின்ற சந்தர்ப்பங்களில் விடயத்துக்கேற்ப தவிசாளராக அல்லது பிரதித் தவிசாளராக இருப்பதற்கென சபையானது இன்னோர் உறுப்பினரைத் தெரிவு செய்தலும் வேண்டும்.

2. மாகாண சபையொன்றின் தவிசாளராக அல்லது பிரதித் தவிசாளரைப் பதவி வகிக்கும் உறுப்பினர்-

(அ) சபையின் உறுப்பினர்களாக இல்லாதொழிந்தால், தமது பதவியைவறிதாக்குதல் வேண்டும்.

(ஆ)அத்தகைய உறுப்பினர் தவிசாளராகவிருப்பின், பிரதித் தவிசாளருக்கும் அத்துடன் அத்தகைய உறுப்பினர் பிரதித் தவிசாளராக இருப்பின் தவிசாளருக்கும் முகவரியிட்டனுப்பப்படும் தமது கைப்பட்ட எழுத்தின் மூலம் எந்நேரத்திலும் தமது பதவியிலிருந்து விலகலாம்.

(இ) (சமூகமளிக்காதோர் உட்பட) சபையின் முழு எண்ணிக்கையினரான உறுப்பினர்களின் பெரும்பான்மையினால் நிறைவேற்றப்பட்ட சபையின் தீர்மானமொன்றின் மூலம் அவரது பதவியிலிருந்து அகற்றப்படலாம். ஆயின், சபையானது கலைக்கப்படும் போதெல்லாம், கலைத்தலின் பின்னர் சபையின் முதலாவது கூட்டத்துக்கு நேர்முன்னர் வரை தவிசாளர் தமதுபதவியை வறிதாக்குதலாகாது.

3. தவிசாளரின் பதவி வறிதாகவிருக்கும் போது, பதவிக்கான கடமைகள் பிரதித் தவிசாளரினால், அல்லது பிரதித் தவிசாளரின் பதவியும் வறிதாகவிருப்பின் சபையின் நடவடிக்கை முறை பற்றிய விதிகளினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான சபையின் அத்தகைய உறுப்பினரினால் புரியப்படுதல் வேண்டும்.

4. சபையின் ஏதேனும் அமர்வில் தவிசாளர் வருகை தராதபோது, பிரதித் தவிசாளர் அல்லது அவரும் வருகை தராதிருப்பின் சபையின் நடவடிக்கை முறை பற்றிய விதிகளினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய ஆள், அல்லது அத்தகைய ஆளெவரும் சமூகமளித்திருக்காவிடின், சபையினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறானஅத்தகைய வேறு ஆள் தவிசாளராகச் செயலாற்றுதல் வேண்டும்.



5. மாகாண சபையின் தவிசாளருக்கும் பிரதித் தவிசாளருக்கும் நியதிச் சட்டத்தின் மூலம் மாகாண சபையினால் நிர்ணயிக்கப்பட கூடியவாறான அத்தகைய சம்பளங்களும், படிகளும் அத்துடன் அதற்கான ஏற்பாடு அவ்வாறு செய்யப்படும் வரை, ஜனாதிபதியின் அங்கீகாரத்துடன் ஆளநர், கட்டளை மூலம் தீர்மானிக்கக் கூடியவாறான அத்தகைய சம்பளங்களும் படிகளும் செலுத்தப்பட வேண்டும்.

**8. தவிசாளர் அல்லது பிரதித்தவிசாளர் அவரது அகற்றுகைக்கான தீர்மானம் ஆராயப்படும் போது தலைமை வகித்தலாகாது**

1. மாகாண சபையின் ஏதேனும் அமர்வில் தவிசாளரைத் தமது பதவியிலிருந்து அகற்றுவதற்கான ஏதேனும் தீர்மானம் சீர்தூக்கிப் பார்க்கப்படுகையில் தவிசாளர், அல்லது பிரதித் தவிசாளரைத் தமது பதவியிலிருந்து அகற்றுவதற்கான ஏதேனும் தீர்மானம் சீர்தூக்கிப் பார்க்கப்படுகையில் பிரதித் தவிசாளர், அவர் சமூகமளித்திருக்கும் போதிலும் தலைமை வகித்தலாகாது என்பதுடன், 7 ஆம் பிரிவின் (4)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், விடயத்திற்கேற்ப, தவிசாளர் அல்லது பிரதித் தவிசாளர் வருகை தராதுள்ள அமர்வொன்று தொடர்பாக அவை ஏற்புடையனவாகின்றவாறு அத்தகைய ஒவ்வோர் அமர்வு தொடர்பாகவும் ஏற்புடையனவாதலும் வேண்டும்.

2. தவிசாளரானவர் பதவியிலிருந்து தமது அகற்றுகைக்கான ஏதேனும் தீர்மானம் சபையில் சீர்தூக்கிப் பார்க்கப்படும் போது மாகாண சபையில் உரையாற்றுவதற்கும், அத்துடன் அதன் நடவடிக்கைகளில் வேறுவகையாகப் பங்குபற்றுவதற்கும் உரிமையுடையவராதல் வேண்டும் என்பதுடன், 10ஆம் பிரிவில் எது எப்படியிருப்பினும், அத்தகைய நடவடிக்கைகளின் போது அத்தகைய தீர்மானத்தின் மீது அல்லது வேறேதேனும் கருமத்தின் மீது முதல் தடவையில் மட்டுமே வாக்களிப்பதற்கு உரித்துடையவராதலும் வேண்டும். ஆனால் வாக்குகள் சமமாகவுள்ள ஒரு விடயத்தில் அல்ல.

## 9. மாகாண சபை உறுப்பினர்களின் தத்துவங்களும் சிறப்புரிமைகளும்

1. இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் மாகாண சபையொன்றின் நடவடிக்கை முறையை ஒழுங்குபடுத்துகின்ற விதிகளுக்கும் நிலையியற் கட்டளைகளுக்கும் அமைய, மாகாண சபை ஒவ்வொன்றிலும் பேச்சுச் சுதந்திரம் இருத்தல் வேண்டும்.

2. மாகாண சபையின் உறுப்பினரெவரும் சபையில் அல்லது அதன் ஏதேனும் குழுவில் அவரால் கூறப்படும் எது தொடர்பிலும் அல்லது அவரால் கொடுக்கப்படும் ஏதேனும் வாக்குத் தொடர்பிலும் ஏதேனும் நீதி மன்றத்தில் எவையேனும் வழக்கு நடவடிக்கைகளுக்கு ஆளாதலாகாது என்பதுடன், அத்தகைய சபையின் அதிகாரத்தினால் அல்லது அதிகாரத்தின் கீழ் ஏதேனும் அறிக்கை, பத்திரம் வெளியிடப்பட்டமை தொடர்பில் ஆளெவரும் ஆளாதலுமாகாது.

3. ஓராம் (2)ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகள் எழுத்திலான ஏதேனும் சட்டத்தின் பயனைக் கொண்டு மாகாண சபையொன்றில் அல்லது அதன் ஏதேனும் குழுவில் உரையாற்றுவதற்கும் அதன் நடவடிக்கைகளில் வேறு வகையாகப் பங்குபற்றுவதற்கும் உரிமையுள்ள ஆட்கள் தொடர்பாகஅச்சபையின் உறுப்பினர்கள் தொடர்பாக அவை ஏற்புடையவாகின்றவாறு ஏற்புடையனவாதல் வேண்டும்.



## 10. சபையில் வாக்களித்தல்

1. இச்சட்டத்தில் வேறு வகையாக ஏற்பாடு செய்யப்பட்டதனைத் தவிர, மாகாண சபையின் ஏதேனும் அமர்விலான எல்லா விடயங்களும் தவிசாளர், அல்லது அத்தகையராகச் செயலாற்றுகின்ற ஆள் தவிர, சமூகமளித்து வாக்களிக்கின்ற உறுப்பினர்களின் வாக்குப் பெரும்பான்மையினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

2. தவிசாளர் அல்லது அத்தகையவராகச் செயலாற்றுகின்ற ஆள், முதல் தடவையில் வாக்களித்தலாகாது. ஆனால், வாக்குகள் சமமாகவுள்ள விடயத்தில் அறுதியிடும் வாக்கொன்றை உடையவராதலும் பிரயோகித்தலும் வேண்டும்.

3. மாகாண சபையொன்று அதன் உறுப்பான்மையிலான வெற்றிடத்தைப் பொருட்படுத்தாது செயலாற்றுவதற்குத் தத்துவமுடையதாதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய ஏதேனும் சபையிலான எவையேனும் நடவடிக்கைகள், அமர்வதற்கு அல்லது வாக்களிப்பதற்கு அல்லது நடவடிக்கைகளில் வேறுவகையாகப் பங்குபற்றுவதற்கு உரித்தில்லாத எவரேனும் ஆள் அவ்வாறு செய்துள்ளாரென அடுத்துப் பின்னர் கண்டுபிடிக்கப்படினும் செல்லுபடியானவையாதலும் வேண்டும்.

4. மாகாண சபையொன்றின் கூட்டத்தை அமைப்பதற்கான கூட்ட நடப்பெண் சபை உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையில் மூன்றிலொன்றாதல் வேண்டும். உறுப்பினர்களின் எண்ணிக்கையில் மூன்றிலொன்று முழு எண்ணாகவும் பின்னமாகவும் உள்ளவிடத்து, அந்த முழு எண்ணுக்கும் பின்னத்துக்கும் நேர் முன்னருள்ள கூடிய முழு எண்ணே இப்பிரிவின் நோக்கத்துக்காக உறுப்பினர்களின் எண்ணிக்கையில் மூன்றிலொன்றெனக் கருதப்படுதல் வேண்டும்.

5. மாகாண சபையொன்றின் கூட்டத்தின் போது எந்நேரத்திலும் கூட்டநடப்பெண் எதுவும் இல்லாதிருப்பின், ஒன்றில் கூட்டநடப்பெண் ஒன்று இருக்கும் வரை சபையை ஒத்திவைத்தல் அல்லது கூட்டத்தைஇடைநிறுத்தி வைத்தல் தவிசாளரின் அல்லது அத்தகையவராகச் செயலாற்றும் ஆளின் கடமையாதல் வேண்டும்.

**11. நடைவடிக்கை முறைமை பற்றிய விதிகள்**

மாகாண சபையொன்று, இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, அதிக நடவடிக்கை முறையை ஒழுங்குபடுத்துவதற்கும் அதன் அலுவல்களை நடாத்துவதற்கும்விதிகளை ஆக்கலாம்: ஆயின், மாகாண சபையானது, அத்தகைய சபையின் தவிசாளருடனான கலந்தாலோசனையின் பின்னரும் ஜனாதிபதியின் அங்கீகாரத்துடனும் பின்உருவானவற்றுக்காக விதிகளை ஆக்குதல் வேண்டும்.

(அ) நிதிசார் அலுவல்களை நேரகாலத்தோடு பூர்த்தி செய்வதனைஉறுதிப்படுத்துதல்.

(ஆ)ஏதேனும் நிதிசார் கருமம் தொடர்பாக அல்லது மாகாணத்தில் மாகாண நிதியத்திலிருந்து பணங்களை ஒதுக்கீடு செய்வதற்கான ஏதேனும் நியதிச் சட்டம் தொடர்பாக மாகாண சபையின் நடவடிக்கை முறையையும் அதில் அலுவல்கள் நடாத்துவதையும் ஒழுங்குபடுத்துதல்.



(இ) ஆளுநர் தமது தற்றுணிபில் செயலாற்றுவதற்கு அரசியலமைப்பினால் அல்லது இச்சட்டத்தினால் தேவைப்படும் அளவுக்கு அவரின் பணிகளை நிறைவேற்றுதலைப் பாதிக்கும் ஏதேனும் கருமத்தைப் பற்றிக் கலந்தாராய்வதை அல்லது அது பற்றி கேள்விகள் கேட்பதைத் தடைசெய்தல்.

**12.** 1. மாகாண சபையின் நடவடிக்கைகள் பற்றி நீதிமன்றம் விசாரணை செய்தலாகாது: மாகாண சபையொன்றிலான எவையேனும் நடவடிக்கைகளின் செல்லுபடியாத்தன்மை, சார்த்தப்படும் நடவடிக்கை முறையிலான ஒழுக்கீனம் என்ற ஏதுவின்மீது கேள்விக்குட்படுத்தலாகாது.

2. மாகாண சபையொன்றில் நடவடிக்கை முறையை ஒழுங்குபடுத்துவதற்கு அல்லது அலுவல்களை நடாத்துவதற்கு அல்லது ஒழுங்கைப் பேணுவதற்கு இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின் கீழ் தத்துவங்கள் உரித்தாக்கப்பட்டுள்ள அத்தகைய சபையின் அலுவலர் அல்லது உறுப்பினரெவரும் அத்தத்துவங்களை அவர் பிரயோகித்தல் தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்துக்கு அமைந்தவராதலாகாது.

**13. அரச ஆதனத்தை வரிவிதித்தலிலிருந்து விலக்களித்தல்**

அரசின் ஆதனமானது, பாராளுமன்றம் சட்டத்தினால் வேறுவகையாக ஏற்பாடுசெய்யக் கூடிய அளவுக்குத் தவிர, மாகாண சபையொன்றினால் ஆக்கப்படும் ஏதேனும் நியதிச் சட்டத்தினால் அல்லது நியதிச்சட்டத்தின் கீழ் விதிக்கப்படும் எல்லா வரிகளிலிருந்தும் விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

**14.** 1. நியதிச் சட்டங்கள் காலம் கழிந்து போதல்: மாகாண சபையொன்றில் முடிவுறாதிருக்கும் நியதிச்சட்டமென்று அத்தகைய சபை அமர்வு நிறுத்தப்பட்டமை காரணமாக காலம் கழிந்து போதலாகாது.

2. மாகாண சபையொன்றில் முடிவுறாதிருக்கும் நியதிச்சட்டமொன்று சபை கலைக்கப்படுவதன் மீது காலம் கழித்து போதல் வேண்டும்.

**15.** 1. அலுவல்களை நடாத்துதல்: ஆளுநர் எவ்வலுவல்கள் தொடர்பில் தமது தற்றுணிபில் செலாற்றுவதற்கு அரசியலமைப்பினால் அல்லது அதன்கீழ் தேவைப்படுத்தப் படுகின்றாரோ அவ்வலுவல்களாகவிராத அலுவல்களை அமைச்சர்களுக்கிடையே குறித்தொதுக்குவதற்கு விதிகளை ஆக்குதல் வேண்டும்.

2. இச்சட்டத்தில் வேறுவகையாக ஏற்பாடு செய்யப்பட்டதனைத் தவிர, ஆளுநரின் எல்லா நிறைவேற்று நடவடிக்கைகளும், அவை அவரது அமைச்சர்களின் ஆலோசனையின் மீது எடுக்கப்படினுஞ்சரி வேறு வகையாகவாயினுஞ்சரி, ஜனாதிபதியின் பெயரில் எடுக்கப்படுவதென எடுத்துக் கூறப்படுதல் வேண்டும்.

3. ஜனாதிபதியின் பெயரில் செய்து நிறைவேற்றப்படும் கட்டளைகளும் ஏனைய சாதனங்களும், ஆளுநரினால் ஆக்கப்பட வேண்டிய விதிகளில் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய முறையில் மெய்யென்று உறுதிப்படுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அவ்வாறு மெய்யென்று உறுதிப்படுத்தப்பட்ட கட்டளை அல்லது சாதனம் ஒன்றின் செல்லுபடியாந்தன்மை, அது ஜனாதிபதியினால் செய்யப்பட்ட அல்லது நிறைவேற்றப்பட்ட ஒரு கட்டளை அல்லது சாதனம் அல்லவென்ற ஏதுவின்மீது கேள்விக்குட்படுத்தப் படுதலுமாகாது.



**16.**1. ஒப்பந்தங்களும் தொடாச்சிகளும்: மாகாண ஆளுநரின் நிறைவேற்றுத் தத்துவத்தைப் பிரயோகிக்கையில் செய்துகொள்ளப்படும் எல்லா ஒப்பந்தங்களும் அம்மாகாணத்துக்கென அமைக்கப்பட்ட மாகாண சபையின் பெயரில், அத்தகைய மாகாணசபை கூட்டிணைக்கப்பட்டவொரு குழு என்றாற் போன்று செய்து கொள்ளப்படுதலும் புரியப்படுதலும் வேண்டும்.

2. அத்தகைய நிறைவேற்றுத் தத்துவத்தின் பிரயோகம் தொடர்பான எல்லா வழக்குகளும், அத்தகைய மாகாணசபை கூட்டிணைக்கப்பட்டவொரு குழு என்றாற் போன்று அத்தகைய மாகாண சபையினால் அல்லது அதற்கெதிராகக் கொண்டுவரப்படுதல் வேண்டும்.

**17.** 1. செயலகம்: மாகாண சபையொன்று அதன் சொந்த செயலகப் பணியாட்டொகுதியினரைக் கொண்டிருத்தல் வேண்டும்.

2. மாகாண சபையொன்று, நியதிச் சட்டத்தின் மூலம் அதன் செயலகப் பணியாட்டொகுதிக்கு நியமிக்கப்படும் ஆட்களின் ஆட்சேர்ப்பையும் சேவை நிபந்தனைகளையும் ஒழுங்குபடுத்தலாம்.

**18. மாகாண சபையில் கலந்தாராய்தலின் மீதான மட்டுப்பாடு**

அரசியலமைப்பின் 154ஆ என்னும் உறுப்புரையின் (4)ஆம் பந்திக்கமைய ஜனாதிபதியின் அல்லது ஆளுநரின் அல்லது நீதித்துறை அலுவலரொருவரின் அல்லது பாராளுமன்ற உறுப்பினரொருவரின் நடத்தை தொடர்பில் ஒரு மாகாண சபையில் கலந்தாராய்வெதுவும் நடைபெறுதலாகாது.

**பாகம் III**

**நிதி**

**19.**1. மாகாணத்தின் மாகாண நிதியம்: ஒவ்வொரு மாகாணத்துக்கும் மாகாண நிதியம் ஒன்று இருத்தல் வேண்டும். அதற்குள் பின்வருவன செலுத்தப்படல் வேண்டும்.

(அ) அம்மாகாணத்தின் மாகாண சபையினால் சுமத்தப்படும் எல்லா வரிகளினதும் கூட்டு மொத்தத் தொகை:

(ஆ)அந்த மாகாணம் தொடர்பில் அத்தகைய மாகாண சபைக்கு இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்படும் எல்லா மானியக் கொடைகளினதும் வரும்படிகள்:

(இ) இலங்கைத் திரட்டு நிதியத்திலிருந்து மாகாண சபைக்கு முற்பணமாக வழங்கப்பட்ட எல்லாக் கடன்களினதும் வரும்படிகள்: அத்துடன்

(ஈ) மாகாண சபைக்குக் கிடைக்கின்ற மற்ற எல்லாப் பெறுகைகள்.

2. மாகாணமொன்றின் மாகாண நிதியத்திலிருந்து பணங்கள் எவையும், அச்சட்டத்துக்கு இணங்கவும் அத்துடன் இச்சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நோக்கங்களுக்காவும் அம்முறையிலும் அன்றி, ஒதுக்கீடு செய்யப்படுதல் ஆகாது.

3. மாகாணத்தின் பிரதான அமைச்சரின் கைப்பட்ட ஆணையொன்றின் கீழ் தவிர, மாகாணமொன்றின் மாகாண நிதியத்திலிருந்து பணத்தொகையெதுவும் மீளப்பெறப்படுதல் ஆகாது.



4. எந்நிதியாண்டின்போது மீளப்பெறுதல் நடைபெறப் போகின்றதோ, அந்நிதியாண்டின் சேவைகளுக்காக, மாகாண சபையின் நியதிச்சட்டத்தின் மூலம் பணத்தொகையானது வழங்கப்பட்டிருந்தாலொழிய அல்லது மாகாணத்தின் மாகாண நிதியத்தின் மீது வேறுவகையில் சட்டமுறையாகப் பொறுப்பாக்கப்-பட்டிருந்தாலொழிய அத்தகைய ஆணை எதுவும் வழங்கப்படுதலாகாது.

5. மாகாணமொன்றின் மாகாண நிதியத்தினது கட்டுக்காப்பு, அத்தகைய நிதியத்துக்குள் பணங்கள் செலுத்தப்படுதல் அத்துடன் அக்கருமங்களோடு தொடர்புபட்ட அல்லது அவற்றுக்குத் துணையான வேறு எல்லாக் கருமங்களும் ஆளநரால் ஆக்கப்படுகின்ற விதிகளினால் ஒழுங்குபடுத்தப்படல் வேண்டும்.

**20.**

1. மாகாணத்தின் அவசரகால நிதியம்: ‘மாகாணத்தின் அவசரகால நிதியம்’ எனப் பெயரிடப்பட வேண்டிய அவசரகால நிதியம் ஒன்று கட்டுநிதியொன்று என்ற தன்மையில் தாபிக்கப்படுதல் வேண்டும். இந்நிதியத்துக்குள் மாகாணசபையினால் ஆக்கப்படும் நியதிச்சட்டத்தின் மூலம் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய பணத்தொகைகள், மாகாண நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும். அத்துடன் அத்தகைய நிதியமானது, ஆளுநரினால் அத்தகைய நிதியத்திலிருந்து முற்பணங்கள் வழங்கப்படுவதை இயலச் செய்வதற்காக அவரினால் வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

2. எதிர்பாராச் செலவினங்களைச் சமாளிக்கின்ற நோக்கங்களுக்காகத் தவிர 36ஆம் - 27ஆம் பிரிவுகளின் கீழ் நிதிச்சட்டத்தினால் ஆக்கப்பட்ட ஒதுக்கீடுகளின் கீழ் அத்தகைய செலவினத்துக்கு அதிகாரமளிப்பது பற்றி

மாகாண சபையினால் முடிவு செய்யப்பட்டிருக்காதவிடத்து, மாகாணத்தின் அவசரகால நிதியத்திலிருந்து முற்பணங்கள் எவையும் வழங்கப்படலாகாது.

3. மாகாணத்தின் அவசரகால நிதியத்தின் கட்டுக்காப்பு, அதற்குள் பணங்கள் செலுத்தப்படுதல் அத்துடன் அதிலிருந்து பணங்களை மீளப் பெறுதல் ஆகியவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றுக்குத் துணையான எல்லாக் கருமங்களையும் ஒழுங்குபடுத்துகின்ற விதிகளை ஆளுநர் ஆக்கலாம்.

**21.** 1. கடன்களுக்கான அரசாங்க உத்தரவாதம்: மாகாண சபையொன்றினால் நிரட்டப்படுகின்ற கடன்கள் தொடர்பில் நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சர் உத்தரவாதங்கள் அளிக்கலாம்.

2. ஓராம் உட்பிரிவின் கீழ் உத்தரவாதமொன்று அளிக்கப்பட்டதை உடனடுத்துப் பின்னர், நிதியென்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரானவர், அத்தகைய உத்தரவாதம் பற்றிய கூற்றொன்றைப் பாராளுமன்றத்தின் முன் இடுதல் வேண்டும்.

3. ஓராம் உட்பிரிவின் கீழ் அளிக்கப்படுகின்ற உத்தரவாதமொன்று நிறைவேற்றப்படுதற்குத் தேவைப்படுகின்ற பணத்தொகையெதுவும் இலங்கைத் திரட்டு நிதியத்திலிருந்து செலுத்தப்படல் வேண்டும்.

4. ஓராம் உட்பிரிவின் கீழ் அளிக்கப்படுகின்ற உத்தரவாதம் ஒன்றை நிறைவேற்றுவதற்கு இலங்கைத் திரட்டு நிதியத்திலிருந்து செலுத்தப்படுகின்ற பணத்தொகையெதுவும், நிதியென்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய வீதத்தில், அதற்கான வட்டியுடன் சேர்த்து நிதி என்னும் விடயத்துக்கு பொறுப்பாகவுள்ள அமைச்சர் தீர்மானிக்கின்றவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய காலப் பகுதிக்குள்ளும் மாகாண சபையினால் மீளச் செலுத்தப்படுதல் வேண்டும்.



5. மாகாண சபையொன்று தொடர்பில் இலங்கைத் திரட்டு நிதியத்திலிருந்து வழங்கப்பட்ட கடனொன்றின் ஏதேனும் பாகம் தற்போதும் நிலையாக இருந்தால் அல்லது அது தொடர்பில் (1)ஆம் உட்பிரிவின் கீழ் உத்தரவாதமொன்று அளிக்கப்பட்டிருந்தால், நிதியென்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் சம்மதமில்லாமல் மாகாண சபையொன்று கடன் எதுவும் திரட்ட முடியாது.

**22. மாகாண கருத்திட்டங்களுக்கு அந்நிய நாட்டு உதவி**

மாகாணமொன்றில், கருத்திட்டம் அல்லது திட்டம் ஒன்றுக்காவென அரசாங்கத்தினால் கலந்து பேசி முடிவு செய்யப்பட்ட அந்நிய நாட்டு உதவியானது, அத்தகைய கருத்திட்டத்துக்கு அல்லது திட்டத்திற்கு அரசாங்கத்தினால் குறித்தொதுக்கப்படுதல் வேண்டும்.

**23.** 1. கணக்காய்வு: மாகாணமொன்றின் மாகாண நிதியத்தினது கணக்காய்வுக்கும் கணக்குகளுக்கும் அரசியலமைப்பின் 154ஆம் உறுப்புரையானது ஏற்புடையதாதல் வேண்டும்.

2. மாகாணமொன்றினது மாகாண நிதியத்தின் கணக்குகள் தொடர்பிலான கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கையின் பிரதியொன்று, ஆளநரிடம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்: அவர், அதை மாகாண சபை முன் இடச்செய்வித்தல் வேண்டும்.

**24.** 1. நிதிசார் கருமங்கள் தொடர்பிலான நியதிச் சட்டங்கள் பற்றிய சிறப்பு நடவடிக்கை முறை: எவ்விடயம் தொடர்பில் நியதிச் சட்டங்கள் ஆக்குவதற்கு மாகாண சபைக்குத் தத்துவம் இருக்கின்றதோ, அத்தகைய ஏதேனும் விடயம் தொடர்பிலான நியதிச் சட்டமொன்றானது, பின்வரும் எவையேனும் கருமங்களுக்கு அத்தகைய நியதிச்சட்டம் ஏற்பாடு செய்தால், ஆளுநரின் விதப்புரையின் மீதன்றி, மாகாண சபையொன்றில் கொண்டுவரப்படுதலோ அல்லது முன்மொழியப்படுதலோ ஆகாது. அக்கருமங்களாவன:

(அ) வரியெதனையும் சுமத்துதல், ஒழித்தல், குறைத்தல், மாற்றுதல் அல்லது ஒழுங்குப்படுத்தல்.

(ஆ) மாகாணத்தின் நிருவாகம் தொடர்பில் பொறுப்பேற்கப்பட்ட அல்லது பொறுப்பேற்கப்பட வேண்டிய எவையேனும் நிதிக்கடப்பாடுகள் தொடர்பிலான சட்டத்தைத் திருத்துதல்.

(இ) மாகாணத்தின் மாகாண நிதியத்திலிருந்து பணங்களை ஒதுக்கீடு செய்தல்.

(ஈ) செலவினம் எதையும் மாகாணத்தின் மாகாண நிதியத்தின் மீது பொறுப்பாக்கப்பட்ட செலவினமென வெளிப்படுத்துதல் அல்லது அத்தகைய எதேனும் செலவினத் தொகையை அதிகரித்தல்.

(உ) மாகாணத்தின் மாகாண நிதியம் காரணமாகப் பணம் பெறுதல் அல்லது அத்தகைய பணத்தைக் கட்டுக்காப்பில் வைத்திருத்தல் அல்லது அதை வழங்குதல்.



2 நிதியச் சட்டம் ஒன்றானது, குற்றப்பணங்களை அல்லது வேறு பணவகையான தண்டனைகளைச் சுமத்துவதற்கு அல்லது உரிமங்களுக்கு அல்லது ஆற்றப்பட்ட சேவைகளுக்கு கட்டணங்கள் வேண்டிப் பெறுவதற்கு அல்லது செலுத்தப்படுவதற்கு அல்லது உள்ளூர் நோக்கங்களுக்காக ஏதேனும் உள்ளூர் அதிகார சபையினால் அல்லது குழுவினால் வரி எதுவும் சுமத்தப்படுவதற்கு, ஒழிக்கப்படுவதற்கு, குறைக்கப்படுவதற்கு அல்லது ஒழுங்குபடுத்தப்படுவதற்கு அது ஏற்பாடு செய்கின்றதென்ற காரணத்தினால் மட்டும், மேற்கூறப்பட்ட எவையேனும் கருமங்களுக்கு ஏற்பாடு செய்கின்றதென்று கருதப்படுதல் ஆகாது.

**25.** 1. வருடாந்த நிதிக்கூற்று: ஒவ்வொரு நிதியாண்டின் தொடர்பிலும், அத்துடன் அத்தகைய நிதியாண்டு முடிவுறுவதற்கு ஆகக்குறைந்தது ஐந்து மாதங்களுக்கு முன்னர், (இப்பாகத்தில் “வருடாந்த நிதிக்கூற்று” எனக் குறிப்பீடு செய்யப்படும்) அவ்வாண்டுக்கான மாகாணத்தின் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுகைகள், செலவினம் பற்றிய கூற்றொன்றை அம்மாகாணத்தின் மாகாண சபை முன் மாகாணமொன்றின் ஆளுநர் இடச் செய்வித்தல் வேண்டும்.

2. வருடாந்த நிதிக்கூற்றில் தரப்பட்டுள்ள செலவினத்தின் மதிப்பீடுகள் பின்வருவனவற்றைத் தனிவேறாகக் காட்டுதல் வேண்டும்.

(அ) மாகாணத்தின் மாகாண நிதியம் மீது பொறுப்பாக்கப்பட்ட செலவினமென இச்சட்டத்தினால் விவரணம் செய்யப்பட்ட செலவினத்தைச் சமாளிப்பதற்குத் தேவைப்பட்ட பணத்தொகைகள் அத்துடன்,

(ஆ) மாகாணத்தில் மாகாண நிதியத்திலிருந்து செய்யப்பட உத்தேசிக்கப்பட்டிருக்கின்ற வேறு செலவினத்தைச்

சமாளிப்பதற்குத் தேவைப்பட்ட பணந்தொகைகள், அத்துடன் அம்மதிப்பீடுகள் வருவாய்க் கணக்கு மீதான செலவினத்தை ஏனைய செலவினத்திலிருந்து வேறு பிரித்துக் காட்டுதல் வேண்டும்.

3. பின்வரும் செலவினமானது, மாகாணத்தின் மாகாண நிதியத்தின் மீது பொறுப்பாக்கப்பட்ட செலவினமாக இருத்தல் வேண்டும்.

(அ) ஆளுநரின் வேதனாதிகளும் படிகளும்

(ஆ) மாகாணம் தொடர்பில் வட்டி, கடன்தீர் நிதியில் இருந்தான கடன் குறைப்புக் கொடுப்பனவுகள், அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட வேறு செலவினம் என்பவற்றை உள்ளடக்குகின்றனவான இலங்கைத் திரட்டு நிதியத்தில் இருந்து முற்பணமாக வழங்கப்பட்ட கடன்கள் தொடர்பில் செலுத்தப்படற்பாலனவான விதிப்பனவுகளும்.

(இ) மாகாண சபைக்கு எதிராக வழங்கப்பட்ட ஏதேனும் நீதி மன்றத்தின் அல்லது நடுத்தீர்ப்பு நியாயசபையின் ஏதேனும் தீர்ப்பை, தீர்வையை அல்லது அளிப்பைத் திருப்திப்படுத்துவதற்குத் தேவைப்படுகின்ற எவையேனும் பணத்தொகைகள்.

(ஈ) அவ்வாறு பொறுப்பாக்கப்பட வேண்டுமென அரசியலமைப்பினால் அல்லது பாராளுமன்றத்தினால் ஆக்கப்படும் சட்டத்தினால் அல்லது மாகாண சபையினால் ஆக்கப்படும் நியதிச் சட்டத்தினால் வெளிப்படுத்தப்படுகின்ற வேறு ஏதேனும் செலவினம்.



**26.** 1. மதிப்பீடுகள் தொடர்பாக மாகாண சபையிலான நடவடிக்கைகள்: மாகாணத்தின் மாகாண நிதியத்தின் மீது பொறுப்பாக்கப்படும் செலவினம் தொடர்பான மதிப்பீடுகளுள் அத்தகையவை மாகாண சபையின் வாக்குக்குச் சமர்ப்பிக்கப்படுதலாகாது. ஆனால் இவ்வுட்பிரிவில் உள்ள எதுவும் இம்மதிப்பீடுகளில் எது பற்றியும் மாகாண சபையில் கலந்தாராய்வதனைத் தடுப்பதாகப் பொருள் கொள்ளப்படுதலாகாது.

2. வேறு செலவினத்துடன் தொடர்புள்ளனவான சொல்லப்பட்ட மதிப்பீடுகளுள் அத்தகையவை மாகாண சபைக்கான மானியக் கொடைக்காய கோரிக்கைகள் என்ற வடிவத்தில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அத்துடன் ஏதேனும் கோரிக்கைக்கு இசைவதற்கு, அல்லது இசைய மறுப்பதற்கு, அல்லது அதில் குறித்துரைக்கப்பட்ட தொகையின் குறைப்பொன்றிற்கு அமைய ஏதேனும் கோரிக்கைக்கு இசைவதற்கு மாகாண சபைக்குத் தத்துவம் இருத்தல் வேண்டும்.

3. மானியக் கொடைக்கான கோரிக்கை எதுவும் ஆளுநரின் விதப்புரையின் மீதல்லாது செய்யப்படுதலாகாது.

**27.** 1. ஒதுக்கீட்டு நியதிச்சட்டம்: சபையினால் 26ஆம் பிரிவின் கீழான மானியக் கொடைகளுக்கு இசைவரிக்கப்பட்ட பின்னர் முடிந்தளவு விரைவாக, மாகாணத்தின் மாகாண நிதியத்திலிருந்து-

(அ) மாகாண சபையினால் அவ்வாறு செய்யப்பட்ட மானியக் கொடைகளை, அத்துடன்

(ஆ)மாகாணத்தின் மாகாண நிதியத்தின் மீது பொறுப்பாக்கப்பட்ட ஆனால் சபையின் பின்பு முன்னரே வைக்கப்பட்ட கூற்றில்காட்டப்பட்ட தொகையை எச்சந்தர்ப்பத்திலும் விஞ்சாத செவினத்தை ஈடு செய்யத் தேவையான எல்லாப் பணங்களின் ஒதுக்கீட்டிற்கு ஏற்பாடு செய்வதற்கான நியதிச் சட்டமொன்று அங்கு கொணரப்படுதல் வேண்டும்.

2. அவ்வாறு செய்யப்பட்ட ஏதேனும் மானியக் கொடையின் தொகையை வேறுபடுத்துகின்ற அல்லது அம்மானியக் கொடையின் சேரிடத்தை மாற்றம் செய்கின்ற அல்லது மாகாணத்தின் மாகாண நிதியத்தின் மீது பொறுப்பாக்கப்பட்ட ஏதேனும் செலவினத்தின் தொகையை வேறுபடுத்துகின்ற பயனைக் கொண்டுள்ள ஏதேனும் அத்தகைய நியதிச் சட்டத்திற்குத் திருத்தமெதுவும் மாகாண சபையில் முன்மொழியப்படுதலாகாது: அத்துடன் இவ்வுட்பிரிவின் கீழ் திருத்தமொன்று ஏற்கத்தக்கதல்லாதது என்ற தலைமை தாங்கும் ஆளின் முடிவு இறுதியாக இருத்தல் வேண்டும்.

3. இச்சட்டத்தின் ஏனைய ஏற்பாடுகளுக்கு அமைய, இப்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்கச் செய்யப்பட்ட ஒதுக்கீட்டின் கீழ் அல்லாது மாகாணத்தின் மாகாண நிதியத்திலிருந்து பணமெதுவும் மீளப் பெறப்படுதலாகாது.

**28.** 1. ஆளுநர்:

(அ) குறைநிரப்பு மானியக் கொடைகள்: இருபத்தேழாம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்கச் செய்யப்பட்ட ஏதேனும் நியதிச் சட்டத்தினால் நடப்பு நிதியாண்டிற்கான குறிப்பிட்ட ஒரு சேவைக்கெனச் செலவிடப்பட வேண்டுமென அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் தொகை அவ்வாண்டின் நோக்கங்களுக்கென போதியதாக இல்லாதிருக்கக் காணப்பட்டால் அல்லது அவ்வாண்டுக்கென ஆண்டு நிதிக் கூற்றில் சிந்திக்கப்படாத ஒரு புதிய சேவைமீதான குறைநிரப்பு அல்லது மேலதிக செலவினத்திற்கென நடப்பு நிதியாண்டின் காலத்தில் தேவையொன்று எழுந்திருக்கும் போது அல்லது

(ஆ)அச்சேவைக்கெனவும் அவ்வாண்டுக்கெனவும் வழங்கப்பட்ட தொகையை விஞ்சி ஒரு நிதியாண்டுக் காலத்தில் ஏதேனும் சேவையின் மீது ஏதேனும் பணம் செலவிடப்பட்டிருப்பின், அச்செலவினத்தின் மதிப்பீடு செய்யப்பட்ட தொகையைக் காட்டுகின்ற வேறொரு கூற்றை மாகாண சபையின் முன்னர் வைக்கப்படுவதற்குச் செய்வித்தல் வேண்டும் அல்லது விடயத்திற்கேற்ப அத்தகைய விஞ்சுகைக்கான கோரிக்கையொன்றை அத்தகைய முன்னைய அங்கீகாரத்துடன் மாகாண சபைக்கு அளிக்கச் செய்வித்தல் வேண்டும்.



2. இருப்பத்தைந்தாம், 26ஆம், 27ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகள், ஏதேனும் அத்தகைய கூற்று அத்துடன் செலவினம் அல்லது கோரிக்கை தொடர்பிலும் அத்தகைய செலவினத்தை ஈடுசெய்வதற்கு மாகாணத்தின் மாகாண நிதியத்திலிருந்து பணங்களை ஒதுக்கீடு செய்வதற்கு அல்லது அத்தகைய கோரிக்கை தொடர்பில் மானியக் கொடைக்கு, அவை அதன்கண் குறிப்பிடப்பட்ட ஆண்டு நிதிக் கூற்று அத்துடன் செலவினம் என்பன தொடர்பில் பயனுறுகின்றவாறு அதிகாரமளித்து ஆக்கப்படவுள்ள ஏதேனும் நியதிச்சட்டம் தொடர்பாகவும், அல்லது மானியக்கொடை ஒன்றுக்கான கோரிக்கை தொடர்பாகவும் அத்துடன் அத்தகைய செலவினத்தை அல்லது மானியக்கொடையை ஈடுசெய்வதற்கு மாகாணத்தின் மாகாண நிதியத்திலிருந்து பணங்களின் ஒதுக்கீட்டிற்கு

அதிகாரமளிப்பதற்கென ஆக்கப்படவுள்ள நியதிச் சட்டம் தொடர்பாகவும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

**29.** 1. கணக்குகள் மீதான வாக்குப் பணங்கள்: இப்பாகத்தின் முற்போந்த ஏற்பாட்டில் உள்ளது எது எப்படி இருப்பினும் மானியக்கொடை அளிக்கப்பட்டு நாலு மாத காலத்தினுள் அத்தகைய செலவினம் தொடர்பில் 27ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க நியதிச் சட்டங்களை நிறைவேற்றுவதற்கும் அத்தகைய மானியக் கொடைகளின் வாக்களிப்புக்கென 26ஆம் பிரிவில் விதித்துரைக்கப்பட்ட நடைமுறையைப் பூர்த்தி செய்வதைப் பொறுத்து ஏதேனும் நிதியாண்டின் ஒரு பாகத்திற்கென மதிப்பிடப்பட்ட செலவினத்தின் தொடர்பாக ஏதேனும் மானியக் கொடையை முன்னரே வழங்குவதற்கு மாகாண சபைக்குத் தத்துவமிருத்தல் வேண்டும். அத்துடன் சொல்லப்பட்ட மானியக் கொடை எந்நோக்கங்களுக்கென அளிக்கப்பட்டதோ அந்நோக்கங்களுக்கென மாகாணத்தின் மாகாண நிதியத்திலிருந்து பணத்தை மீளப் பெறுதற்கு நியதிச் சட்டம் மூலம் அதிகாரமளிப்பதற்கு மாகாண சபைக்குத் தத்துவம் இருத்தல் வேண்டும்.

2. இருபத்தாறாம், 27ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகள் (1)ஆம் உட்பிரிவின் கீழ் ஏதேனும் மானியக் கொடையை அளித்தல் தொடர்பாக அல்லது ஆண்டு நிதிக் கூற்றில் குறிப்பிடப்பட்ட ஏதேனும் செலவு தொடர்பாக மானியக் கொடையொன்றை அளிப்பது தொடர்பாக அவை பயனுடையதாக இருக்கின்றவாறாக அவ்வுட்பிரிவின் கீழ் ஆக்கப்பட வேண்டிய நிதிச் சட்டம் தொடர்பாகவும் அத்தகைய செலவை ஈடுசெய்வதற்கு மாகாணத்தின் மாகாண நிதியத்திலிருந்து பணத்தினை ஒதுக்கீடு செய்வதற்கு அதிகாரமளிப்பதற்கென ஆக்கப்பட வேண்டிய நியதிச் சட்டம் தொடர்பாகவும் பயனுடையனவாதல் வேண்டும்.



**30.** 1. சபையின் அனுமதியைப் பொறுத்து செலவினத்திற்கு அதிகாரமளித்தல்: இப்பாகத்தின் முப்போந்த ஏற்பாடுகளில் உள்ள எதுவும் எப்படி இருப்பினும், மாகாண சபையினால் அத்தகைய செலவினத்தின் அனுமதியைப் பொறுத்து, மாகாணத்தின் மாகாண நிதியத்தின் அமைப்புத் தேதி தொடக்கம் ஆறு மாதங்களுக்கு மேற்படாத ஒரு காலத்திற்குத் தேவையென அவர் கருதுகின்றவாறாக, மாகாணத்தின் மாகாண நிதியத்தில் இருந்து அத்தகைய செலவை ஆளுநர் அதிகாரமளிக்கலாம்.

**பாகம் ஐஏ**

**மாகாணப் பகிரங்க சேவை ஆணைக்குழு**

**31.** 1. பிரதான செயலாளர்: ஜனாதிபதியானவர் அம்மாகாணத்தின் பிரதான அமைச்சரின் ஒருப்பாட்டுடன்ஒவ்வொரு மாகாணத்திற்கும் பிரதான செயலாளரை நியமித்தல் வேண்டும்.

**32.** 1. மாகாணப் பகிரங்க சேவை: வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக, ஒவ்வொரு மாகாணத்தினதும் மாகாணப் பகிரங்க சேவையின் அலுவலர்களின் நியமனம், இடமாற்றம், பதவி நீக்கம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு என்பன இத்தால் மாகாண ஆளுநருக்கு உரித்தாக்கப்படுகின்றன.

2. ஒரு மாகாணத்தின் ஆளுநர், காலத்திற்குக் காலம் மாகாணப் பகிரங்க சேவையின் அலுவலர்களின் நியமனம், இடமாற்றம், பதவிநீக்கம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு ஆகிய அவரது தத்துவங்களை

அம்மாகாணத்தின் மாகாண பகிரங்க சேவை ஆணைக்குழுவிற்குக் கையளிக்கலாம்.

3. ஆட்சேர்த்தல் செயல்திட்டங்களையும் அத்தகைய அலுவல்களுக்கான நடத்தைக் கோவைகளையும் பதவியேற்றங்களையும் இடமாற்றங்களையும் செய்யும் போது பின்பற்றப்பட வேண்டிய நெறிகளையும் அத்தகைய அலுவலர்களின் நியமன, இடமாற்ற, பதவி நீக்க, ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டுத் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கும் கையளிப்பதற்குமான நடவடிக்கை முறைகளை வகுப்பாக்கம் செய்தல் உட்பட மாகாணப் பகிரங்க சேவையின் அலுவலர்கள் தொடர்பான எல்லாக் கருமங்களுக்கும் ஆளுநர் ஏற்பாடு செய்தல் வேண்டும் என்பதுடன், அவற்றைத் தீர்மானித்தலும் வேண்டும். அத்தகைய ஆட்சேர்த்தல் செயல் திட்டங்களையும், நடத்தைக் கோவைகளையும் வகுப்பாக்கம் செய்கையில் ஆளுநர் சாத்தியமாகக்கூடியவாறு பகிரங் சேவையிலுள்ள நேரொத்த அலுவலர்களுக்கு விதித்துரைத்த ஆட்சேர்த்தல் செயல் திட்டங்களையும் பகிரங்க சேவையில் நேரொத்த பதவிகளை வகிக்கும் விதித்துரைக்கப்பட்ட நடத்தைக் கோவைகளையும் பின்பற்றுதல் வேண்டும்.

**33.**

1. மாகாணப் பகிரங்க சேவை ஆணைக்குழு: ஒவ்வொரு மாகாணத்திற்கும் மாகாணப் பகிரங்க சேவை ஆணைக்குழு ஒன்று இருத்தல் வேண்டும். இம்மாகாணப் பகிரங்க சேவை ஆணைக்குழு அம்மாகாணத்தின் ஆளுநரால் நியமிக்கப்பட்ட மூன்று ஆட்களுக்குக் குறையாத ஆட்களைக் கொண்டிருத்தல் வேண்டும். ஆளுநர் ஆணைக்குழுக்களின் உறுப்பினர்களில் ஒருவரைப் பெயர் குறித்து தவிசாளராக நியமித்தல் வேண்டும்.



2. பாராளுமன்ற உறுப்பினர் ஒருவராக, மாகாண சபை உறுப்பினர் ஒருவராக, பகிரங்க அலுவலர் ஒருவராக, நீதிமுறை அலுவலர் ஒருவராக அல்லது ஒரு மாகாணப் பகிரங்க சேவையின் அலுவலராக இருக்கும் எந்த ஆளும் ஒரு மாகாண பகிரங்க சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவராக நியமிக்கப்படுதலோ அல்லது ஒரு மாகாணப் பகிரங்க சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவராகத் தொடர்ந்து இருத்தலோ ஆகாது.

3. ஒரு மாகாணப் பகிரங்க சேவை ஆணைக்குழுவின் ஒவ்வோர் உறுப்பினரும், மாகாணத்தில் ஆளுநருக்கு முகவரியிடப்பட்டு தமது கைப்பட எழுதப்பட்ட ஒரு கடிதம் மூலம் தமது பதவிலிருந்து முன்னரே விலகினாரன்றி அல்லது குறித்த காரணத்துக்காக அத்தகைய ஆளுநரினால் பதவிலிருந்து அகற்றப்பட்டாலன்றி தனது நியமனத்தேதியிலிருந்து ஐந்தாண்டு காலமொன்றுக்குப் பதவி வகித்தல் வேண்டும். ஆனால் அவர் மீள் நியமனத்திற்குத் தகவுடையவராதல் வேண்டும்.

4. ஆளுநர், ஒரு மாகாண பகிரங்க சேவை ஆணைக்குழுவின் எவரேனும் உறுப்பினருக்கு அவரது கடமையிலிருந்து லீவு அளிக்கலாம். அத்துடன் அத்தகைய லீவுக் காலத்திற்கெனத் தற்காலிக ஓர் உறுப்பினராக இருப்பதற்கென அத்தகைய ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவராக இருப்பதற்கு தகைமை பெற்ற ஓர் ஆளை நியமிக்கலாம்.

5. ஒரு மாகாணப் பகிரங்க சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவருக்கு அம்மாகாணத்திற்கென மாகாண சபையினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய சம்பளம் செலுத்தப்படலாம். எவரேனும் அத்தகைய உறுப்பினருக்குச் செலுத்தப்படற்பாலதான சம்பளம் மாகாணத்தின் மாகாண நிதியத்தின் மீது

பொறுப்பாக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அவரது பதவிக்காலத்தின் போது அது குறைக்கப்படுதலுமாகாது.

6. ஒரு மாகாணப் பகிரங்க சேவை அணைக்குழு, அதன் உறுப்பாண்மையில் ஏதேனும் வெற்றிடம் இருப்பது எப்படியிருப்பினும், செயற்படுவதற்குத் தத்துவமுடையதாதல் வேண்டும். அத்துடன் அத்தகைய ஆணைக்குழுவின் செயல் எதுவும் அல்லது நடவடிக்கைகள் ஏதேனும் அத்தகையை வெற்றிடம் அல்லது ஓர் உறுப்பினரின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு காரணமாக மாத்திரம் செல்லுபடியற்றதாக மாட்டாது அல்லது செல்லுபடியற்றதாகக் கருதப்பட மாட்டாது.

7. தண்டனைச் சட்டக் கோவையின் ஐஓஆம் அத்தியாயத்தின் நோக்கங்களுக்காக ஒரு மாகாணப் பகிரங்க சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர் பகிரங்கச் சேவையாளர் ஒருவராகக் கருதப்படுதல் வேண்டும்.

8. ஒரு மாகாணத்தின் ஆளுநருக்கு ஏதேனும் நியமனத்தை, இடமாற்றக் கட்டளையை அல்லது பதவி நீக்கத்தை அல்லது அம்மாகாணத்தின்
மாகாணப் பகிரங்கச் சேவை ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட ஓர் ஒழுக்காற்றுக் கருமம் தொடர்பான ஏதேனும் வேறு கட்டளையை மாற்றுவதற்கு, வேறுபடுத்துவதற்கு அல்லது நீக்குவதற்குத் தத்துவம் இருத்தல் வேண்டும்.

**34.**

கடமையின் போது அல்லாது நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அவராக அல்லது எவரேனும் வேறு ஆள் மூலம், எவ்விதத்திலாயினுஞ்சரி, ஒரு மாகாணப் பகிரங்க சேவை ஆணைக்குழுவின் ஏதேனும் முடிவின் மீது அல்லது



அதன் எவரேனும் உறுப்பினரின் மீது செல்வாக்கைப் பிரயோகிக்க முயல்கின்ற ஒவ்வோர் ஆளும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், யூரர் சபை இல்லாத விளக்கத்தின் பின்னர் மேல் நீதிமன்றத்தால் குற்றத் தீர்ப்பு அளிக்கப்பட்டதன் மீது ஆயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணம் ஒன்றுக்கு அல்லது ஓராண்டுக்கு மேற்படாத காலமொன்றுக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும். ஆயின், இப்பிரிவிலுள்ள எதுவும் மாகாணப் பகிரங்கசேவையில் உள்ள ஏதேனும் பதவிக்கான எவரேனும் விண்ணப்பக்காரருக்கு அல்லது வேட்பாளருக்கு ஒரு நற்சான்றிதழ் அல்லது சான்றிதழொன்றைக் கொடுப்பதிலிருந்து எவரேனும் ஆளைத் தடை செய்யதலாகாது.

**35.**

1. சத்தியம் அல்லது உறுதியுரை: மாகாணப் பகிரங்க சேவையில் ஏதேனும் பதவியில் நியமிக்கப்பட்ட ஆள் ஒருவர், அரசியலமைப்பின் நாலாவது அட்டவணையில் எடுத்துக்காட்டப்பட்ட சத்தியத்தை அவர் செய்து கீழொப்பம் வைக்கும் வரை அல்லது உறுதியுரையை மொழிந்து கீழொப்பம் வைக்கும்வரை அவரின் பதவியில் கடமைகளை புரிய முற்படுதலாகாது.

**36.**

1. இடர்பாடுகளை அகற்றுவதற்கு ஜனாதிபதிக்குள்ள தத்துவம்: இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்குக் குறிப்பாக ஒரு மாகாணத்திற்கான ஓர் மாகாண சபையின் அமைப்புத் தொடர்பாகப் பயனளிப்பதில் இடர்பாடு ஏதும் எழுந்தால் ஜனாதிபதியானவர், கட்டளை மூலம் அத்தகைய இடர்பாடுகளை அகற்றும் நோக்கங்களுக்கென அவசியமென அல்லது உசிதமென அவருக்குத் தோற்றுகின்றவாறு இச்சட்டத்தின்ஏற்பாடுகளுடன் இசைவற்றதாகவிராத அத்தகைய நடவடிக்கையை எடுக்கலாம்.

**37.**

1. (அ) இடைக்கால ஏற்பாடு:

ஜனாதிபதியானவர் பிரகடனம் மூலம் இப்பந்தியின் ஏற்பாடுகள் அத்தகைய பிரகடனத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள அடுத்திணைந்த எவையேனும் இரண்டு அல்லது மூன்று மாகாணங்களுக்கு (இதனகத்துப் பின்னர் "குறித்துரைக்கப்பட்ட மாகாணங்கள்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஏற்புடையனவாதல் வேண்டும் என வெளிப்படுத்தலாம். அத்துடன், அதன் பின்னர், அத்தகைய மாகாண சபைக்கான முதல் தேர்தல் தேதி தொடங்கி இப்பிரிவின் (2)ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள வாக்களிப்புத் தேதியன்று முடிவடைகின்ற அல்லது அத்தகைய வாசிப்பு ஒன்றுக்கு மேற்பட்ட தேதிகள் நிர்ணயிக்கப்பட்டிருந்தால், அத்தகைய தேதிகளில் கடைசித் தேதியன்று முடிவடைகின்ற காலப்பகுதிக்கு, தெரிவு செய்யப்பட்ட ஒரு மாகாண சபையை, ஓர் ஆளுநரை, ஒரு பிரதான அமைச்சரை அத்துடன் அமைச்சர்கள் சபையொன்றைக் கொண்டிருக்கின்ற ஒரு நிருவாகப் பிரிவினையை அத்தகைய மாகாணங்கள் அமைக்கலாம்.

(ஆ)ஜனாதிபதியானவர், தனி நாடொன்றைத் தாபிப்பதையே நம்முடைய குறிக்கோளாகக் கொண்ட பயங்கரவாத, தீவிரவாத அல்லது வேறு குழுக்களினால் 1987ஆம் ஆண்டு யூலை 29ஆம் தேதியன்று வைத்திருக்கப்பட்டிருந்த படைக்கலங்கள், வெடிமருந்து, ஆயுதங்கள், வெடிபொருட்கள் அத்துடன் வேறு இராணுவ உபகரணம் ஆகியவை இலங்கை அரசாங்கத்திடம் அல்லது அதனால் நியமிக்கப்பட்ட அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டன என்றும், அத்துடன் சொல்லப்பட்ட மாகாணங்களில் அத்தகைய குழுக்களினால் போர் நடவடிக்கைகளும் வேறு வன்செயல்களும் நிறுத்தப்பட்டு விட்டனவென்றும் அவர் தம்மைத் திருப்திப்படுத்தினாலொழிய,



(1) (அ) என்னும் உட்பந்தியின் ஏற்பாடுகள் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு ஏற்புடையனவாகும் என வெளிப்படுத்தி பிரகடனமொன்றை ஆக்குதல் ஆகாது.

2.(அ) உட்பந்தி (1) என்பதன் ஏற்பாடுகளின் கீழ் பிரகடனமொன்று செய்யப்படுகின்றவிடத்து, குறித்துரைக்கப்பட்ட ஒவ்வொரு மாகாணத்திலும் வாக்களிப்பொன்று நடாத்தப்பட வேண்டுமெனக் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் ஜனாதிபதி தேவைப்படுத்துதல் வேண்டும். அத்துடன், அத்தகைய ஒவ்வொரு குறித்துரைக்கப்பட்ட மாகாணத்தின் வாக்காளர்கள் பின்வருவன பற்றித் தீர்மானிப்பதை இயலச் செய்வதற்கு, அத்தகைய வாக்களிப்புக்கென 1988ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 31ஆம் நாளுக்குப் பிந்தாத ஒரு தேதியை அல்லது தேதிகளை நிர்ணயித்தல் வேண்டும். ஒரே நிருவாகப் பிரிவாக, வேறு குறித்துரைக்கப்பட்ட மாகாணத்தோடு அல்லது மாகாணங்களோடு அத்தகைய மாகாணம் இணைக்கப்பட்டு அத்தகைய மாகாணத்தோடு அல்லது மாகாணங்களோடு சேர்ந்து தொடர்ந்தாளப்பட வேண்டுமா என்பது பற்றி, அல்லது அத்தகைய மாகாணமானது, தனி வேறான ஆளுநர் ஒருவரையும், பிரதான அமைச்சர் ஒருவரையும் அமைச்சர்கள் சபை ஒன்றையும் கொண்டிருக்கின்றதும், அதற்குப் பிரத்தியேகமாகத் தனியான மாகாண சபையை உடையதுமான தனிவேறான நிருவாகப் பிரிவொன்றை அமைத்துக்கொள்ள வேண்டுமா என்பது பற்றி.

(ஆ) ஜனாதிபதியானவர் தமது தற்றுணிபின் பேரில், காலத்துக்குக் காலம் கசெற்றில் வெளியிடப்படும் அடுத்தும் கட்டளைகள் மூலம் அத்தகைய வாக்கெடுப்புத் தேதியை அல்லது தேதிகளைப் பின் போடலாம்.

3. அத்தகைய குறித்துரைக்கப்பட்ட ஒவ்வொரு மாகாணத்திலும் நடாத்தப்படுகின்ற வாக்கெடுப்பின் போது, அத்தகைய ஒவ்வொரு மாகாணத்திலும் வாக்காளர்களின் முடிவானது அத்தகைய மாகாணம் மற்றைய அத்தகைய குறித்துரைக்கப்பட்ட மாகாணத்துடன் அல்லது மாகாணங்களுடன் இணைத்தே இருக்க வேண்டுமென இருக்கின்றவிடத்து, அத்தகைய குறித்துரைக்கப்பட்ட மாகாணங்கள், தெரிவு செய்யப்பட்ட ஒரு மாகாணசபை, ஓர் ஆளுநர், ஒரு பிரதான அமைச்சர் அத்துடன் அமைச்சர்கள் சபையொன்றைக் கொண்டிருக்கின்ற ஒரு நிருவாகப் பிரிவைத் தொடர்ந்தும் அமைத்தல் வேண்டும். அத்துடன், மாகாண சபைகள் தொடர்பிலான எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகள், குறித்துரைக்கப்பட்ட மாகாணங்கள் ஒரே மாகாணமாக இருக்கின்றாற்போன்று பொருள் கொள்ளப்படுதல் வேண்டும். ஆயின், கிழக்கு மாகாணத்தில் அத்தகைய வாக்கெடுப்பொன்றில் அத்தகைய மாகாணத்தின் வாக்காளர்களின் முடிவானது. அத்தகைய மாகாணமானது வடமாகாணத்துடன் தொடர்ந்தும் இணைந்திருக்க வேண்டுமென இருந்தால், வடக்கு மாகாணத்தில் வாக்கெடுப்பொன்று நடாத்தத் தேவையில்லை. அத்துடன் அதற்கிணங்க அத்தகைய மாகாணங்கள் தெரிவு செய்யப்பட்ட மாகாண சபையொன்றையும், ஓர் ஆளுநரையும் ஒரு பிரதான அமைச்சரையும், அமைச்சர்கள் சபை ஒன்றையும் கொண்டதான ஒரு நிருவாகப் பிரிவை அமைத்தல் வேண்டும்.

4.

(அ) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாகாணங்கள் அத்தகைய பிரகடனத்தில் குறிக்கப்பட்டிருந்த, அத்தகைய மாகாணமொன்றின் வாக்காளர்களின் முடிபானது, அத்தகைய மாகாணமானது அதற்குரிய தனியான மாகாணசபை, தனி ஆளுநர், ஒரு பிரதான அமைச்சர், அமைச்சர்கள் சபை என்பனவற்றோடு கூடிய தனிவேறான நிருவாகப் பிரிவொன்றாக அமைதல் வேண்டுமென்றிருந்தால், பிரகடனத்தில் குறித்துரைக்கப்பட்ட மாகாணங்கள் ஒரு நிருவாகப் பிரிவாக அமைவதை உடனடியாக விட்டொழிதல் வேண்டும். அத்துடன் தனிவேறான ஆளுநர் ஒரு பிரதான அமைச்சர், அமைச்சர்கள் சபை என்பவற்றோடு கூடிய தனி வேறான மாகாண சபைகள், அத்தகைய வாக்கெடுப்பின் பெறுபேறு வெளிப்படுத்தப்பட்ட தேதியிலிருந்து அத்தகைய ஒவ்வொரு மாகாணத்துக்கும் தாபிக்கப்பட்டு விட்டதாகவும், அமைக்கப்பட்டு விட்டதாகவும் கருதப்படுதல் வேண்டும். அத்துடன் ஜனாதிபதி, அதன் பின்னர், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம், குறித்துரைக்கப்பட்ட மற்றைய மாகாணத்தில் அல்லது மாகாணங்களில், அத்தகைய வாக்கெடுப்பு ஏற்கெனவே நடாத்தப்பட்டிருக்காவிடின், வாக்கெடுப்பை இல்லாதாக்கல் வேண்டும்.



(ஆ) ஜனாதிபதி கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய மாகாண சபைகளின் ஆதனத்தைப் பகிர்ந்தளிப்பதற்கும் அத்தகைய மாகாணங்கள் ஒரு நிருவாகப் பிரிவாக அமைந்திருந்த காலப்பகுதியின் போது, அத்தகைய மாகாணங்களின் அலுவல்கள், சேவையாளர்கள் தொடர்பிலும், அத்தகைய மாகாணங்களால் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் தொடர்பிலும், அத்தகைய மாகாணங்களினாலும், அவற்றுக்கு எதிராகவும் தொடுக்கப்பட்ட வழக்கு நடவடிக்கைகள் தொடர்பிலும் அவசியமாகக் கூடியவாறான அத்தகைய ஏற்பாட்டை ஆக்கலாம்.

5. அத்தகைய வாக்கெடுப்பு, தேர்தல் ஆணையாளரினால் நடாத்தப்படுதல் வேண்டும். அத்துடன், அத்தகைய வாக்கெடுப்பு நடாத்துவது தொடர்பிலான எல்லாக் கருமங்களுக்கும் ஏற்பாடு செய்கின்ற ஒழுங்கு விதிகளைச் ஜனாதிபதி இப்பந்தியின் கீழ் ஆக்கலாம்.

6. மாகாணமொன்றின் வாக்காளர்கள், அத்தகைய வாக்கெடுப்பில் அளிக்கப்பட்ட செல்லுபடியுடைய வாக்குகளில் முழுப்பெரும்பான்மையுடன் பிரேரணையொன்று அங்கீகரிக்கப்பட்டிருந்தால் அத்தகைய வாக்கெடுப்பில் சமர்ப்பிக்கப்பட்ட அத்தகைய பிரேரணைக்கு ஆதரவாக அத்தகைய வாக்காளர்கள் முடிவு செய்திருக்கிறார்களென்று கருதப்படுதல் வேண்டும்.

7. அத்தகைய ஒவ்வொரு வாக்கெடுப்பும் பிரதம நீதியரசரைத் தவிசாளராகக் கொண்டிருக்கும் மூன்று ஆட்கள் கொண்ட (மற்ற இருவரும் ஜனாதிபதியினால் நியமிக்கப்படுவர்) குழுவொன்றினால் கண்காணிக்கப்படும். இக்குழு ஜனாதிபதிக்கு அறிக்கை சமர்ப்பிப்பர்.
பாராளுமன்றத்தின் சட்ட மூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா.150, (வெளிநாடு) ரூபா.200. ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சர் அரசாங்க வெளியீட்டலுவலகம் கொழும்பு என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.



# திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க ஜனாதிபதித் தேர்தலுக்கென முன்வைத்த அதிகாரப் பகிர்வு வேலைத் திட்டம் - 1988



ஸ்ரீ.ல.சு.க., மக்கள் ஐக்கிய முன்னணி (MEP) ஸ்ரீ.ல.முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் ஒருங்கிணைந்து ஜனநாயக மக்கள் கூட்டமைப்பை உருவாக்கின. (24.11.1988)

மேற்படி ஜனநாயக மக்கள் கூட்டமைப்பு அதிகாரப் பகிர்வை ஏற்றுக்கொண்டது

- வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு அம்பாறை மாவட்டத்தை உள்ளடக்கிய முஸ்லிம் அலகு,

- அனைத்து அலகுகளிலும் வாழும் சகல தனிநபர்களினதும் உரிமைகள் பூரண சமத்துவத்தின் கீழ் அங்கீகரித்தல்,
- மத்திய அரசாங்கத்திற்கும் மாகாண அலகுகளுக்கும் தனித்தனி விடயப் பரப்புக்கள்

  ஒதுக்கப்படும்,
- பிரஜா உரிமை தொடர்பான தடைகள் நீக்கப்படும்.
- பிராந்தீய பொலிஸ் திணைக்களம் பிராந்தீய இனத்துவ விகிதாசாரத்திற்கு அமைய நிறுவப்படும்.
- சிங்களமும் தமிழும் அரசகரும மொழிகளாகும். ஆங்கிலம் தேசிய மொழியாகும்.



# தமிழீழ விடுதலைப் புலிகள் முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி கூட்டறிக்கை - 1988

டாக்டர் அல்ஹாஜ் பதியுத்தீன் மஹ்முத் அவர்களது தலைமையில் இலங்கையில் இருந்து வருகை தந்த முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணிப் பிரமுகர்களுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளுக்குமிடையே சென்னையில் 1988 ஏப்ரல் 15, 16, 19ம் திகதிகளில் நடைப்பெற்ற கலந்துரையாடல்களின் போது, பின்வரும் விடையங்கள் ஆராயப்பட்டதில் இருதரப்புக்குமிடையே கொள்கைகள் ஒத்ததாக இருந்ததென்பதை அறியக்கூடியதாக இருந்தது.

1. இலங்கை வாழ் முஸ்லிம்கள் தமிழ் மொழியைப் பேசுபவர்களாக இருப்பினும் அவர்கள் வேறுபட்ட தனித்துவத்தைக் கொண்ட தமிழ்த் தேசியத்தினுள் உள்ள ஒரு தனி இனக்குழு என்பதனையும், வடக்கு - கிழக்கு மாகாணம் ஏனைய தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய தாயகமாக உள்ளது போலவே முஸ்லிம்களதும் பாரம்பரிய தாயகமாக உள்ளது என்பதையும் ஏற்றுக் கொள்கிறோம்.

2. வடக்கு - கிழக்கு ஒன்றிணைந்த தாயகத்தில் வாழும் தமிழர்களும் முஸ்லிம்களும் ஐக்கியத்துடனும் சமாதானத்துடனும் வாழ வேண்டும் என்பதனையும், முஸ்லிம்கள் இப்பிரதேசங்களில் சிறுபான்மையினராக வாழுகின்ற காரணத்தினால் அவர்கள் அச்சம், பயம், சந்தகமற்று வாழவேண்டியதும் முக்கியமாகையால் அவர்களது பாதுகாப்பையும், சமமான உரிமைகளையும்,

சுதந்திரத்தையும் உத்தரவாதப்படுத்த வேண்டியது அவசியம் என்று உணரப்படுவது மாத்திரமன்றி கொள்கையும் என்பதால் முஸ்லிம்கள் அச்சம், சந்தேகம், பயமற்று வாழ்வதற்கான சூழ்நிலைகள் உடனடியாக ஏற்படுத்துவதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது முழு ஒத்துழைப்பையும் வழங்குவர் என்பதையும், முஸ்லிம்கள் பாதுகாப்புடன் வாழ்வதற்கு எதிர்பார்க்கப்படும் முழு உத்தரவாதமும் சட்ட ரீதியாக வழங்கப்பட வேண்டும் என்பதையும் ஏற்றுக் கொள்கிறோம்.

3. தாயகத்தில் முஸ்லிம் மக்களின் நலன்கள் பாதுகாக்கப்படும் எனவும் தாயகத்தில் உரிமைகளை வென்றெடுப்பதற்காக முஸ்லிம் மக்கள் ஏனைய தமிழ் பேசும் மக்களுடன் பெருமளவு இணைவதன் மூலமாகத்தான் தமது மண்ணையும், கலாசாரத்தையும் காப்பாற்ற முடியும் என்பதையும், முஸ்லிம் மக்களின் நலனுக்காக, தமிழீழ விடுதலைப் புலிகளின் தொடர்ச்சியாக பாடுபட்டு வருவார்கள் என்பதும் உறுதியாக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

4. முஸ்லிம்களினதும், ஏனைய தமிழ் பேசும் மக்களினதும், அபிலாசைகள் பாதிக்கப்படாத வகையிலும் இந்திய - இலங்கை ஒப்பந்தம் முழுமையாக அமுலாக்கப்படுவதற்கு தமிழீழ விடுதலைப் புலிகளும் முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணியும் ஒத்துழைப்பு வழங்குவர்.

5. மாகாண சபைகள் 13வது அரசியல் சட்டத் திருத்தம் முஸ்லிம் மக்களினதும், ஏனைய தமிழ் பேசும் மக்களினதும் அடிப்படை அரசியல் அபிலாசைகளை பூர்த்தி செய்யவில்லை. இச் சட்டத்திருத்தம் இந்திய - இலங்கை உடன்பாட்டிற்கு முரணான வகையிலும் சட்டமாக்கப்பட்டுள்ளது. மேலும் 13வது சட்டத் திருத்தத்தினுள் உள்ளடக்கிய சில சரத்துக்களும், இந்திய - இலங்கை உடன்பாட்டிற்கு முரணானதாக உள்ளது.



இந்நிலையில் 13வது அரசியல் திருத்தச் சட்டத்தை ஏற்றுக் கொள்ள முடியாது.

6. முஸ்லிம் மக்களினது உரிமைகளைப் பாதுகாக்கவும், ஆட்சி அதிகாரங்களை நியாயமான முறையில் பகிர்ந்து கொள்ளவும் கூடிய ஏற்பாடுகளைச் செய்யும் போது அத்தகைய நடவடிக்கைகள் தமிழ் பேசும் மக்களின் தாயகத்தின் ஒருமைப்பாட்டிற்கு பாரதூரமான குந்தகம் எதுவும் ஏற்படுத்தக் கூடாது.

7. மேற்கூறியதன் அடிப்படையில் வடக்கு-கிழக்கு மாகாண சபையில் ஏனைய தமிழ் பேசும் மக்களுக்குள்ள இன உரிமைகளையும், சலகைகளையும், வாய்ப்பினையும், சுதந்திரத்தினையும் அனுபவிப்பதற்கு வடக்கு - கிழக்கு மாகாணத்தை தமது தாயகமாகக் கொண்ட முஸ்லிம்கள் உரித்துடையவர்கள்.

8. கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்கள் 33% தொகையினர், வடக்கு கிழக்கு ஒன்றிணைந்த மாகாணத்தில் 18% தொகையினர். முஸ்லிம்கள் அதிகூடிய பாதுகாப்பை பெற்று, ஆட்சி அதிகாரங்களை பகிர்ந்து கொள்ளும் வாய்ப்பினையும் பெறக்கூடிய வகையில், ஒன்றிணைந்த தாயகத்தில் 30% த்திற்கும் குறைவில்லாத வகையில், மாகாண சபையில் பிரதிநிதித்துவம் பெறுவதற்கும், அமைச்சரவையில் இடம் பெறுவதற்கும் உரித்துடையவர்கள் என்பதை ஏற்றுக் கொள்வதுடன், இவ் வீதப்படியான உரித்துக்களை பெறுவதற்கு தேவையான அரசியல் சட்ட ஏற்பாடுகளைச் செய்வதற்கு இரு தரப்பினரும் முழு முயற்சிகளையும் மேற்கொள்வர்.

9. வருங்கால அரச காணிப் பங்கீடு முஸ்லிம்களுக்கு கிழக்கு மாகாணத்தில் 35% குறைவில்லா வகையிலும் மன்னார் மாவட்டத்தில் 30% குறைவில்லாத வகையிலும் வட மாகாணத்தில் ஏனைய பகுதிகளில் 5% குறைவில்லாத வகையிலும் இருக்க வேண்டும்.

10. வடக்கு-கிழக்கு தாயகத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் வாழும் முஸ்லிம்களின் விகிதாசாரத்தின் படி, பொதுத் துறை வேலைவாய்ப்பிற்கான உரிமையை முஸ்லிம்கள் கொண்டிருப்பர்.

11. கல்வித்துறையில் எல்லா இடங்களிலும் சம வாய்ப்புக்கள் பேணப்படும் வரை பல்கலைக்கழக அனுமதியின் போது கல்வித் துறையில் பின்தங்கியுள்ள பிரதேசங்களில் விசேட கவனிப்பு செலுத்தப்படும். பல்கலைக்கழகம் வரையிலான பிரத்தியேகக் கல்வி வசதிகள் முஸ்லிம்களுக்காக ஏற்படுத்தப்படும். முஸ்லிம் மக்களுக்காக இஸ்லாமிய பல்கலைக்கழகம் நிறுவப்படும்.

12. முஸ்லிம் மக்களது தனித்துவத்தின் உரிமைகள், அக்கறைகள் என்பவற்றை பாதிக்கக் கூடிய எதுவித சட்டவாக்கங்களும், அவற்றிற்கு முஸ்லிம் பிரதிநிதிகள் 3/4 பெரும்பான்மையினர் சார்பாக வாக்களித்தாலன்றி, வடக்கு-கிழக்கு மாகாண சபையினால் நிறைவேற்றப்படலாகாது.

13. வடக்கு-கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சராக ஒரு முஸ்லிம் முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தால் அன்றி அம்மாகண சபையின் பிரதி முதலமைச்சராக ஒரு முஸ்லிம் நியமிக்கப்படுவதை உறுதி செய்யும் வகையிலும் சட்ட ஏற்பாடுகள் செய்யப்படுதல் வேண்டும்.

14. வடக்கு கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில் அவர்கள் அரசியல் நிர்வாக அபிவிருத்தி அலகுகள் பல்வேறு மாவட்டங்களில் உருவாக்கப்படுதல் வேண்டும். இது பற்றி விடுதலைப் புலிகள் தமது கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர். இவற்றுள் உள்ளடக்கப்பட வேண்டிய பாரம்பரிய எல்லைகள், மூலவளங்கள் என்பன பற்றி மேலும் இரு பகுதியினரும் ஆய்வு நடத்தி இறுதி முடிவு மேற்கொள்ளப்படும்.



15. தமிழ் பேசும் மக்களின் தாயகத்தை அபகரிக்கும் நோக்கத்துடனும், அங்குள்ள இனப் பரம்பலை மாற்றியமைக்கம் வகையிலும், அவர்களது பொருளாதார அரசியல் நிர்வாகப் பலத்தினை முறியடிக்கும் கொள்கையுடனும் மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட அரச குடியேற்றங்களால் ஏற்பட்ட பாதிப்புக்களை களையும் வகையிலும் ஒரு குடியகல்வு கொள்கை உருவாக்கப்படுதல் வேண்டும்.

16. தமிழ் பேசும் மாகாண சபைக்காக நடக்கவிருக்கும் எதிர்வரும் தேர்தல் நியாயமான அடிப்படையில் தயாரிக்கப்பட்ட வாக்காளர் பட்டியலைக் கொண்டிருத்தல் வேண்டும். இவ்வாக்காளர் பட்டியல் எந்த ஆண்டினை அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதை பற்றி விரிவாக ஆராயப்பட்டது.

17. வடக்கு-கிழக்கு மாகாணங்களில் நடைபெறும் போர் நடவடிக்கைகளினால் உண்மையில் அப்பாவி மக்களே சொல்லொன்னாப் பெருந்தொல்லைக்குள்ளாகின்றனர். மக்கள் சாதாரண வாழ்க்கைக்கு திரும்ப போர் நிறுத்தம் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

18. யுத்த நிறுத்தத்திற்குப் பின்னர் மக்கள் இயல்பான வாழ்க்கைக்குத் திரும்பி முறையாக மாகாண சபைத் தேர்தல் நடக்கும் வரையும் இடைக்கால நிர்வாக அரசு ஒன்று அவசியமாகும். இந்த இடைக்கால அரசில் ஏற்கனவே இது தொடர்பில் செய்யப்பட்ட முடிவின் பிரகாரம் அங்கத்துவம் அமைதல் வேண்டும்.

| | |
|---|---|
| **சதாசிவம் கிருஷ்ணகுமார்** | **எம்.ஐ.எம். மொஹிதீன்** |
| மத்தியக்குழு உறுப்பினர் | செயலாளர் நாயகம் |
| தமிழீழ விடுதலைப் புலிகள் | முஸ்லிம்ஐக்கிய |
| 21.04.1988 | விடுதலை முன்னணி |

# மங்கள முனசிங்கா தெரிவுக்குழு அறிக்கை - 1991

பாராளுமன்றம் அங்கீகரித்த ஒரு தெரிவுக்குழு 1991.08.09 ஆம் திகதி நியமிக்கப்பட்டது. திரு.மங்கள முனசிங்காவின் தலைமையில் 45 உறுப்பினர்களைக் கொண்ட தெரிவுக்குழு பல முறை கூடி ஆராய்ந்து பரிந்துரைகளை அறிக்கையிட்டுள்ளது.

பின்வரும் விடயங்கள் கவனத்திற் கொள்ளப்பட்டன :

(அ) வடக்கு கிழக்கு மாகாணங்களில் அதிகாரப் பகிர்வு பற்றிய பிரச்சினையையிட்டு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும்.

(ஆ) 1. தேசம் பிளவுபட்டுள்ளமை,
2. அப்பாவி சாதாரணப் பிரஜைகள், ஆயுதமேந்திய படைகளின் உறுப்பினர்கள், ஓர் குறிக்கோளை அடைவதற்குப் போராடும் இளைஞர்கள் வீணாகக் கொல்லப்படுதல்,
3. எமது நாட்டில் பயப்பீதிக் கலாசாரம் யுத்த ரீதியாக வளர்ச்சியடைவதைத் தடை செய்தல்

(இ) இயல்பு நிலையையும் அரசியல் ஸ்திரத் தன்மையையும் ஏற்படுத்துவதற்கு பாதுகாப்புச் செலவினங்களைக் குறைத்து துரித பொருளாதார வளாச்சிக்கும் தேசிய அபிவிருத்திக்கும் பயன்படுத்துதல்.

தெரிவுக்குழு உறுப்பினர்களின் பெரும்பான்மையினர் உடன்பாடு கண்ட விடயங்கள் பின்வருமாறு:



(அ) வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு தனித்தனியான இரு அலகுகள் அமைத்தல்.

(ஆ) இந்திய அரசயாப்பில் குறிப்பிடப்படும் வகையிலான அதிகாரப் பகிர்வு முறையை அனுசரித்தல்.

(இ) 3ம் பட்டியலில் (ஒத்தியங்கு பட்டியல்) குறிப்பிடப்படும்விடயங்களை திட்டவட்டமாகப் பகிர்தல் அல்லது முழுமையாக அகற்றுதல்.

# 1994 ஜனாதிபதித் தேர்தலுக்காக திரு. காமினி திசாநாயக்க முன்வைத்த யோசனைகள்



## அதிகாரத்தை ஒப்படைத்தல்

1. மக்களின் சட்டவாக்கத்துறை அதிகாரம் செனட் சபை மற்றும் மக்கள் பிரதிநிதிகள் சபை மூலம்;
2. நிறைவேற்று அதிகாரம் ஜனாதிபதி மற்றும் அமைச்சரவை மூலமும் மாகாண சபைகளின் முதலமைச்சர் மூலமும் நடைமுறைப்படுத்தப்படும்.
3. மத்திய அரசுக்கும் மாகாண சபைகளுக்கும் பொறுப்புக் கூறும் இரண்டு அரச சேவைகள்

- **மத்திய அரசுக்கும் மாகாணங்களுக்கும் இடையே திட்டவட்டமான அதிகாரப் பகிர்வு. விடயப்பொறுப்புக்கள் பற்றிய இரண்டு நிரல்கள்**



- மாகாண சபைகள் பற்றி மத்திய அரசு செயற்பட முடியாது.
- மாகாண சபைகளுக்கு ஒப்படைக்கப்படும் அதிகாரங்கள் மேற்படி மாகாண சபைகளின் அங்கீகாரமின்றி மீளப்பெறவோ குறைக்கவோ முடியாது.
- மாகாண பொலிஸ் சேவை ஒன்று உருவாக்கப்படும்.
- சிங்களம், தமிழ், மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளும் அரசகரும மொழிகளாகும்.

# மோதல் தவிர்ப்பு ஒப்பந்தப் பிரகடனம் -1995

1995 ஜனவரி 7-8 ஆகிய தினங்களில் மோதல்தவிர்ப்பு ஒப்பந்தத்தில் பிரபாகரனும் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கவும் கைச்சாத்திட்டனர்.

குறிப்பிட்ட காலத்திற்கு மோதலை தவிர்க்க உடன்பாடு காணப்பட்டது.

1. இரு சாராரும் தாக்குதல் நடவடிக்கைகளைக் கைவிடல்
2. பாதுகாப்புப் படைகளும் விடுதலைப்புலிகளும் தாம் நிலை கொண்டுள்ள பிரதேசங்களிலேயே தொடர்ந்தும் இருக்க வேண்டும்.
3. கடற்படையும் விமானப் படையும், வெளிநாட்டு ஆக்கிரமிப்புக்களில் இருந்து நாட்டைப் பாதுகாக்கும் அதே சமயம் நாட்டின் இறைமையையும் ஆட்புல ஒருமையையும் பேணுவர். மீன்பிடி நடவடிக்கைகளுக்கு எதுவிதத் தடையும் ஏற்படுத்தப்படமாட்டாது.
4. அரசியல் சீர்குலைவு நடவடிக்கைகள், குண்டு வைத்துத் தகர்த்தல், ஆட்கடத்தல், படுகொலைகள் என்பன பகைமை நடவடிக்கைகளாகக் கருதப்படும்.
5. **மேற்படி நிபந்தனைகள் மீறப்படும் பட்சத்தில் கண்காணிப்புக் குழுவிற்கு**



(அ) முறையீடு செய்யப்பட வேண்டும் (மேற்படி குழுக்கள் யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, முல்லைதீவு, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய பிரதேசங்களில் அமைக்கப்படும்)

(ஆ) முறையீடுகளை விசாரணை செய்வது குழுவின் பொறுப்பாகும்.

(இ) பரஸ்பர உடன்பாட்டிற்கு அமைய குழுக்கள் அமைக்கப்படும்.

(ஈ) குழுவில் ஐந்து உறுப்பினர்கள் கடமையாற்றுவார்கள் (அரசாங்கப் பிரதிநிதிகள் 2, விடுதலைப் புலிகள் 2, வெளிநாட்டுப் பிரதிநிதிகள் 1)

(உ) குழுக்கள் சுதந்திரமாக பயணிப்பதற்கு வசதி செய்து கொடுக்கப்பட வேண்டும்.

(ஊ) வேறு தேவையான வசதிகளும் செய்து கொடுக்கப்பட வேண்டும்

6. இலங்கை அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளின் யுத்தப்பிரதேசங்களுக்குமிடையே தகவல் பரிவர்த்தனை சிபாரிசு செய்யப்படுகின்றது.

# பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் அரசியல் யோசனைகள் -1997



இலங்கையில் வாழும் அனைத்து மக்கட் பிரிவினருக்கும் பாதுகாப்பிற்கான உத்தரவாதம் வழங்குதல்; அனைவரையும் சமமாக மதிக்கும் ஓர் சித்தாந்தத்தை விரிவாக்கம் செய்தல்; அதிகாரத்தைப் பகிரும் ஓர் கட்டமைப்பை உருவாக்குதல்

- அனைத்து மாகாணங்களுக்கும் ஒவ்வொரு மாகாண சபையை நிறுவுதல். வடக்கு - கிழக்கு மாகாணங்கள் ஒரு தனி மாகாணமாகக் கருதப்படும்.
- மாகாணசபையின் ஆயுட்காலம் 5 ஆண்டுகளாகும்.
- அதிகாரத்தைப் பகிர்வதற்கான ஓர் ஆணைக்குழு நியமிக்கப்படும்.
- அரச யாப்பிற்கமைய இலங்கைக் குடியரசு ஐக்கிய - இறைமையுடைய ஓர் குடியரசாகும். அது மாகாணங்களின் ஒன்றியமாகக் கருதப்படும்.
- அதிகாரப்பகிர்வு இரு நிரல்களில் உள்ளடங்கும் மத்திய அரசாங்கத்தின் நிரல் ஒன்றும் மாகாண அரசாங்கத்தின் நிரல் ஒன்றும் என இரு நிரல்கள் மாத்திரமே அமுலில் இருக்கும்.



# போர் நிறுத்த ஒப்பந்தம் - 2002

இலங்கைக் குடியரசும், விடுதலைப்புலிகள் அமைப்பும் பேச்சுவார்த்தைகள் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதை குறிக்கோளாகக் கொண்டு இப்போர் நிறுத்த ஒப்பந்தத்தைச் செய்து கொண்டன.

- இதற்கு மோதலை நிறுத்த வேண்டும் என இரு தரப்பினரும் ஏற்றுக் கொள்கின்றனர்.
- மோதலில் நேரடியாகத் தொடர்பில்லாத மக்கட் பிரிவினரும் இதன் பாதிப்புக்களால்
  துன்பப்படுகின்றனர் என்பதை இரு தரப்பினரும் ஏற்றுக் கொள்கின்றனர்.
- இரு தரப்பினரும் போரை நிறுத்த உடன்படுகின்றனர்.

## இரு தரப்புப் படையினர் மோதலை நிறுத்துவது பற்றி

1.1 போர் நிறுத்தப்படும் நாள் நோர்வே நாட்டு வெளிநாட்டு அமைச்சரால் அறிவிக்கப்படும்

1.2 எத்தரப்பினரும் ஆயுதரீதியான மோதல் நடவடிக்கைகளில் ஈடுபட முடியாது.

1.3 இது தொடர்பான பிணக்குகள் கண்காணிப்புக்குழுவிடம் முறையிடப்படும்

1.4 நானூறு மீட்டர் இடைவெளியில் தத்தமது பிரதேசங்களில் இருதரப்புப் படையினரும் தங்கியிருக்க முடியும். ஒரு

படைத்தரப்பினர் நிலை கொண்டுள்ள பிரதேசத்திற்கு மற்றைய படைத்தரப்பினர் ஆயுதங்களை எடுத்துச் செல்லக் கூடாது. ஆயுதம் இன்றி இராணுவ உடைகளை அணியாமல் தமது உறவினர்களையும் நண்பர்களையும் காண்பதற்குச் செல்ல அனுமதி வழங்கப்படலாம்.

- நம்பிக்கையை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்க இரு தரப்பினரும் உடன்படுகின்றனர்.
- சர்வதேசச் சட்டத்திற்கு அமைய பொது மக்களுக்கு எதுவித இம்சைகளும் விளைவிக்கக் கூடாது.
- வணக்கத் தலங்களும், கலாசார நிலையங்களும் பாதுகாக்கப்பட வேண்டும்.
- வணக்கத் தலங்களிலிருந்தும் பாடசாலைக் கட்டிடங்களிலிருந்தும் இராணுவம் வெளியேற வேண்டும்.
- திருகோணமலை - ஹபரண, பெருந்தெருக்களை பொது மக்களின் பாவனைக்கு திறந்து வைக்கப்பட வேண்டும்.
- வெலிக்கந்தையிலிருந்து மட்டக்களப்பு வரை புகையிரத மார்க்கம் நீடிக்கப்பட வேண்டும்.
- கண்டி - யாழ்ப்பாணம் A9 பாதை திறக்கப்பட வேண்டும்
- இரவு மீன்பிடிப்பதற்கான (மட்டுப்படுத்தப்பட்ட) தடைகள் நீக்கப்பட வேண்டும்.
- சர்வதேச கண்காணிப்புக் குழு உருவாக்கப்படல் வேண்டும்
- பொருட்களுக்கான தடைகள் தளர்த்தப்படும்.



## சிறீலங்கா ஜனநாயக சோசலிஸ குடியரசு அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான போர்நிறுத்த ஒப்பந்தம்

### முகவுரை

சிறீலங்கா ஜனநாயக சோசலிச குடியரசு அரசாங்கத்தினதும் தமிழீழ விடுதலைப் புலிகளினதும் ஒட்டுமொத்தமான நோக்கம் இலங்கையில் தற்போதுள்ள இன மோதலுக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதாகும். இந்த தரப்பினர் (இந்த தரப்பினர் என்று இந்த ஒப்பதத்தில் குறிப்பிடுவது சிறீலங்கா அரசாங்கத்தையும் விடுதலைப் புலிகளையும் ஆகும்) பகைமைகளுக்கு ஒரு முடிவுகட்டி, மோதலினால் பாதிக்கப்பட்டிருக்கும் அனைத்து குடிமக்களதும் வாழ்க்கை நிலைமையை சீருயர்த்துவதன் முக்கியத்துவத்தை அங்கீகரிக்கின்றனர். பகைமைகளுக்கு முடிவுகட்டுவது எனும்போது, நிரந்தர தீர்வுக்கான பேச்சுவார்த்தைகளை நோக்கிய மேலதிக நடவடிக்கைகளை எடுக்க கூடியதான, ஒரு சாதகமான சூழ்நிலையை உருவாக்குவதாக இந்த தரப்பினரால் கவனிக்கப்படுகின்றது.

மோதலில் நேரடியாக சம்பந்தப்படாத குழுக்களும் இதன் பாதிப்புகளால் துன்பப்படுகின்றனர் என்பதையும் இந்த தரப்பினர் மேலும் அங்கீகரிக்கின்றனர். குறிப்பாக முஸ்லிம் மக்களை பொறுத்தவரையில் இது பொருந்தும். ஆகவே, பொதுமக்களினதும் அவர்களின் சொத்துக்களதும் பாதுகாப்புப் பற்றிய இந்த ஒப்பந்தத்தின் விதிகள் அனைத்து குடிமக்களுக்கும் செல்லுபடியாகும். இந்த நிலைமைகளைக் கருத்தில் கொண்டு, போர் நிறுத்தம் ஒன்றில் ஈடுபடவும், நல்ல நோக்கங்களை பாதிக்கக் கூடிய அல்லது ஒப்பந்தத்தின் சாரத்தை முறிக்கக் கூடிய செயல்பாடுகளை தவிர்த்துக் கொள்ளவும், கீழ்வரும் பிரிவுகளில் சொல்லப்பட்டிருப்பது போன்று நம்பிக்கையை கட்டியெழுப்பும் நடவடிக்கைகளை செயல்படுத்தவும் இந்த தரப்பினர் ஒப்புக் கொண்டுள்ளனர்.

### விதி 1 : போர்நிறுத்தத்தின் முறைகள்

இந்தத் தரப்பினர் தமது ஆயுத படைகளுக்கு இடையே போர் நிறுத்தம் ஒன்றை பின்வருமாறு அமுல்செய்ய ஒப்புக்கொண்டுள்ளனர்:

1.1 : நோர்வேயின் வெளிவிவகார அமைச்சரினால் விதி 4.2 இன் பிரகாரம் டி-தினம் என்று இதன் பின்னர் குறிக்கப்படும் தினம் அறிவிக்கப்பட்டதும் அத்தினத்தில் சிறீலங்கா அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே கூட்டாக ஒப்புக்கொள்ளப்பட்ட போர்நிறுத்தம் ஒன்று அமுலுக்கு வரும்.(இந்த விதியின் கீழ் 23.02.2002ஆம் திகதி 00.00 நேரத்தை நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் பிரகடனம் செய்து போர்நிறுத்தம் அமுலுக்கு வந்திருப்பது குறிப்பிடத்தக்கது.)

### இராணுவ நடவடிக்கைகள்

1.2 : வலுத்தாக்குதல் இராணுவ நடவடிக்கைகளில் எந்தத் தரப்பினரும் ஈடுபட இயலாது. முற்று முழுதாக சகல இராணுவ நடவடிக்கைகளையும் நிறுத்துவதை இது கோருகின்றது. பின்வரும், ஆனால், மட்டுப்படுத்தப்படாத நடவடிக்கைகளை இது உள்ளடக்குகின்றது.

அ. நேரடியானதும் மறைமுகமானதுமான ஆயுதங்களினால் சுடுதல், ஆயுதங்களுடன் முற்றுகைத் தேடுதல், பதுங்கியிருந்து தாக்குதல், கொலைகள், ஆட்கடத்தல், பொது மக்களது அல்லது இராணுவத்தினது சொத்துக்களை அழித்தல், நாசகார செயல்கள், தற்கொலைத் தாக்குதல் நடவடிக்கைகள், ஆழ ஊடுருவும் குழுக்களின் செயல்பாடுகள்.

ஆ. வான்வழி குண்டுவீச்சுக்கள்.



இ. கடலில் வலுத்தாக்குதல் நடவடிக்கைகள்.

1.3 : விடுதலைப் புலிகளுக்கு எதிரான வலுத்தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபடாத வகையில், சிறீலங்காவின் ஆயுதப் படைகள் சிறீலங்காவின் இறைமையையும் பிராந்திய ஒருமைப்பாட்டையும் பாதுகாக்கும் சட்டப்படியான நடவடிக்கைகளை தொடர்ந்து நிறைவேற்றலாம்.

### படைகளை பிரித்து வைத்தல்

1.4 : முன்னணி காவலரண்கள் அமைக்கப்பட்டிருக்கும் பகுதிகளில், குறைந்தது 600 மீற்றர் தூரம் இடைவெளி பிரித்து, சிறீலங்கா அரசாங்கத்தின் ஆயுத படைகளும் விடுதலைப் புலிகளின் போரிடும் படைகளும், தமது கள நிலையை வைத்திருக்கலாம். எனினும், ஒவ்வொரு தரப்பினரும் தமது காவல் நிலையிலிருந்து 100 மீற்றர் தூரத்துக்கு ஆனால் குறைந்தது 400 மீற்றர் தூரம் இடைவெளி தங்களுக்குள் உள்ளவாறு நடமாடுவதற்கான உரிமையைக் கொண்டிருப்பர். 400 மீற்றருக்கு குறைவான இடைவெளி உள்ள தற்போதுள்ளநிலைகள் விடயத்தில் இந்த நடமாடும் உரிமை செல்லாது. தமது துருப்பினர் இடையே முடிந்தளவு கூடுதலான இடைவெளியை உறுதிப்படுத்த இந்தத் தரப்பினர் ஒப்புக்கொள்கின்றனர்.

1.5 : பகுதிகள் தெளிவாக வரையறுக்கப்படாத இடங்களில் 1.6 விதியில் குறிப்பிடுவது போன்று நிலவரையறை செய்யப்படும் வரை, 2001 டிசம்பர் 24ஆம் திகதியில் இருந்தவாறு சிறீலங்கா அரசாங்கத்தாலும் விடுதலைப் புலிகளாலும் கட்டுப்படுத்தப்படும் பகுதிகள் அவ்வாறே இருந்து வரலாம்.

1.6 : சிறீலங்கா கண்காணிப்பு குழுவினருக்கு 3ஆம் விதியின் பிரகாரம், சிக்கலுக்குரிய சகல பகுதிகளினதும் காவலரண் நிலைகள் பற்றிய தகவல்களை இந்தத் தரப்பினர் வழங்கலாம். ஆகக் குறைந்தது டி-தினம் 30க்கு உள்ளாக

நிலவரையறை கோடுகளை வரைவதில் இந்தத் தரப்பினருக்கு கண்காணிப்பு குழுவினர் உதவுவர்.

1.7 : மற்றைய தரப்பினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிக்குள் ஆயுதங்கள், வெடி பொருட்கள் மற்றும் இராணுவ தளபாடங்கள் என்பவற்றை இந்தத் தரப்பினர் நகர்த்த முடியாது.

1.8 : சிறீலங்கா அரசாங்கம் தமிழ் ஆயுதக் குழுக்களிடம் இருந்து ஆயுதங்களை, ஆகக் குறைந்தது டி-தினம் 30க்கு உள்ளாகக் களைய வேண்டும். வடக்கு கிழக்குக்கு அப்பாற்பட்ட பகுதிகளில் சேவைக்கென சிறீலங்கா ஆயுத படைகளின் கட்டுப்பாட்டடின் கீழ் மேற்படி குழுக்களில் இருக்கும் தனிநபர்களை சேர்த்துக் கொள்ள சிறீலங்கா அரசாங்கம் முன்மொழியலாம்.

**நடமாடும் சுதந்திரம்**

1.9 : இந்தத் தரப்பினரின் படைகள் 1.4 மற்றும் 1.5 விதிகளில் சொல்லப்பட்டிருப்பது போன்று ஆரம்பத்தில் தங்கள் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் தங்கியிருக்க வேண்டும்.

1.10 : ஆயுதமேந்தாத சிறீலங்கா துருப்பினர் டி-தினம் 60க்கு பின்னர் யாழ்ப்பாணத்துக்கும் வவுனியாவுக்கும் இடையே யாழ்-கண்டி (ஏ9) வீதியை பாவித்து மட்டுப்படுத்தப்படாத அளவில் பயணம் செய்ய அனுமதிக்கப்பட வேண்டும். இந்த செயல்முறைகள் இந்தத் தரப்பினரால் சிறீலங்கா கண்காணிப்புக் குழுவினரின் உதவியுடன் வகுக்கப்பட வேண்டும்.

1.11 : டி-தினத்தில் இருந்து போராளிகளான தனிநபர்கள், தமது பிராந்திய தளபதியின் சிபார்சின் பேரில், ஆயுதமில்லாமலும் சாதாரண உடையிலும் தமது குடும்பத்தவர் மற்றும் நண்பர்கள் ஆகியோரை மற்றத் தரப்பின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு சென்று பார்த்துவர அனுமதிக்க வேண்டும். குறைந்தளவு தூர வீதியால் பயணம் செய்யும் நேரத்தை கணக்கில் எடுக்காது, ஒவ்வொரு இரண்டு மாதத்திலும் ஆறு நாட்களுக்கென இத்தகைய பயணங்கள் மட்டுப்படுத்தப்படும். இந்த நோக்கத்துக்கு யாழ்-கண்டி வீதியை விடுதலைப் புலிகள் வசதி செய்து கொடுப்பர். குறிப்பிட்ட இராணுவ பகுதிகளுக்குள் நுழைவதற்கு மறுப்புத் தெரிவிக்கும் உரிமையை இத் தரப்பினர் கொண்டிருப்பர்.



1.12 : போராளிகளான தனி நபர்கள் டி-தினத்தில் இருந்து, இரண்டு மாத கட்டுப்பாட்டை கவனத்தில் கொள்ளாது தமது நெருங்கிய குடும்ப அங்கத்தவர்களின் (மனைவி, பிள்ளைகள், பாட்டனார், பெற்றோர், உடன்பிறப்புக்கள்) திருமணம், இறுதி அஞ்சலி போன்றவற்றுக்கு ஆயுதமில்லாமலும், சாதாரண உடையிலும் சென்றுவர அனுமதிப்பதென இந்த தரப்பினர் ஒப்புக்கொள்கின்றனர். குறிப்பிட்ட இராணுவ பகுதிக்குள் நுழைவதற்கு மறுப்புத் தெரிவிக்கும் உரிமை இங்கு செல்லுபடியாகும்.

1.13 : ஆயுதமேந்தாத 50 விடுதலைப் புலி உறுப்பினர்கள் டி-தினம் 30இல் இருந்து வடக்கு கிழக்கில் சிறீலங்கா அரசாங்க கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்குள் அரசியல் பணிகளுக்கென சுதந்திரமாக நடமாட அனுமதிக்கப்படுவர். டி-தினம் 60இல் இருந்து மேலும் ஆயுதமேந்தாத 100 விடுதலைப் புலி உறுப்பினர்கள் சுதந்திரமாக நடமாட அனுமதிக்கப்படுவர். டி-தினம் 90இல் இருந்து சகல ஆயுதமேந்தாத விடுதலைப் புலி உறுப்பினர்களும் வடக்கு கிழக்கில் சுதந்திரமாக நடமாட அனுமதிக்கப்படுவர். விடுதலைப் புலி உறுப்பினர்கள் அடையாள பத்திரங்களை வைத்திருக்க வேண்டும். குறிப்பிட்ட இராணுவ பகுதிகளுக்குள் நுழைவதற்கு சிறீலங்கா அரசாங்கம் மறுப்பு தெரிவிக்கும் உரிமை இங்கு செல்லுபடியாகும்.

**விதி 2 : இயல்பு நிலையை தோற்றுவிக்கும் நடவடிக்கைகள்**

சிறீலங்காவின் சகல குடிமக்களுக்கும் இயல்பு நிலை வாழ்க்கையை மீளமைப்பதற்காக பின்வரும் நம்பிக்கையை வளர்க்கும் நடவடிக்கைகளை இந்த தரப்பினர் மேற்கொள்வர்.

2.1 : சர்வதேச சட்டங்களுக்கு அமைவாக இந்த தரப்பினர், சித்திரவதை, நெருக்கடி, ஆட்கடத்தல், கட்டாயவரி வசூலித்தல், தொந்தரவு என்பன உள்ளிட்டதான பகைமை நடவடிக்கைகளை பொது மக்களுக்கு எதிராக மேற்கொள்வதை தவிர்த்துக் கொள்வர்.

2.2 : கலாசார, மத உணர்வுகளை புண்படுத்தக் கூடிய நடவடிக்கைகள், கொள்கை பரப்புதல் என்பவற்றில் ஈடுபடுவதில் இருந்து இந்த தரப்பினர் தம்மை தவிர்த்துக் கொள்வர். எந்த தரப்பினதும் படைகளால் தற்போது வைத்திருக்கப்படும் வழிபாட்டு இடங்களில் (கோவில்கள், தேவாலயங்கள், பள்ளிவாசல்கள் மற்றும் ஏனைய புனித தலங்கள் என்பன) இருந்து டி-தினம் 30 அளவில் படையினர் வெளியேறுவதுடன் அவை பொதுமக்கள் சென்று வரக்கூடியதாயிருக்க வேண்டும். உயர் பாதுகாப்பு வலயங்களில் உள்ள வழிபாட்டு தலங்களில் இருந்து, அவை பொதுமக்கள் சென்றுவர முடியாததாயிருப்பினும், ஆயுதமேந்திய சகல துருப்பினரும் வெளியேறுவதுடன் பொதுசன தொண்டர்களால் அவை நல்ல நிலையில் பரிபாலிக்கப்படல் வேண்டும்.

2.3 : இந்த ஒப்பந்தம் அமுலுக்கு வரும் நாளில் இருந்து எந்த தரப்பினராலும் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் பாடசாலை கட்டடங்கள் விடுவிக்கப்பட்டு அவற்றின் நோக்கங்களுக்கு பாவிக்கவென திரும்பக் கொடுக்கப்பட வேண்டும். ஆகக் குறைந்தது டி-தினத்திலிருந்து 160க்குள் இந்த நடவடிக்கை பூர்த்தி செய்யப்பட வேண்டும்.



2.4 : ஏனைய சகல பொதுக் கட்டடங்களும் அவற்றின் நோக்கங்களுக்கென திரும்ப ஒப்படைக்கப்படுவதன் கால அட்டவணை இந்தத் தரப்பினரால் தயாரிக்கப்பட்டுஆகக் கூடியது டி-தினம் 30க்குள் வெளியிடப்பட வேண்டும்.

2.5 : பாதுகாப்பு நடவடிக்கைகளையும், சோதனை சாவடிகளின் அமைப்பையும், குறிப்பாக நெருக்கமாக குடிசனங்கள் உள்ள நகரங்களிலும் பட்டணங்களிலும் பொதுமக்கள் தொந்தரவு செய்யப்படுவதை தவிர்க்கும் வகையிலான முறைகளை புகுத்துவதற்காக, இந்தத் தரப்பினர் மீளாய்வு செய்வர். டி-தினம்60இல் இருந்து இத்தகைய முறை அமுலில் இருக்க வேண்டும்.

2.6 : விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்கும் அங்கிருந்தும் இராணுவ பாவனைக்கில்லாத பொருட்கள் தங்குதடையின்றி கொண்டு செல்லப்படுவதை உறுதிப்படுத்துவதென இந்தத் தரப்பினர் ஒப்புக் கொள்கின்றனர். இணைப்பு ‘அ’ வில் உள்ள சில பொருட்கள் இதற்கு விதிவிலக்காயிருக்கும். பொருட்களின் அளவு சந்தையின் தேவையைப் பொருத்தே நிச்சயிக்கப்படும். இராணுவ பாவனைக்கில்லாத பொருட்கள் மீது எஞ்சியுள்ள கட்டுப்பாடுகளைபடிப்படியாக அகற்றுவதற்காக சிறீலங்கா அரசாங்கம் தொடர்ச்சியாக இந்த விடயத்தை மீளாய்வு செய்துவரும்.

2.7 : பொருட்கள் கொண்டு செல்லப்படுவதையும் பொது மக்களின் நடமாட்டத்தையும் வசதிப்படுத்துவதற்காக இந்த தரப்பினர் தமது கட்டுப்பாட்டுக் கோட்டு பகுதியில், இணைப்பு ‘ஆ’வில் கூறப்படும் இடங்களில் சோதனை சாவடிகளை அமைக்க ஒப்புக்கொள்கின்றனர்.

2.8 : திருமலை - பரணை வீதி பயணிகளின் போக்குவரத்துக்கு 24 மணி நேரமும்டி-தினம் 10இல் இருந்து திறந்திருப்பதை உறுதிப்படுத்தும் விதமாக இந்த தரப்பினர் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

2.9 : மட்டக்களப்பு பாதையில் ரயில் சேவை வெலிகந்த வரை விஸ்தரிக்கப்படுவதற்கு இந்த தரப்பினர் வசதி செய்வர். மட்டக்களப்பு வரை சேவையை விஸ்தரிப்பதற்கு திருத்த, பராமரிப்பு பணிகளை சிறீலங்கா அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும்.

2.10 : கண்டி - யாழ்ப்பாணம் (ஏ9) வீதியை இராணுவ பயணமல்லாத பயணிகளதும் பொருட்களதும் போக்குவரத்துக்கு இந்த தரப்பினர் திறந்துவிட வேண்டும். இது பற்றிய திட்டவட்டமான முறைகள் இந்த தரப்பினரால் நோர்வே அரசாங்கத்தின் உதவியுடன் ஆகப் பிந்தியது டி-தினம் 30க்குள் வகுக்கப்பட வேண்டும்.

2.11 : மீன்பிடி கட்டுப்பாடுகளை படிப்படியாக தளர்த்துவது டி-தினத்தில் இருந்து ஆரம்பமாக வேண்டும். பின்வரும் சில விதிவிலக்குகளை தவிர்த்து டி-தினம் 90 அளவில் சகல இரவு, பகல் மீன்பிடி கட்டுப்பாடுகளும் விலத்தப்பட்டிருக்க வேண்டும்.

(i) கரையில் பாதுகாப்பு படைகளது சகல முகாம்களில் இருந்தும் இரு பக்கமாகவும் கரைப்புறமாக ஒரு கடல் மைல் தூரமும், கடல் புறமாக இரு கடல் மைல் தூரமும்,

(ii) துறைமுகங்கள், துறைமுகங்களுக்கு செல்லும் வழிகள், கரையோரமாகவுள்ள குடாக்கள், களப்புக்கள் என்பவற்றில் மீன்பிடிக்க அனுமதிக்கப்பட மாட்டாது.



2.12 : பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் தேடுதல்கள், கைது செய்தல் என்பன நடக்கக் கூடாது என இந்தத் தரப்பினர் ஒப்புக்கொள்கின்றனர். கைது செய்யப்படுவதானது கிரிமினல் சட்டக்கோவைக்கு அமைந்ததாக முறையான சட்ட ஒழுங்குப்படி நடத்தப்பட வேண்டும்.

2.13 : தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களை அவர்களது குடும்பத்தவர்கள் சென்று பார்ப்பதற்கு டி-தினம் 30க்குள் அனுமதிப்பதென இந்தத் தரப்பினர் ஒப்புக்கொள்கின்றனர்.

### விதி 3 : சிறீலங்கா கண்காணிப்பு குழு

இந்த ஒப்பந்தத்தின் ஒழுங்குகள் நிபந்தனைகள் மீறப்படும் எந்தவொரு சம்பவத்தையும் விசாரிப்பதற்குப் பொறுப்பாக சர்வதேச கண்காணிப்பு குழு ஒன்றை அமைப்பதென இந்த தரப்பினர் ஒப்புக்கொண்டுள்ளனர். எந்தவொரு மோதலும் தமது தரப்பால் ஏற்படும்போது அவற்றை சரிப்படுத்துவதற்கு இரு தரப்பும் முற்றாக ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இந்த ஒப்பந்தத்தில் ஒப்புக்கொண்டவற்றை நிறைவேற்றுவதில் களத்தில் இருந்து சர்வதேச கண்காணிப்பை இந்த குழு பின்வரும் முறையில் மேற்கொள்ளும்.

3.1 : இந்த கண்காணிப்பு குழுவின் பெயர் சிறீலங்கா கண்காணிப்புக் குழு

3.2 : இந்த தரப்பினரின் ஒப்புதலை பெற்று, சிறீலங்கா கண்காணிப்பு குழுவின் தலைவரை நோர்வே அரசாங்கம் நியமிக்கும். அவரே இந்த ஒப்பந்தத்தின் விளக்கம் தொடர்பாக இறுதி அதிகாரத்தை கொண்டிருப்பார்.

3.3 : சிறீலங்கா கண்காணிப்பு குழு இந்த தரப்பினருடன் தொடர்பு வைத்திருப்பதுடன்நோர்வே அரசாங்கத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்கும்.

3.4 : சிறீலங்கா கண்காணிப்பு குழுவின் தலைவர் கண்காணிப்பு குழுவின் நடவடிக்கைகள் ஆரம்பமாகும் தினத்தை தீர்மானிப்பார்.

3.5 : சிறீலங்கா கண்காணிப்பு குழு, நோர்டிக் நாடுகளின் பிரதிநிதிகளை கொண்டு அமைக்கப்படும்.

3.6 : சிறீலங்கா கண்காணிப்பு குழுவின் தலைவர் பொருத்தமானதென தெரிவு செய்யும் இடத்தில் குழுவின் தலைமை அலுவலகம் அமைக்கப்படும். சிறீலங்கா அரசாங்கத்துடனும் விடுதலைப் புலிகளுடனும் தொடர்புகொள்ள கொழும்பிலும், வன்னியிலும் அலுவலகங்கள் அமைக்கப்படும். யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் சிறீலங்கா கண்காணிப்பு குழுவினர் பிரசன்னமாக இருப்பார்கள்.

3.7 : யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் உள்ளூர் கண்காணிப்பு குழுக்கள் அமைக்கப்படும். ஒவ்வொரு குழுவிலும் ஐந்து அங்கத்தவர்கள் இருப்பார்கள். அவர்களில் இருவர் சிறீலங்கா அரசாங்கத்தாலும், இருவர் விடுதலைப் புலிகளாலும் நியமிக்கப்படுவதுடன் ஒரு சர்வதேச கண்காணிப்பாளர் சிறீலங்கா கண்காணிப்பு குழுவின் தலைவரால் நியமிக்கப்படுவார். சர்வதேச கண்காணிப்பாளர் இந்த குழுவுக்கு தலைமை தாங்குவார். சிறீலங்கா அரசாங்கத்தினதும் விடுதலைப் புலிகளதும் நியமனதாரிகள் ஓய்வுபெற்ற நீதிபதிகள், பொதுச்சேவை உத்தியோகத்தர்கள், சமயத் தலைவர்கள் மற்றும் அத்தகைய பொதுஜன தலைவர்கள் ஆகியோர் மத்தியிலிருந்து தெரிவு செய்யப்படலாம்.



3.8 : இந்த மாவட்ட குழுக்கள் சிறீலங்கா கண்காணிப்பு குழுவுக்கு ஆலோசனை வழங்கும் வகையில் செயல்படும். இந்த ஒப்பந்தம் தொடர்பாக பொதுவான புரிந்துணர்வை உருவாக்கும் வகையில், ஒப்பந்தம் தமது மாவட்டத்தில் அமுல் செய்யப்படுவது தொடர்பான விடயங்களை விவாதிக்கும். குறிப்பாக இந்த ஒப்பந்தம் அமுல் செய்யப்படுவது தொடர்பாக எந்தவொரு பிணக்கையும் முடிந்தளவு அடிமட்டத்தில் தீர்த்து வைப்பதற்கு அவர்கள் முயற்சிப்பர்.

3.9 : சிறீலங்கா கண்காணிப்பு குழுவினரின் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் என்பவற்றுக்கு இந்த தரப்பினர் பொறுப்பாயிருப்பார்கள்.

3.10 : சிறீலங்கா கண்காணிப்பு குழுவினர் தமது கடமையை நிறைவேற்றுவதற்கென அவர்களின் நடமாடும் சுதந்திரத்தை உறுதிப்படுத்த இந்த தரப்பினர் ஒப்புக்கொள்கின்றனர். ஒப்பந்தம் மீறப்பட்டுள்ளதாக குற்றம் சாட்டப்படும் பகுதிக்கு உடனடியாக செல்வதற்கு கண்காணிப்பு குழுவினர் அனுமதிக்கப்பட வேண்டும். அத்தகைய பகுதிகளில் மேற்படி ஆறு மாவட்ட குழுக்களின் அங்கத்தவர்களும் முடிந்தளவு கூடுதலாக புழங்குவதற்கு வசதி செய்வதென இந்த தரப்பினர் ஒப்புக்கொள்கின்றனர்.

3.11 : ஒப்பந்தத்தின் எந்த தரப்பினரும் செய்யும் எந்த முறைப்பாடுகள் குறித்தும்உடன் நடவடிக்கை எடுப்பதும், அவற்றை விசாரிப்பதும், அத்தகைய முறைப்பாடு தொடர்பாக எழும் எந்த பிணக்கையும் தீர்த்து வைப்பதில் இந்த தரப்பினருக்கு உதவுவதும் சிறீலங்கா கண்காணிப்பு குழுவினரின் பொறுப்பாகும்.

3.12 : முடிந்தளவு அடிமட்டத்தில் பிணக்கை தீர்க்கும் நோக்குடன், சிறீலங்காஅரசாங்கத்தின் ஆயுதப் படைகளது தளபதிகள், விடுதலைப் புலிகளின் பிராந்திய தலைவர்கள் ஆகியோருக்கு மத்தியில் தொடர்புகளை, பிணக்குக்கு உரிய பகுதிகளில் பிரச்சினையை தீர்க்க உதவுவதற்காக ஏற்படுத்த வேண்டும்.

3.12 : சிறீலங்கா கண்காணிப்பு குழுவின் செயல்பாடு குறித்த வழிமுறைகள் பிறிதொரு தனியான ஆவணத்தில் உருவாக்கப்பட வேண்டும்.

### விதி 4 : இந்த ஒப்பந்தம் அமுலுக்கு வருதல், மற்றும் திருத்தங்கள், முடிவுக்கு வருதல்

4.1 : இந்த ஒப்பந்தத்துக்கு கட்டுப்பட தமது விருப்பத்தை ஒவ்வொரு தரப்பும் சிறீலங்கா அரசாங்கத்தின் சார்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவும் விடுதலைப் புலிகளின் சார்பில் வேலுப்பிள்ளை பிரபாகரனும் முறையே கையெழுத்திட்டு நோர்வேயின் வெளிவிவகார அமைச்சருக்கு கடிதம் மூலமாக அறிவிக்க வேண்டும்.

4.2 : நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் அறிவிக்கும் தினத்தில் ஒந்த ஒப்பந்தம்அமுலுக்கு வரும்.

4.3 : இரு தரப்பினதும் பரஸ்பர இணக்கத்துடன் இந்த ஒப்பந்தம் திருத்தவும் மாற்றப்படவும் இயலும். அத்தகைய திருத்தங்கள் எழுத்து மூலமாக நோர்வீஜிய அரசாங்கத்துக்கு அறிவிக்கப்பட வேண்டும்.



4.4 : எந்த தரப்பினாலும் ஒப்பந்தத்தை முடிவுக்கு கொண்டு வருவதாக நோர்வே அரசாங்கத்துக்கு அறிவித்தல் கொடுக்கப்படும் வரை இந்த ஒப்பந்தம் அமுலில் இருக்கும். அத்தகைய முன்னறிவித்தல், முடிவுக்கு வரும் தினத்திற்கு 14 தினங்களுக்கு முன்னதாக கொடுக்கப்பட வேண்டும்.

**இணைக்கப்பட்டவை**

இணைப்பு ஏ : பொருட்களின் நிரல்

இணைப்பு பி : சோதனை நிலையங்கள்

**இணைப்பு ஏ**

- ❖ இராணுவ ஆயுதம் அல்லாத ரவைகள் குண்டுகள்
- ❖ வெடி பொருட்கள்
- ❖ தூர இருந்து இயக்கும் கருவி
- ❖ முள்ளுக்கம்பி
- ❖ தூரதிருஷ்டிக் கண்ணாடிகள்
- ❖ காற்று அழுத்தி மிஷன்
- ❖ பெண்டோஜ் பற்றரி
- ❖ டீசல், பெற்றோல், சீமெந்து, இரும்புக் கம்பிகள் என்பவை கீழ்க் காணும் வழிமுறைப்படியும் தொகைப்படியும் கட்டுப்படுத்தப்படும்:

**டீசல் பெற்றோல்**

அரசாங்க அதிபர்கள் ([PV)விடுதலைப் புலிகளின் வட்டாரத்தில் உள்ள வாகனங்கள், றகடர்கள், மோட்டார் சைக்கிள் ஆகியவற்றைப் பதிவு செய்வார்கள். அவர் இவற்றிற்கு பின்வருமாறு ஒரு கிழமைக்கு அவசியப்படும் எரிபொருளை கணிப்பிட்டு வழங்குவார்.

டிறக் / பஸ்கள், 250 லீட்டர் கிழமைக்கு

4 சில்லு உழவு இயந்திரம், 350 லீட்டர் கிழமைக்கு

2 சில்லு உழவு இயந்திரம், 40 லீட்டர் கிழமைக்கு

பெற்றோல் வாகனம், 30 லீட்டர் கிழமைக்கு

மோட்டார் சைக்கிள், 7 லீட்டர் கிழமைக்கு

மீன்பிடி வள்ளம், 400 லீட்டர் கிழமைக்கு

**சீமெந்து**

அரசாங்க அதிபரினால் வழங்கப்படும் அனுமதிப்பத்திரத்தின் அடிப்படையில் தொடர்புள்ள நிறுவனங்களின் கீழ் அரச கட்டிடங்களை புனரமைத்தல் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவு சங்கங்கள் அல்லது இலங்கை அரசாலும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களாலும், சமூகத்தில் செல்வம் படைத்த உறுப்பினர்களாலும் அமுல்படுத்தப்படும் வீடமைப்புத் திட்டங்கள் ஆகியவற்றுக்கு தேவைப்படும் சீமெந்து வழங்கப்படும். திட்டமிட்ட மற்றும் அறிவிக்கப்படும் திட்ட முன்னேற்றங்களின் அடிப்படையில் மாதாந்த தேவைகளை அரசாங்க அதிபர் குறிப்பிடுவார்.

தனிப்பட்டவர்கள் பாவனைக்கு, வியாபாரிகளுக்கு, வீடு கட்டுபவர்களுக்குக் கூட்டுறவு சங்கங்கள் மூலம் வர்த்தக ரீதியில் வழங்கப்படும். இதற்கு ஏற்ப முதல் மாதம் 5000 மூடைகளும் அதன் பின் ஒவ்வொரு மாதமும் 10,000 மூடைகளும் தனிப்பட்ட



விற்பனை, கூட்டுறவு சங்கங்களின் மூலம் பதிவு செய்யப்பட்டு 25 மூடைகள் ஒவ்வொரு வீட்டுக்கும் கொடுக்கப்படும்.

**இரும்புக் கம்பிகள்**

இரும்புக் கம்பிகள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேச பாவனைக்கு, அரசாங்க அதிபர் அவர்களின் அனுமதியுடன் வழங்கப்படும்.

ஒவ்வொரு மாதமும் இது சம்பந்தமாக ஓர் கணிப்பு எடுத்து இம்முறையை நீக்க முயற்சி எடுக்கப்படும்.

**இணைப்பு பி**

உடன்படிக்கையின் பிரிவு 2.7ல் ஒப்புக்கொள்ளப்பட்ட சோதனைச் சாவடிகள் பின்வருமாறு:

1. மண்டூர்
2. பட்டிருப்பு
3. களுதாவெளி முனை
4. அன்பளன்தீவு முனை
5. மண்முனை
6. வவுனதீவு
7. சாந்திவெளி தோணிமுகாம்
8. கருத்தபாலம்
9. சித்தாண்டிமுனை
10. கிரான்பாலம்
11. கின்னியடி தோணிமுகாம்
12. வாழைச்சேனை
13. மாங்கேணி
14. மகிந்தபுர
15. மூதூர்
16. உயிலன்குளம்
17. ஓமந்தை

# வடக்கு கிழக்கில் இடைக்கால தன்னாட்சி அதிகார சபையை நிறுவுவதற்கான உடன்படிக்கைக்கு தமிழ் மக்கள் சார்பாக விடுதலைப் புலிகள் முன்வைக்கும் ஆலோசனை (ISGA) - 2003



சட்டத்தின் ஆட்சிக்கான கோட்பாடுகள், மனித உரிமைகள், அனைத்து நபர்களதும் சமத்துவம் மற்றும் மக்களது சுயநிர்ணய உரிமைக்கு அமைவாகவும்,

இலங்கைத் தீவின் அனைத்து நபர்களுக்கும் நிலையான அமைதியைக் கொண்டு வருவதற்கு உறுதிபூண்டும்,

இத்தீவில் அமைதியைக் கொண்டுவருவதற்கு மாண்புமிகு நோர்வே அரசும் “நோர்வே மக்களும்”, சர்வதேச சமூகமும் ஆற்றும் சேவைகளைப் பாராட்டி ஏற்றுக்கொண்டு,



தமிழ் மக்களுக்கும் சிங்கள மக்களுக்குமிடையிலான சமாதான நடவடிக்கைகள் சவால்கள் நிறைந்த வரலாறாக அமைந்திருந்தாலும், அமைதி வழியான தீர்விற்கு உண்மையான வாய்ப்பு இருப்பதை இனம் கண்டு இறுதித் தீர்வை அடைவதற்கான செயல்முறை தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்க, சட்டங்களையும், கொள்கைகளையும் வகுத்து, வடக்குக் கிழக்கிலே மீள்குடியமர்வு, புனர்வாழ்வு, புனரமைப்பு, அபிவிருத்தி ஆகிய பணிகள் அனைத்தையும் செயற்றிறனுடன் விரைவாக நிறைவேற்றுவதன் மூலம் வடக்கு கிழக்கு மக்களது உடனடித் தேவைகளை வழங்குவதற்காக வடக்கு கிழக்குப் பிராந்தியத்திற்கு ஓர் இடைக்கால தன்னாட்சி அதிகார சபையை நிறுவுவதற்கு உறுதிபூண்டும்,

தமிழ் மக்களுக்கும் சிங்கள மக்களுக்கும் இடையிலான உறவுகள் பற்றிய வரலாறு, வாக்குறுதிகளை மீறிய ஒரு செயல்முறையாக இருந்தமையையும், இலங்கை அரசாங்கத்திற்கும் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட தமிழ் மக்களது பிரதிநிதிகளுக்கும் இடையே காத்திரமாகச் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களும் உடன்படிக்கைகளும் அடுத்தடுத்து பதவிக்கு வந்த இலங்கை அரசாங்கங்களால் ஒருதலைப்பட்சமாக, மதிக்கப்படாது முடிவிற்குக் கொண்டுவந்தமையையும் கவனத்திலெடுத்து, அடுத்தடுத்து பதவிக்கு வந்த அரசாங்கங்கள் தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொண்ட இனரீதியான துன்புறுத்தல், பாரபட்சம், அரச வன்முறை மற்றும் அரசுகள் பின்னிருந்து நடாத்திய வன்முறை ஆகியவற்றை மனதில் நிறுத்தியும்,

1976ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட வட்டுக்கோட்டைத் தீர்மானத்தைத் தொடர்ந்து நடைபெற்ற தேர்தலில் தமிழ் மக்களுக்கு ஒரு சுதந்திர, இறைமையுள்ள, மதசார்பற்ற அரசை அமைக்குமாறு தமிழ் மக்கள் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட தமது பிரதிநிதிகளுக்கு ஆணை வழங்கியிருந்தமையைக் கவனத்திலெடுத்தும்,

நான்கு தசாப்தங்களுக்கு மேலாக, வன்முறையின்றி, அமைதி வழியில் மேற்கொள்ளப்பட்ட அரசியலமைப்பு வரையறைக்குள் அமைந்த போராட்டம் பயனற்றதென நிரூபிக்கப்பட்டு, முரண்பாட்டை அமைதி வழியில் தீர்ப்பதற்கான மார்க்கங்கள் இல்லாதுபோன பின்னர்தான், ஒரு தற்காப்பு நடவடிக்கையாகவும், தமிழரது சுயநிர்ணய உரிமையைப் பெற்றுக்கொள்வதற்கான ஒரு வழிமுறையாகவுமே தமிழரது ஆயுதப் போராட்டம் தொடங்கியது என்பதை மனதில் நிறுத்தியும்,

முதலில் டிசம்பர் 2000இலும் பின்னர் டிசம்பர் 2001 இலும் ஒருதலைப்பட்சமாகப் போர் நிறுத்தத்தைப் பிரகடனப்படுத்தி, நெடுஞ்சாலைகளைத் திறந்து வர்த்தகத்திற்கும் மக்களது சுதந்திரமான நடமாட்டத்திற்கும் அனுசரணை வழங்கி, இயல்பு நிலை திரும்புவதற்கான ஓர் உகந்த சூழலையும் முரண்பாட்டிற்கு ஒரு உறுதியான தீர்வையும் காணும் நம்பிக்கையோடு சமாதானப் பேச்சுகளுக்குள் நேர்மையாக இறங்கி, சமாதானம் நோக்கிய நடவடிக்கைகளை தமிழீழ விடுதலைப் புலிகளே முதலில் முன்னெடுத்தார்கள் என்பதை மீள நினைவுப்படுத்தியும்,

2001 போர் நிறுத்த அறிவிப்பிற்கு மதிப்பளித்து தற்போதைய இலங்கை அரசாங்கம் தானும் ஓர் போர் நிறுத்தத்தை அறிவித்ததிலுள்ள அரசியல் துணிவைக் கவனத்திற்கொண்டும்,

இலங்கைத் தீவிலுள்ள வடக்கு கிழக்குப் பகுதியின் சமூக, பொருளாதார, நிர்வாக மற்றும் பௌதீகக் கட்டுமாணங்களுக்கு அழிவை விளைவித்த போர், வடக்குக் கிழக்கிற்கே பிரதானமாக மட்டுப்படுத்தப்பட்டிருந்ததோடு, வடக்குக் கிழக்கே இலங்கைத் தீவில் போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசமாகத் தொடர்ந்தும் இருக்கிறது என்பதையும் உணர்ந்தும்,

2000ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில், வடக்குக் கிழக்கிலுள்ள பெரும்பான்மையான தமிழ் மக்கள் தமது செயல்கள் மூலம் தமிழீழ விடுதலைப் புலிகளைத் தங்கள் அதிகாரபூர்வமான பிரதிநிதிகள் என ஏற்றுக்கொண்டே தங்கள் வாக்கை வழங்கினார்கள் என்பதை இனம் கண்டும்,



இலங்கைத் தீவிலுள்ள வடக்குக் கிழக்கின் பெரும்பான்மையான பகுதி மீது தமிழீழ விடுதலைப் புலிகள் கட்டுப்பாட்டையும் நியாயாதிக்கத்தையும் செயற்றிறன் வாய்ந்த முறையில் செயற்படுத்துகின்றமையைக் கருத்திற் கொண்டும்,

பேச்சுவார்த்தை மூலமான ஒரு இறுதித் தீர்வை அடைவதும் அதனை அமுல்படுத்துவதும் ஒரு நீண்டகாலமெடுக்கும் கருமமாக அமையலாம் என்பதை உணர்ந்தும்,

அனைத்து அகதிகளும் இடம்பெயர்ந்த நபர்களும் பாதுகாப்பாகவும் சுதந்திரமாகவும் திரும்பிச் செல்வதற்கான அவசியத்தையும், அவர்கள் வடக்குக் கிழக்கிலுள்ள தங்கள் வீடுகளுக்குத் தங்கு தடையின்றி சென்று, தரையிலும், கடலிலும் தமது வாழ்வாதாரங்களைப் பெற்றுக் கொள்வதற்கான அவர்களது உடனடித் தேவைகளையும் விலியுறுத்தியும்,

இலங்கை அரச நிறுவனங்களும் அவை வழங்குகின்ற சேவைகளும் வடக்கு கிழக்கு மக்களது உடனடித் தேவைகளை நிறைவேற்றுவதற்குப் போதுமானவையல்ல என உணரப்பட்டுள்ளமையை மனதிற்கொண்டும்,

அமைதிப் பேச்சுக்களின் போது அமைக்கப்பட்ட அவசர மனிதாபிமான மற்றும் புனர்வாழ்வு தேவைகளுக்கான உபகுழுவும் (சிரான்) ஏனைய உபகுழுக்களும் தோல்வியுற்றமையையும், மீண்டும் மீண்டும் செயலற்ற நிலைக்கு இட்டுச் சென்ற இந்த உப குழுக்களது அமைப்பு முறையே அந்தத் தோல்விகளுக்குக் காரணம் என்பதையும் இனங்கண்டு,

இலங்கை அரசாங்கம் தனது 2000ஆம் ஆண்டும் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டவாறு ஓர் இடைக்கால அதிகார சபைக்கான தேவையை அங்கீகரித்துள்ளமைக்கு மதிப்பளித்தும்,

சட்டம், ஒழுங்கைப் பேணுவது ஒரு நீதியானதும் சுயாதீனமுமான சமூகத்திற்கு இன்றியமையாத அம்சம் என்பதை உணர்ந்தும்,

போரினால் சிதைக்கப்பட்ட வடக்குக் கிழக்குப் பிரதேசத்தில் மீள்குடியமர்வு, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் அபிவிருத்திக்கான உடனடித் தேவைகளை நிறைவேற்றுவதற்கும் மற்றும் எந்தவொரு ஆட்சியியல் செயற்பாட்டை அங்கு மேற்கொள்வதற்கும் வருமானம் ஈட்டவேண்டியது தேவை என்பதை இனம் கண்டும்,

மீள்குடியமர்வு, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி என்பவற்றிற்கு, நிலத்தின் மீதான கட்டுப்பாடு முக்கியம் என்பதை இனம் கண்டும்,

1972ஆம், 1978ஆம் ஆண்டு அரசியலமைப்புக்களது உருவாக்கத்தில் தமிழ் மக்கள் பங்குபற்றவில்லை என்பதையும், அவை பாகுபாடான ஆட்சியியலை நிறுவனமயப்படுத்தி, தீர்மானம் எடுக்கும் செயல்முறையில் காத்திரமான பங்கினைத் தமிழ் மக்களுக்கு வழங்க மறுத்ததையும் மனதிற்கொண்டும்,

கடந்த தசாப்தத்தில் இனங்களுக்கிடையேயான முரண்பாடுகளைத் தீர்க்க புதுமையானதும் பரந்த சிந்தனையுடனுமான நடைமுறைகளுடே சமத்துவத்தின் அடிப்படையில் முரண்பட்ட தரப்புகளுக்கிடையே உடன்படிக்கையினை ஏற்படுத்துவதன் மூலமாக சர்வதேச மட்டத்தில் கடைப்பிடிக்கப்பட்ட வழக்கத்தைக் கவனத்திற் கொண்டும்,



போரிடும் தரப்புக்களிடையே சர்வதேச சமூகத்தின் அங்கீகாரத்தோடு எட்டப்படும் ஒப்பந்தங்களில் அல்லது உடன்படிக்கைகளில் மாத்திரமிருந்தே பெறப்படும் சட்ட ரீதியான பலத்தைக் கொண்டு போரினால் சிதைந்து நாடுகளில் இடைக்கால அரசாங்க ஒழுங்குகளை நிறுவுவதற்கான முன்னுதாரணங்களில் நம்பிக்கை கொண்டும்,

இலங்கைக்கான கண்காணிப்புக் குழுவின் (SLMM) பணியை உள்ளடக்கிய போர் நிறுத்த ஒப்பந்தம் SHIRAN மற்றும் வடக்கு, கிழக்கு மீள்கட்டுமான நிதியம் (NERF) அமைக்கப்பட்டமை போன்ற நடைமுறைகள் இத்தகைய ஒழுங்குகளை ஏற்படுத்துவதற்குரிய பெறுமதியான முன்னுதாரணங்களாக அமைகின்றன என்பதைக் கவனத்திற் கொண்டும்,

மேலே கூறப்பட்டனவற்றின் அடிப்படையில், சம்பந்தப்பட்ட தரப்புக்களான தமிழீழ விடுதலைப் புலிகளும் இலங்கை அரசாங்கமும் கீழ்வரும் ஏற்பாடுகளுக்கு இத்தால் இணங்குகின்றன.

**1. இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை**

பேச்சுவார்த்தை மூலமான இறுதித் தீர்வு எட்டப்பட்டு அமுல்படுத்தப்படும் வரை, வடக்குக் கிழக்கிலுள்ள அம்பறை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை மற்றும் வவுனியா ஆகிய எட்டு மாவட்டங்களையும் உள்ளடக்கி ஒரு இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை (Interim Self-Governing Authority - ISGA ) நிறுவப்படும்.

ISGA இல் முஸ்லிம் சமூகத்தினது பங்கை உருவாக்கம் செய்வதில் கலந்துகொள்வதற்கு அவர்களது பிரதிநிதிகளுக்கு உரிமை உண்டு.

**2. ISGA இன் அங்கத்துவ அமைப்பு**

2.1. இந்த உடன்படிக்கையில் சம்பந்தப்படுகின்ற தரப்புகளால் தீர்மானிக்கப்படும் எண்ணிக்கையிலான உறுப்பினர்களை ISGA கொண்டிருக்கும்.

2.2a. தமிழீழ விடுதலைப் புலிகளால் நியமிக்கப்படுகின்ற உறுப்பினர்கள்.

2.2b. இலங்கை அரசாங்கத்தால் நியமிக்கப்படுகின்ற உறுப்பினர்கள்.

2.2c. வடக்கு கிழக்கிலுள்ள முஸ்லிம் சமூகத்தால் நியமிக்கப்படுகின்ற உறுப்பினர்கள்.

2.3. கீழ்வருவனவற்றை உறுதி செய்யக்கூடிய விதத்தில் உறுப்பினர்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும்.

2.3a. ஐளுபுயுஇல் தமிழீழ விடுதலைப் புலிகளின் நியமனதாரிகளே அறுதிப் பெரும்பான்மையினராக இருப்பர்.

2.3b. மேலுள்ள உபவிதி (a) இற்கு பங்கம் ஏற்படாத வகையில் வடக்குக் கிழக்கிலுள்ள முஸ்லிம் மற்றும் சிங்கள சமூகங்கள் ISGAஇல் பிரதிநிதித்துவத்தைக் கொண்டிருக்கும்.



2.4. தலைவர் (Chairperson) ISGA இலுள்ள பெரும்பான்மை வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டு ISGAஇன் பிரதான நிறைவேற்று அதிகாரியாகச் செயற்படுவார்.

2.5. வடக்குக், கிழக்கிற்கான பிரதான செயலாட்சியரையும் அவரது கடமைகளை ஆற்றுவதில் உதவுவதற்கு தேவைப்படக்கூடிய ஏனைய அதிகாரிகளையும் தலைவர் நியமிப்பார். இந்த நியமனம் ஏதேனையும் இடைநிறுத்துவதற்கு அல்லது முடிவுக்குக் கொண்டு வருவதற்கான அதிகாரங்களையும் தலைவர் கொண்டிருப்பார்.

**3. தேர்தல்கள்**

சரத்துக்கள் 2.2 மற்றும் 2.3இன் ஏற்பாடுகள், ISGA இற்கான தேர்தல்கள் நடாத்தப்படும் வரை தொடரும். இந்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்து ஐந்தாண்டின் முடிவில் இறுதித் தீர்வு எட்டப்படாமலும் அமுல்படுத்தப்படாமலும் விட்டால், இந்த ஐந்தாண்டு காலப்பகுதி முடிவடைகையில் தேர்தல்கள் நடாத்தப்படும். ISGA ஆல் நியமிக்கப்படும் ஒரு சுயாதீனமான தேர்தல் ஆணைக்குழு, சுதந்திரமானதும் நேரடியானதுமான தேர்தல்களை சர்வதேசக் கண்காணிப்பின் கீழ் சர்வதேச ஜனநாயகக் கோட்பாடுகள் மற்றும் நியமங்களுக்கு அமைவாக நடாத்தும்.

**4. மனித உரிமைகள்**

சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ளவாறு அனைத்து உரிமைகளும் வடக்குக் கிழக்கிலுள்ள மக்களுக்கு வழங்கப்படும். ISGA இயற்றும் சட்டம், ஒழுங்கு முறை, தீர்ப்பு, கட்டளை, தீர்மானம் எல்லாம் மனித உரிமைகள் பாதுகாப்பிற்கென சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்களுக்கு அமைவாக இருத்தல்

வேண்டும். ISGA ஆல் நியமிக்கப்படும் ஓர் சுயாதீனமான ஆணைக்குழு இந்த மனித உரிமைகளுக்கான கடப்பாடுகள் எல்லாம் பேணப்படுவதை உறுதி செய்யும். மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு ஒரு காத்திரமான ஒழுங்கமைப்பை நிறுவுவதற்கு இந்த ஆணைக்குழு சர்வதேச மனித உரிமை அமைப்புகளின் உதவியை நாடும். இந்த ஆணைக்குழு எந்தவொரு தனி நபரிடமிருந்தும் முறைப்பாடுகளை ஏற்று விசாரணை செய்து, பாதிக்கப்பட்ட எந்தவொரு நபருக்கும் வழங்க வேண்டிய நட்டஈட்டைப் பரிந்துரைத்து, அந்த நபரின் உரிமைகள் மீள நிலை நிறுத்தப்படுவதை உறுதி செய்யும்.

**5. மதச்சார்பின்மை**

வடக்குக், கிழக்கில் எந்தவொரு மதத்திற்கும் விசேட இடம் வழங்கப்பட மாட்டாது.

**6. பாகுபாட்டிற்கெதிரான தடை**

வடக்குக் கிழக்கிலுள்ள மதம், இனம், சாதி, தேசியம் அல்லது பிராந்தியம், வயது அல்லது ஆண் பெண் என்பவற்றின் அடிப்படையில் பாகுபாடு காட்டப்படாதிருப்பதை ISGA உறுதிசெய்யும்.

**7. இலஞ்ச ஊழலைத் தடுத்தல்**

ISGA தனது நிர்வாகத்தில் அல்லது தனது நிர்வாகத்தின் கீழ் இலஞ்சம் அல்லது ஊழல் எதுவும் இடம்பெறாதிருப்பதை உறுதி செய்யும்.

**8. அனைத்து சமூகங்களினதும் பாதுகாப்பு**

கலாசாரம் அல்லது மதம் தொடர்பாக, ஒரு சமூகத்திற்கு வழங்காத தனிச் சலுகைகளை அல்லது அவர்கள் மீது திணிக்காத அசௌகரியங்களை இன்னொரு சமூகத்திற்கு வழங்கும் அல்லது திணிக்கும் சட்டம், ஒழுங்கு முறை, விதி, கட்டளை, அல்லது தீர்மானம் எதுவும் மேற்கொள்ளப்பட மாட்டாது.



**9. ISGA இன் நியாயாதிக்கம்**

9.1 மீள் குடியமர்வு, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் தற்போதுள்ள சேவைகளையும் வசதிகளையும் மேம்படுத்தி உயர்த்துதல் உள்ளடங்கலான அபிவிருத்தி (இதன் பின்னால் RRRD எனக் குறிப்பிடப்படுகின்றது) வரி விதித்தல் உள்ளடங்கலான வருவாய் ஈட்டல், வருமானம், தீர்வையும் சுங்கவரியும், சட்டமும் ஒழுங்கும் மற்றும் காணி தொடர்பான அதிகாரங்கள் உள்ளடங்கலாக வடக்குக் கிழக்கை ஆளுகை செய்வதற்கு வேண்டிய அனைத்து அதிகாரங்களையும் ISGA கொண்டிருக்கும்.

இந்த அதிகாரங்களுக்கள், வடக்குக் கிழக்கிலும் வடக்குக் கிழக்கிற்காகவும் பிராந்திய நிர்வாகம் தொடர்பாக இலங்கை அரசாங்கத்தால் செயல்படுத்தப்படும் அனைத்து அதிகாரங்களும் செயற்பாடுகளும் உள்ளடங்கும்.

9.2 இவ்வாறான அதிகாரங்களைப் பிரயோகிப்பதற்கும் செயற்பாடுகளைச் செயற்படுத்துவதற்குமான விரிவான வழிமுறைகள் இந்த ஒப்பந்தத்தில் சம்பந்தப்பட்ட தரப்புகளால் மேலும் பேசி முடிவெடுக்கப்படும்.

**10. அதிகாரங்களை வகை பிரித்தல்**

வடக்கு, கிழக்கில் நீதியை நிர்வகிப்பதற்கான தனியான அமைப்புகள் உருவாக்கப்பட்டு அந்த அமைப்புகளுக்கு நீதி அதிகாரங்கள் உரித்தாக்கப்படும். நீதிபதிகளது சுயாதீனத்தை உறுதி செய்வதற்கு ISGA பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்கும்.

இந்த ஒப்பந்தத்தின் சரத்து 4 (மனித உரிமைகள்) மற்றும் 22இற்கு (பிணக்குத் தீர்த்தல்) பங்கம் ஏற்படாதவாறு, இந்த சரத்தின் கீழ் உருவாக்கப்படும் அமைப்புகளே இந்த உடன்படிக்கையை அர்த்தப்படுத்தி அமுல்படுத்துவதில் எழும் அனைத்துப் பிணக்குகளையும் இந்த உடன்படிக்கையில் அல்லது இந்த உடன்படிக்கையின் கீழ் அல்லது இந்த உடன்படிக்கையின் ஏதேனும் ஏற்பாட்டில் எழும் ஏதேனும் பிணக்குகளையும் தீர்ப்பதற்கு தனியானதும் தனித்துவமானதுமான நியாயாதிக்கத்தைக் கொண்டிருக்கும்.

**11. நிதி**

ஓர் வருடாந்த வரவு-செலவு அறிக்கையைத் தயாரிக்கும். ISGA ஆல் நியமிக்கப்படும் அங்கத்தவர்களைக் கொண்ட ஒரு நிதி ஆணைக்குழு அமைக்கப்படும். இந்த அங்கத்தவர்கள் நிதி, நிர்வாகம் அல்லது வாணிபம் போன்ற துறைகளில் உயர் பதவி வகித்தவர்களாகவோ, அல்லது துறைகளில் சிறப்புத் தேர்ச்சி பெற்றவர்கள் என இனம் காணப்பட்டவர்களாகவோ இருக்க வேண்டும். இலங்கை அரசாங்கத்தின் ஒன்று திரட்டிய நிதியத்திலிருந்து (Consolidated Fund) வடக்குக், கிழக்கிற்கு ஒதுக்கப்பட வேண்டிய நிதியின் அளவை இந்த ஆணைக்குழு பரிந்துரைக்கும். இப்பரிந்துரைகளை செயற்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கம் தனது நல்லெண்ண முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

சம விகிதத்தில் பகிர்ந்தளிப்பதற்கு உரிய கவனம் செலுத்தி, ஐளுபுயு தன்வசமுள்ள நிதிகளை எப்படி பயன்படுத்துவதெனத் தீர்மானிக்கும். ISGA வசமுள்ள நிதிகளுள் வடக்குக், கிழக்குப் பொது நிதியம், வடக்கு, கிழக்கு மீள்கட்டுமான நிதியம், விசேட நிதியம் ஆகியன உள்ளடங்கியிருக்கும்.

வடக்கு, கிழக்கில் அல்லது வடக்கு, கிழக்கிற்காக இலங்கை அரசு செய்யும் அனைத்துச் செலவுகளும் ISGA இன் கட்டுப்பாட்டின் கீழ் வருகின்றன என்பதை இலங்கை அரசு ஏற்றுக்கொள்கிறது.



11.1 வடக்குக், கிழக்குப் பொது நிதியம்: வடக்கு, கிழக்கு பொது நிதியம் ISGA இன் கட்டுப்பாட்டின் கீழ் இருப்பதோடு பின்வருவனவற்றை உள்ளடக்கியிருக்கும்.

11.1ய இலங்கை அரசாங்கம் ஏதேனும் குறித்த நோக்கங்களுக்காக வழங்கும் அனைத்து உதவிகளிலிருந்தும் கடன்களிலிருந்தும் கிடைக்கும் பணம் மற்றும் ISGA இற்கு வழங்கப்படும் ஏனைய பிற கடன்கள் மூலம் பெறப்படும் பணம்.

11.1டி அரசுகளுடனோ, நிறுவனங்களுடனோ ஏனைய அமைப்புகளுடனோ ஏற்படுத்திக் கொள்ளும் ஒப்பந்தங்களின் அடிப்படையில் வடக்கு, கிழக்கிற்கென ஸ்ரீ லங்கா அரசாங்கத்தினால் குறித்தொதுக்கப்படும் நிதிகள்.

11.1உ கீழே குறிப்பிடப்படும் நிதியங்கள் தவிர்ந்த ஐளுபுயுக்கு கிடைக்கும் ஏனைய வரவுகள்.

11.2 வடக்குக் கிழக்கு மீள்கட்டுமான நிதியம்: நேசுகு அமைப்பு, கட்டுப்பாடு ISGA இற்கு மாற்றப்படுவது தவிர, ஏனைய அம்சங்களில் அதன் தற்போதைய வடிவத்திலேயே தொடர்ந்தும் இருக்கும். வடக்குக் கிழக்கு மீள்கட்டுமானத்திற்காகக் கொடுக்கப்படும் அனைத்துக் கொடுப்பனவுகளும் நேசுகு இற்கூடாகப் பெறப்படும். நேசுகு நிதியத்திலிருந்து பெறப்படும் வளங்களைப் பயன்படுத்துவது தொடர்பாக ISGA நேரடியாக முடிவுகளை எடுத்துக் கண்காணிக்கும்.

11.3 விசேட நிதியம் மீள் குடியமர்வு, புனர்வாழ்வு, மீள் கட்டுமானம் மற்றும் அபிவிருத்தி ஆகியவற்றிற்கென்றே

வரும் கடன்களும் கொடுப்பனவுகளும், நேசுகு நிதியத்தினூடாக உள்வர முடியாதவிடத்து இந்த விசேட நிதியத்திற்குள் உள்வாங்கப்படும் ஏனைய நிதியங்களைப் போலவே இந்த விசேட நிதியமும் ISGA இன் கட்டுப்பாட்டில் இருக்கும்.

## 12. கடன் பெறுவதற்கும் உதவி பெறுவதற்கும் வர்த்தகத்திற்குமான அதிகாரங்கள்

உள்ளூரிலும், வெளியூரிலும் கடன் பெறுதல், உத்தரவாதங்களையும் இழப்பீடுகளையும் வழங்குதல், நேரடியாக உதவிகளைப் பெறுதல், உள்ளூர் மற்றும் வெளியூர் வர்த்தகத்தில் ஈடுபடுதல் அல்லது அதனை ஒழுங்கமைத்தல் போன்றவற்றிற்கான அதிகாரங்களை ISGA கொண்டிருக்கும்.

## 13. நிதிக் கணக்கீடும் கணக்காய்வும்

13.1 ISGA ஓர் கணக்காய்வாளர் நாயகத்தை நியமிக்கும்.

13.2 இந்த ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து நிதியங்களும் சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீடு மற்றும் கணக்காய்வு நியமங்களுக்கு அமைவாகச் செயற்படுத்தப்பட்டு, பேணப்பட்டு, கணக்கீடு செய்யப்படும். இந்தக் கணக்குகள் கணக்காய்வாளர் நாயகத்தால் ஆய்வு செய்யப்படும்.சர்வதேச மூலங்களிலிருந்து பெறப்படும் அனைத்து நிதிகளது கணக்காய்வும், ISGAஆல் நியமிக்கப்படும் சர்வதேசப் புகழ்பெற்ற நிறுவனத்தின் ஒப்புதலைப் பெற வேண்டும்.



## 14. மாவட்டக் குழுக்கள்

14.1 தனது சட்டவாக்க மற்றும் நிறைவேற்ற அதிகாரங்களைக் காத்திரமாகச் செயற்படுத்துகையில், மாவட்டங்களில் நிர்வாகத்தினை மேற்கொள்வதற்காக ஐளுபுயு மாவட்டக் குழுக்களை உருவாக்கி, இந்தக் குழுக்களுக்கு தான் தீர்மானிக்கின்ற அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கலாம். ஐளுபுயு இற்கும் குழுக்களுக்கும் இடையிலான ஒரு இணைப்பாளராகச் சேவையாற்றக் கூடியவாறு ஐளுபுயு இன் உறுப்பினர்கள் மத்தியிலிருந்து ISGA ஆல் இந்தக் குழுக்களது தலைவர்கள் நியமிக்கப்படுவார்கள்.

14.2 குழுவின் ஏனைய உறுப்பினர்களும் ஐளுபுயுஆல் நியமிக்கப்படுவதோடு இந்த நியமனங்கள் எதனையும் இடைநிறுத்துவதற்கு அல்லது முடிவுக்குக் கொண்டு வருவதற்கான அதிகாரங்களையும் ஐளுபுயு கொண்டிருக்கும். இந்த உறுப்பினர்களை நியமிக்கையில், அனைத்து சமூகங்களதும் பிரதிநிதித்துவத்தை உறுதி செய்வதற்கு உரிய கவனம் செலுத்தப்படும்.

14.3 இந்தக் குழுக்கள் ஐளுபுயு இன் கீழ் நேரடியாகச் செயற்படும்.

14.4 ISGA இன் பிரதான செயலாட்சியாளர் மாவட்டங்களில் பிரதான நிறைவேற்று அதிகாரிகளை நியமிப்பதோடு இந்தப் பிரதான நிறைவேற்று அதிகாரிகள், குழுக்களுக்குச் செயலாளர்களாகவும் செயற்படுவார்கள். இந்த நியமனங்கள் எதனையும் இடைநிறுத்துவதற்கு அல்லது முடிவுக்குக் கொண்டு வருவதற்கான அதிகாரங்களை பிரதான செயலாட்சியாளர் கொண்டிருப்பார்.

14.5 குழுக்களது அனைத்து நடவடிக்கைகளும் செயற்பாடுகளும் அந்தந்தக் குழுக்களது செயலாளர்கள் ஊடாக ஒருங்கிணைக்கப்படும்.

14.6 நிர்வாகத்திற்கு உதவியாக இருப்பதற்காக உப குழுக்களும் நியமிக்கப்படலாம்.

**15. நிர்வாகம்**

தனது நிறைவேற்று அதிகாரங்களைச் செயற்படுத்துவதன் ஒரு பகுதியாக இந்த ஒப்பந்தத்தின் சரத்து 9இல் குறிப்பிடப்பட்ட அதிகாரங்களுடன் தொடர்புபட்டவடக்கு, கிழக்கிலுள்ள அனைத்து நிர்வாக அமைப்புக்களும் ஆளணியும் ஐளுபுயு இன் கட்டுப்பாட்டிலும் நெறிப்படுத்தலின் கீழும் அமையும்.

ISGA தற்றுணிவுடன் தேவையான துறைகளில் நிபுணர்களது ஆலோசனைக் குழுக்களை உருவாக்கலாம். இந்த ஆலோசனைக் குழுக்கள் பொருளாதார விவகாரங்கள், நிதி விவகாரங்கள், நீதி விவகாரங்கள், மீள் குடியமர்வு மற்றும் புனர்வாழ்வு விவகாரங்கள், அடிப்படைக் கட்டுமாணங்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் அத்தியாவசிய சேவைகள் ஆகியனவற்றிற்கும் இவற்றிற்கென மட்டுப்படுத்தப்படாமல் இன்னும் தேவையான துறைகளுக்கும் அமைக்கப்படலாம்.

**16. காணி நிர்வாகம்**

சரத்து 9இல் (ISGA இன் நியாயாதிக்கம்) குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரங்களைச் செயற்படுத்துவதற்குக் காணி முக்கியம் என்பதால் வடக்குக் கிழக்கிலுள்ள தனியாருக்குச் சொந்தமானவை தவிர்ந்த எல்லாக் காணிகளையும் பகிர்ந்தளிப்பதற்கும் மற்றும் பொருத்தமான தேவைகளுக்குப் பயன்படுத்துவதைத் தீர்மானிப்பதற்கான அதிகாரத்தை ISGA கொண்டிருக்கும்.



காணிகளிலிருந்து விரட்டப்பட்ட மக்களது காணிகளின் உரிமை, அத்துமீறிக் குடியேறியோர் வசிக்கும் காணிகளின் உரிமை போன்றவற்றை, காலம் எவ்வளவு கடந்திருந்தாலும் கூட, விசாரித்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கெனகாணி நிர்வாகம் தொடர்பான ஒரு விசேட ஆணைக்குழுவை ISGA நியமிக்கும். விசேட ஆணைக்குழு செயற்படுகின்ற கால வரையறையை ISGA தீர்மானிக்கும்.

**17. ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்களில் மீள்குடியமர்வு**

இலங்கை அரசாங்கத்தின் ஆயுதப் படைகளால் காணிகள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளமையும், இத்தகைய காணிகளுக்கு உரித்துடைய பொதுமக்கள் தங்குதடையின்றிச் செல்வதற்கான உரிமையை மறுப்பதும் சர்வதேசச் சட்ட நியமங்களை மீறும் செயலாகும். இந்தக் காணிகள் உடனடியாக விடுவிக்கப்பட்டு அவற்றின் உரிமை முன்னைய உரித்தாளர்களுக்கு மீளளிக்கப்பட வேண்டும். சொந்தக்காரர்களிடமிருந்து அவர்களைக் காணிகளைக் கடந்த காலங்களில் பறித்து வைத்திருந்தமைக்காக இலங்கை அரசாங்கம் அவர்களுக்குக் கட்டாயம் நட்ட ஈடு செலுத்த வேண்டும். இந்தக் காணிகளில் இடம் பெயர்ந்த மக்களையும், அகதிகளையும் மீளக் குடியமர்த்திப் புனர்வாழ்வு அளிப்பதற்கு ஐளுபுயு பொறுப்பாக இருக்கும்.

**18. கடல் மற்றும் கரையோர வளங்கள்**

வடக்குக் கிழக்கு நிலப் பிரதேசத்தை அண்டிய கடல் மற்றும் கரையோர வளங்கள் மீது ISGA கட்டுப்பாட்டைக் கொண்டிருப்பதோடு இந்த வளங்களைப்பயன்படுத்துவது தொடர்பாகத் தேவைப்படும் கட்டுப்பாடுகளை ஒழுங்கமைப்பதற்கான அதிகாரங்களையும் கொண்டிருக்கும்.

### 19. இயற்கை வளங்கள்

வடக்குக் கிழக்கிலுள்ள இயற்கை வளங்கள் மீது ISGA கட்டுப்பாட்டைக் கொண்டிருக்கும். அத்தகைய இயற்கை வளங்கள் தொடர்பாக ஏற்கனவே செய்யப்பட்ட ஒப்பந்தங்களின் கீழ் வரவேண்டிய பணம் அனைத்தும் ISGA ற்கு செலுத்தப்படுவதை இலங்கை அரசு உறுதி செய்யும். நடைமுறையிலிருக்கும் அத்தகைய ஒப்பந்தங்களில் எதிர்காலத்தில் ஏற்படுத்தக்கூடிய மாற்றங்கள் யாவும் ISGA இன் சம்மதத்துடனேயே செய்யப்பட வேண்டும். எதிர்காலத்தில் இவற்றிற்கான ஒப்பந்தங்கள் ஐளுபுயு உடன் செய்யப்பட வேண்டும்.

### 20. நீர்ப் பயன்பாடு

ஆறுகளின் கீழ்ப் பகுதியில் நீர் பெறுவோருக்கு நீதியாகவும், நியாயமாகவும் சம அளவிலும் நீர் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டிய கடப்பாடு ஆறுகளின் தோற்றுவாய்ப் பகுதிகளில் நீர் பெறுவோருக்கு உண்டு. இலங்கை அரசாங்கமும், ISGA உம் நீர்வளப் பாவனையில் சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட இந்தக் கோட்பாடு பின்பற்றப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

### 21. ஒப்பந்தங்களும் குத்தகைகளும்

ISGA இன் நியாயாதிக்கத்தின் கீழ் வரும் விடயங்கள் தொடர்பாக எதிர்காலத்தில் எய்தப்படும் ஒப்பந்தங்கள் அனைத்தும் ISGA மேற்கொள்ளப்பட வேண்டும். நடைமுறையிலிருக்கும் ஒப்பந்தங்கள் அப்படியே தொடரும். ஆனால், இந்த ஒப்பந்தங்களின் கீழ் கிடைக்கும் அனைத்து வருமானங்களும் ISGA இற்கு கொடுக்கப்படுவதை இலங்கை அரசு உறுதி செய்ய வேண்டும். அத்தகைய ஒப்பந்தங்களில் ஏதேனும் மாற்றம் செய்வதாயின் ISGA இன் சம்மதத்துடனேயே மேற்கொள்ளப்பட வேண்டும்.



### 22. பிணக்குத் தீர்த்தல்

இந்த ஒப்பந்தச் சரத்துகளுக்கும் அர்த்தம் கற்பிப்பதிலோ, நடைமுறைப்படுத்துவதிலோ இரு தரப்பினரிடையேயும் பிணக்கு ஏதேனும் ஏற்பட்டு, அப்பிணக்கு நோர்வே அரசின் நல்லிணக்கம் உட்பட இரு தரப்பினருக்கும் ஏற்புடைத்தான வேறு ஏதாவது வழியில் தீர்க்கப்பட முடியாவிட்டால் மூன்று அங்கத்தவர்கள் இதில் இருவர் தரப்பிற்கு ஒருவர் என்ற ரீதியில் இரு தரப்பினராலும் நியமிக்கப்படுவர். மூவர் கொண்ட ஓர் இணக்க மன்றின் முன் விசாரிக்கப்படும். இரு தரப்பினராலும் கூட்டாக நியமிக்கப்படும் மூன்றாவது அங்கத்தவர் மன்றின் தலைவராகச் செயற்படுவார். தலைவர் நியமனத்தில் ஏதேனும் கருத்து வேறுபாடு ஏற்படுமிடத்து, மன்றின் தலைவரை நியமிக்குமாறு சர்வதேச நீதிமன்றத் தலைவரை (சநளளைநவெ ழக வாந ஐவெநசயெவழையெட ஊழரசவ ழக துரளவைைந) இரு தரப்பினரும் கோருவர்.

எந்தவொரு தகராறு பற்றியும் தீர்மானமெடுக்கையில் பிணக்குத் தீர்ப்பவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளதும், இலங்கை அரசாங்கத்தினதும் சமத்துவமான நிலையை உறுதி செய்வதோடு இந்த உடன்படிக்கையின் ஏற்பாடுகளை மாத்திரமே உசாத்துணையாகக் கொண்டு பிணக்குகளைத் தீர்ப்பர். பிணக்குத் தீர்ப்பவர்களது தீர்மானம் இறுதியானதாகவும், முடிவானதாகவும் இருப்பதோடு, பிணக்கில் சம்பந்தப்பட்ட தரப்புகளையும் கட்டுப்படுத்தும்.

### 23. செயற்படும் காலம்

பேச்சுவார்த்தை மூலமான நிரந்தர தீர்வொன்றின் விளைவாக வடக்கு, கிழக்கிற்கென ஓர் புதிய அரசாங்கம் நிறுவப்படும் வரை, இந்த ஒப்பந்தம் தொடர்ந்து நடைமுறையிலிருக்கும். அத்தகைய ஒரு தீர்வை எவ்வளவு விரைவாக அடைய முடியுமோ,

அவ்வளவு விரைவாக அடைவதற்கு இரு தரப்பும் நல்லெண்ணத்துடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடும்.

இருப்பினும் கூட, இந்த ஒப்பந்தத்தில் சம்பந்தப்பட்ட தரப்புக்களிடையே நான்கு வருடங்களின் முடிவில் இறுதி உடன்படிக்கை எதுவும் எட்டப்படாவிட்டால், ஒப்பந்தத்தின் விதிகளை மேலும் அதிகரித்து, தெளிவுபடுத்தி, வலுப்படுத்தும் நோக்கத்தில் இரு தரப்பும் நல்லெண்ணத்தோடு பேச்சுக்களில் ஈடுபடும்.



# சுனாமி நிவாரண பொதுக் கட்டமைப்பு - 2005



விடுதலைப் புலிகளின் சார்பில் திரு. ரஞ்சன்

இலங்கை அரசின் சார்பில் திரு. எம்.எஸ். ஜயசிங்க

- சுனாமி நிவாரண பொதுக் கட்டமைப்பு நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஆவணம்.
- சுனாமியினால் பாதிக்கப்பட்ட அம்பாறை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை ஆகிய 6 மாவட்டங்களைச் சார்ந்த கடற்கரையோரங்களில் வாழும் மக்களுக்குத் துரித நிவாரணங்கள், புனர்வாழ்வு, மீள் குடியேற்றம், மறுசீரமைப்பு, அபிவிருத்தி நடவடிக்கைகளை மனித நேயத்துடன் மேற்கொள்வதற்கு இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் பரஸ்பர

நம்பிக்கையுடன் உயரிய சக்தியைப் பயன்படுத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

**கட்டமைப்பு**

(அ) சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டோருக்கான புனர்வாழ்வு நடவடிக்கைகளை கூட்டிணைத்து, திட்டமிட்டு செயற்படுத்துவதற்கு ஒருங்கிணைந்த நெறிப்படுத்தும் முகாமைத்துவ நிறுவனத்தை ஸ்தாபித்தல்.

- சுனாமிக்குப்பின்னைய கடற்கரைப் பிரதேச சீரமைப்புக்குழு (பிரதான குழு)
- ஆறு மாவட்டங்களுக்கும் மாவட்ட மட்டத்திலான சுனாமிக்குப் பின்னைய கடற்கரைப் பிரதேச மறுசீரமைப்புக்குழு (பிரதேசக்குழு)
- அம்பாறை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை, மாவட்டங்களுக்கு (மாவட்ட மறு சீரமைப்புக் குழுக்கள்)
- 6 மாவட்டங்களுக்கு பிரதேச நிதியம் ஒன்றை ஸ்தாபித்தல்
- சுனாமிக்குப் பின்னைய கடற்கரையோர நிதியம்.



# சுனாமிக்கு பின்னரான தொழிற்பாட்டு முகாமைத்துவக் கட்டமைப்பொன்றை (P.Toms) தாபிப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம். (MOU)

**முன்னுரை**

2004 டிசெம்பர் 26 ஆம் திகதியன்று இலங்கையைத் தாக்கிய சுனாமி (சுனாமி முன்னொரு போதும் இல்லாத அளவில் மனித உயிர்களையும் ஆதனங்களையும் அழித்துள்ளமையாலும்: இப்பொது அனர்த்தத்தை எதிர்கொள்வதில் சிங்கள, தமிழ், முஸ்லிம் மற்றும் ஏனைய சமுதாயங்கள் அனைத்தும் மனிதாபிமான ரீதியில் ஒத்துழைக்க வேண்டிய அவசர தேவை ஒன்றுள்ளதானாலும் சுனாமியால் தாக்கப்பட்ட இலங்கையின் சகல பாகங்களுக்கும் சுனாமிக்குப் பின்னான நிதிகளின் சமமான ஒதுக்கீடு, ஏற்றுக்கொள்ளத்தகு தேவை மதிப்பீடுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட உள்ளதாலும் இந்த அவசரமான மனிதாபிமானத் தேவையை அங்கீகரித்து ஒத்துழைக்கும் மனப்பான்மையுடனும், அம்பாறை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் திருகோணமலை ஆகிய ஆறு மாவட்டங்களிலுள்ள கரையோர சமுதாயங்களுக்கு துரிதமான நிவாரணத்தையும் புனர்வாழ்வையும், புனரமைப்பையும், அபிவிருத்தியையும்

வழங்குவதற்கும் அத்துடன் பாதிக்கப்பட்ட இடப்பரப்புகளை மீளக்கட்டியெழுப்பும் நடைமுறைக்கு வசதி வாய்ப்பளிப்பதற்கும் அதனைத் துரிதப்படுத்துவதற்கும் என இலங்கை அரசாங்கமும், தமிழீழ விடுதலைப் புலிகளும் நல்லெண்ணத்துடனும் அவற்றின் முனைப்பான முயற்சிகளைப் பயன்படுத்தியும் ஒருமித்துச் செயலாற்றத் தீர்மானித்தமையாலும்:சமதாயங்களிற்கிடையிலும் திறத்தவர்களுக்கிடையிலும் அத்தகைய ஒத்துழைப்பிற்கு வசதிவாய்பளிப்பதற்காக P-Toms ஒன்றைத்தாபிப்பதற்கான தேவையொன்றுள்ளதாலும் இப்போது, முற்போந்ததை கருத்திற் கொண்டு திறத்தவர்கள் இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தினை செய்து கொண்டுள்ளதுடன்பின்வருமாறும் உடன்படுகின்றனர்: **1.அமைப்புஅ.** சுனாமிக்கு பின்னரான பணியைத்திட்டமிடல், நடைமுறைப்படுத்தல், இயைபு படுத்தல், ஆகிய நோக்கங்களுக்காக ஒருங்கிணைந்த தொழிற்பாட்டு முகாமைத்துவக் கட்டமைப்பொன்றை தாபிக்கப்படுதல் வேண்டும். அத்தகைய கட்டமைப்பு பின்வருவனவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும். :**1.** சுனாமிக்குப் பின்னரான கரையோரப் புனரமைப்புக்குழு**2.** ஆறு மாவட்டங்களுக்குமான சுனாமிக்கு பின்னான கரையோரப் புனரமைப்புக் குழு (பிராந்தியக்குழு) அத்துடன்**3.** அம்பாறை, மட்டக்களப்பு, யாழப்பாணம், கிளிநொச்சி, முல்தைத்தீவு, மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்கள் ஒவ்வொன்றிற்கும் சுனாமிக்குப் பின்னரான கரையோரப் புனரமைப்புக் குழுக்கள் (மாவட்டக்குழுக்கள்)**ஆ.** உயர் மட்டக்குழுவும் பிராந்தியக்குழுவும் மாவட்டக் குழுக்களும் சுனாமி அனர்த்த வலையமைப்பிலுள்ள (R.m.t) (T.D.Z) சகலரதும் துயரங்களை கருத்திற் கொள்ளக் கூடியவாறான முறையொன்றில் அவற்றின் பணிகளை நிறைவேற்றுதல் வேண்டும் என்பதுடன் இனப்பூர்வாங்கம், பால்நிலை, மொழி, மதம், அரசியல் அல்லது வேறு அபிப்பிரயாயம், சமூகப்பூர்வாங்கம், பிறப்பு அல்லது வேறு அந்தஸ்து போன்ற ஏதுக்களின் மீது எந்தவொரு



நபருக்கும் எதிராக பாரபட்சமின்றி செயற்படவேண்டும். **2. நோக்கெல்லை அ.** உயர்மட்டக்குழுவினதும் பிராந்தியக்குழுவினதும் மாவட்டக் குழுவினதும் நோக்கெல்லை முறையே பிரிவுகள் 5(அ), 6(ஆ) 8(ஆ) என்பவற்றில் வரைபிலக்கணம் கூறப்பட்ட பணிகளைப் புரிவதற்கும் பிராந்தியக்குழுக்களின் விடயத்தில் 8(அ) என்னும் பிரிவாலும் (கீழ் குறித்துரைக்கப்பட்டவாறு) பிரத்தியேகமாக 'R.m.t" விற்கும் பயனுறுவதாகவும் வரையறுக்கப்படுதல் வேண்டும்.**ஆ.** சுனாமி அனர்த்த வலயம் (R.m.t) சுனாமியால் பாதிக்கப்பட்ட இடப்பரப்பாக வரைபிலக்கணம் செய்யப்படுதல் வேண்டும்.**இ.** 'R.m.t" ஆனது கடலையடுத்துள்ளதும் சராசரி தாழ்த்தப்பட்ட நீர்மட்டத்திலிருந்து தரை நோக்கி இரண்டு கிலோ மீற்றர் எல்லைக்குள் அமைந்துள்ளதுமான சுனாமியால் பாதிக்கப்பட்ட இலங்கையின் எல்லாக்காணி இடப்பரப்பையும் உள்ளடக்குதல் வேண்டும்.**ஈ.** உயர்மட்டக்குழு, மேலதிக காணி இடப்பரப்புகளை 'R.m.t." வற்குள் கொண்டு வரத்தீர்மானிக்கலாம். எவ்வாறாயினும் அத்தகைய எல்லா காணி இடப்பரப்புகளும் சுனாமியால் நேரடியாக தாக்கத்திற்குள்ளாக்கப்பட்டு அல்லது சுனாமியின் விளைவாக ஆட்களின் புலம் பெயர்வினாலும் மீள் குடியேற்றத்தினாலும் நேரடியாகப் பாதிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.**உ.** கடல் நீரால் மேவப்பட்ட கரையோர இடப்பரப்புகளில் கடைப்பிடிக்கப்பட வேண்டிய அல்லது அவற்றைப் பாதிக்கின்ற வழிமுறைகளுக்கான புதிய பிரேரணைகளை சர்வதேச முகவராண்மையொன்றில் அனுசரணையின் கீழ் பொறுப்பேற்கப்படுதல் வேண்டும். அத்தகைய வழிமுறைகள் சுனாமியின்போது கடலுக்குள் இழக்கப்பட்ட பொருட்களை மீளப்பெறுவதற்கான வழிமுறைகளையும், பாதிக்கப்பட்ட கரையோரங்களையும், கடற்கரைகளையும் கடல் நீரால் குழப்பப்பட்டிருக்கும்போது கூட துப்பரவு செய்தலையும் அத்துடன் சுனாமியால் பாதிக்கப்பட்டுள்ள இறங்கு துறைகளை அல்லது வர்த்தக

கடற்தொழில் துறைமுகங்களை பழுது பார்த்தலையும் தீர்மானித்தலையும் உள்ளடக்கக்கூடும். **ஊ.** இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் இடையிலான 2002 பெப்ரவரி 23 எனத்தேதியிடப்பட்ட போர் நிறுத்த உடன்படிக்கை முழுவலுவுடனும் பயனுறுதியுடனும் தொடர்ந்திருத்தல் வேண்டும் என்பதுடன் இந்தப்புரிந்துணர்வு ஒப்பந்தத்திலுள்ள எதுவும் அத்தகைய உடன்படிக்கையை பங்கப்படத்துவதாகவோ அல்லது அதன் நியதிகளை ஏதேனும் விதத்தில் மாற்றுவதாகவோ பொருள் கொள்ளப்படுதல் ஆகாது. **3. நடைமுறையில் இருக்கும் காலப்பகுதி.அ.** இப்பரிந்துணர்வு ஒப்பந்தம் இரு திறத்தவர்களாலும் அது நிறைவேற்றப்படும் திகதியிலிருந்து ("தொடங்கும் தேதி") வலுவுக்கு வருதல் வேண்டும் என்பதுடன் தொடங்கும் தேதியிலிருந்து ஓராண்டு காலப் பகுதியொன்றிற்கு தொடர்ந்து நடைமுறையிலிருத்தல் வேண்டும்.**ஆ.** திறத்தவர்களின் உடன்பாட்டின் மூலம் இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தினை மேலும் ஒரு காலப்பகுதிக்கு அல்லது காலப்பகுதிகளுக்கு நீடிக்கும் விருப்பத்தெரிவை கொண்டிருத்தல் வேண்டும்.**4. ஆகு செலவும் செலவுகளும்.**P.Toms என்னும் கட்டமைப்பை தாபித்தல், அதன் செயற்பாடு என்பன தொடர்பில் ஏற்படும் எல்லா ஆகு செலவுகளையும் மற்றும் செலவுகளையும், ஏற்குமாறு உதவி வழங்குனர்கள் கேட்டுக்கொள்ளப்படுதல் வேண்டும்.**5. உயர் மட்டக்குழு.அ.** புவியியல் நோக்கெல்லைஉயர் மட்டக்குழு பித்தியேகமாக "சு.அ.வ" தொடர்பில் செயற்படுதல் வேண்டும்.**ஆ. பணிகள்**உயர் மட்டக்குழு பின்வரும் பணிகளை புரிதல் வேண்டும்.**1.** சு.அ.வ இல் உதவி வழங்குனர்களின் நிதிகளின் சமமான ஒதுக்கீட்டிற்கும் செலவீட்டிற்கும், உயர்மட்டக்குழுவின் கொள்கை வகுத்தல் அதற்கு சமர்ப்பிக்கப்பட்ட தேவை மதிப்பீடுகளின் அடிப்படையிலும் பாதிக்கப்பட்ட ஆட்களின் எண்ணிக்கையினதும் சேத அளவினதும் விகிதாசாரத்தின் அடிப்படையிலும் ஒதுக்கீடு செய்யப்படுதல் வேண்டும் என்ற



கோட்பாட்டினால் வழிநடத்தப்படல் வேண்டும்.**2.** மதியுரை சேவைகளை வழங்குதல், அத்துடன்**3.** "P-Toms" கட்டமைப்பின் பணிகளைக் கண்காணித்தல்**இ. அமைப்பு**உயர் மட்டக்குழு பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.**1. 1** இலங்கை அரசின் நியமத்தர்.**2. 1** தமிழீழ விடுதலைப் புலிகளின் நியமத்தர்.**3. 1** முஸ்லிம் கட்சிகளின் நியமத்தர்.**ஈ. மாற்று நியமத்தர்கள்.** பெயர் குறித்த நியமனம் செய்யும் திறத்தவர் ஒவ்வொருவரும் மாற்று நியமத்தர் ஒருவரை பெயர் குறித்தொதுக்குதல் வேண்டும். உறுப்பினர் ஒருவர் சுகயீனம் காரணமாக பிரயாணத்தின் காரணமாக அல்லது வேறு காரணமாக அவசியம் காரணமாக அல்லது வேறு அவசிய சூழ்நிலை காரணமாக சமூகமாயிருக்க இயலாதிருக்கும் பட்சத்தில் மாத்திரம் கூட்டங்களுக்குச் சமூகம் அளிப்பதற்கும் உறுப்பினரின் சார்பில் செயலாற்றுவதற்கும் அதிகாரமளிக்கப்படுவார்.**உ. தவிசாளர்** உயர்மட்டக்குழு தவிசாளராகச் சேவையாற்றுவதற்கும் அதன் கூட்டங்களை நடத்துவதற்கும் இசைவு படுத்துவதற்கும் உயர்மட்டக்குழுவின் உறுப்பினர்களுள் ஒருவரை தெரிவு செய்தல் வேண்டும். தவிசாளரான ஒவ்வொருவரும் இரண்டு மாதங்களுக்கு சேவையாற்றிய பின்னர் தலைமை வகிக்கும் பணி உறுப்பினர்களிடையே சுழற்சி முறையில் வருதல் வேண்டும்.**ஊ. பார்வையாளர்கள்**உயர்மட்டக்குழுக் கூட்டங்களுக்கு பார்வையாளராக பலதரப்பு உதவி வழங்குனர்களையும், இருதரப்பு உதவி வழங்குனர்களையும், பிரதிநிதித்துவப்படுத்தும் ஒவ்வொருவரைக் கொண்டிருத்தல் வேண்டும். பார்வையாளர்கள் முறையே பல தரப்பு உதவி வழங்கும் சமுதாயத்தினாலும் பெயர் குறித்து நியமிக்கப்படுதல் வேண்டும்.**எ. முடிவெடுத்தல்.1.** உயர்மட்டக்குழு உடன்பாட்டின் அடிப்படையில் முடிவுகளை எடுக்க முயலுதல் வேண்டும். உயர் மட்டக்குழு எந்தவொரு முடிவுகளையும் எடுக்க முன்னர் எல்லா உறுப்பினர்களும் நல்லெண்ணத்துடன் ஒருமித்து பணியாற்றி பொது

உடன்படிக்கை ஒன்றை எய்துவதற்கு தங்களது முனைப்பான முயற்சிகளைப் பயன்படுத்துதலும் வேண்டும்.**2.** உடன்பாட்டை எய்த முடியாத பட்சத்தில் உறுப்பினர்கள் உயர்மட்டக்குழுவில் தொடர்ந்தும் ஒத்தழைப்பை உறுதி செய்யும் நோக்கத்துடன் உடனடியாக அவர்களை நியமனம் செய்யும் திறத்தவர்களுடனும் விரிவான கலந்தாலோசனை நடைமுறை ஒன்றில் ஈடுபடுதல் வேண்டும்.**4.** அப்போதும் உடன்பாட்டை எய்த முடியாத பட்சத்தில் நியமனம் செய்யும் திறத்தவர்கள் பிரிவு 5(ஏ,1 மற்றும் 2) என்பதில் விதிந்துரைக்கப்பட்ட கலந்தாலோசனை நடைமுறையை பின்பற்றியதன் பின்னரும் 14 நாள் முன்னறிவித்தலை கொடுத்ததன் பின்னரும் உயர் மட்டக்குழுவின் ஒத்தழைப்பை இடைநிறுத்தல் செய்யலாம்.**ஏ. அமைவிடம்**உயர்மட்டக்குழு கொழும்பில் அமைந்திருத்தல் வேண்டும்.**ஐ.** நடவடிக்கை முறைகள் உயர்மட்டக்குழு அதன் பணிகளை நிறைவேற்றுவதற்கு அதன் சொந்த நடவடிக்கை முறைகளை தீர்மானித்தல் வேண்டும்.**ஓ.** சேவையாற்றும் செயலகம்உயர்மட்டக்குழு போதியளவு பணியாட் தொகுதியினருடன் சிறிய, சுயேச்சையான செயலகம் ஒன்றை ஸ்தாபித்தல் வேண்டும்.**6. பிராந்தியக்குழுஅ. புவியியல் நோக்கெல்லை:** பிராந்தியக்குழு பிரத்தியேகமாக ஆறு மாவட்டங்களிலுமுள்ள சு.அ.வ. வின் இடப்பரப்புக்கள் செயலாற்றுதல் வேண்டும்.**ஆ. பணிகள்:** பிராந்தியக்குழு பின்வரும் பணிகளைப்புரிதல் வேண்டும்.**1.** சுனாமிக்கு பின்னரான அவசர கால நிவாரணம், புனர்வாழ்வு, புனர்நிர்மாணம், அத்துடன் அபிவிருத்தி வழிமுறைகளை நடைமுறைப்படுத்தவதற்கும் அவற்றிற்கு முன்னுரிமை அளிப்பதற்கும் ஆன தந்திரோபாயங்களை விருத்தி செய்தல்.**2.** சுனாமிக்கு பின்னரான நிவாரணம், புனர்வாழ்வு, புனர்நிர்மாணம், அத்துடன் அபிவிருத்தி என்பவற்றுக்கான கருத்திட்டங்கள் தொடர்பான கருத்திட்ட அங்கீகாரமும் முகாமைத்துவமும்.**3.** கருத்திட்டங்களின் முழுமையான கண்காணிப்பு,அத்துடன்,**4.** பிரிவு 7 இல்



குறித்துரைக்கப்பட்டவாறு வரைவிலக்கணம் கூறப்பட்ட நிதி தொடர்பில் நிதி முகாமைத்துவம்.**இ. அமைப்பு:** பிராந்தியக்குழு பின்வரும் உறுப்பினர்களை கொண்டிக்கவேண்டும்.**1.** இலங்கை அரசாங்கத்தினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் 2 உறுப்பினர்களில் ஒருவர் பிரதித்தவிசாளராக செயலாற்றுவார்.**2.** தமிழீழ விடுதலைப் புலிகளினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் 5 உறுப்பினர்களில் ஒருவர் தவிசாளராக செயலாற்றுவார்.**3.** முஸ்லிம் கட்சிகளால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட 3 உறுப்பினர்களில் ஒருவர் பிரதித்தவிசாளராக சேவையாற்றுவார்.**4.** பிராந்தியக்குழு தகுந்த ஆண், பெண் சமநிலை ஒன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்**ஈ. பார்வையாளர்கள்:** பிராந்தியக்குழு அதன் கூட்டங்களுக்கு சமுகமளிப்பதற்கு பலதரப்பு உதவி வழங்குனர்களை பிரதிநிதித்தவப்படுத்தும். பார்வையாளர் ஒருவரையும் இருதரப்பு உதவி வழங்குனர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பார்வையாளர் ஒருவரையும் கொண்டிருத்தல் வேண்டும். பார்வையாளர்கள் முறையே பல தரப்பு உதவி வழங்கும் சமுதாயத்தினாலும் பெயர் குறித்து நியமிக்கப்பட வேண்டும். ஏனைய பார்வையாளர்கள் பிராந்தியக்குழுவின் கூட்டத்திற்கு சமுகமளிப்பதற்கு அழைக்கப்படலாம். **உ. முடிவெடுத்தல்.1.** பிராந்தியக்குழ உடன்பாட்டின் அடிப்படையில் முடிவுகளை எடுக்க முயலுதல் வேண்டும். பிராந்தியக்குழு எவையேனும், முடிவுகளை எடுப்பதற்கு முன்னர் எல்லா உறுப்பினர்களும் நல்லெண்ணத்துடன் ஒருமித்துப் பணியாற்றுதலுக்கும் பொது உடன்படிக்கை ஒன்றை எய்துவதற்கும் தங்களது முனைப்பாக முயற்சிகளை பயன்படுத்துதல் வேண்டும்.**2.** உடன்பாட்டை எய்த முடியாத பட்சத்தில் பிராந்தியக்குழுவின் சாதாரண பெரும்பான்மையொன்றினால் முடிவுகள் எடுக்கப்படுதல் வேண்டும்.**3. கீழே உள்ள பந்தி. 4** எவ்வாறிருப்பினும் சிறுபான்மைக் குழுவொன்றின் மீது பாதிப்பினை ஏற்படுத்தும்

பிரச்சினை ஒன்றின் மீது பிராந்தியக்குழுவின் குறைந்த பட்சம் 2 உறப்பினர்களினால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பின் முடிவொன்று எடுக்கப்படும் பட்சத்தில் பிராந்தியக்குழுவின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை அங்கீகாரம் (7 உறுப்பினர்கள்) தேவைப்படும்.**5.** மாவட்டக்குழுவொன்றின் பிரேரணை ஒன்றிற்கு பிராந்தியக்குழுவின் சாதாரண பெரும்பான்மையொன்று கிடைக்காத பட்சத்திலும் அத்துடன் பிரேரணை தொடர்பிலான முடிவை சீராக்குமாறு பிராந்தியக்குழுவின் குறைந்தபட்சம் இரண்டு உறுப்பினர்கள் வேண்டுகோள் விடுக்கும் பட்சத்தில் நிராகரிப்பிற்கு பிராந்தியக்குழுவில் மூன்றில் இரண்டு பெரும்பானமை அங்கிகாரம் (7 உறுப்பினர்கள்) தேவைப்படும்.**ஊ. அமைவிடம்:** பிராந்திக்குழு கிளிநொச்சியில் அமைந்திருத்தல் வேண்டும்.**எ. நடவடிக்கை முறைகள்:** பிராந்தியக்குழு அதன்பணிகளை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கை முறைகளை உயர்மட்டக்குழுவுடனான கலந்தாலோசனையுடன் தீர்மானித்தல் வேண்டும்.**ஏ. சேவையாற்றும் செயலகம்:** ஆறு மாவட்டங்களுக்குமான சிறிய செயலகம் ஒன்று நிறுவப்படுதல் வேண்டும் என்பதுடன் உடனடி மனிதநேய மற்றும் புனர்வாழ்வுத் தேவைகளுக்கான செயலகத்திலிருந்து (உ.ம.பு.தே.ச.-SIHRN) பணியாட் தொகுதியினர் பெறப்படலாம். இச்செயலகம் சுனாமிக்கு பின்னரான கரையோர புனர்நிர்மான அபிவிருத்தி பிராந்திய செயலகம். (சு.பி.பு.ச.பி.செ.(RSPCRD) எனப்பெயரிடப்படல் வேண்டும் என்பதுடன் பிராந்தியக்குழுவிற்கு செயலக நிர்வாக சேவைகளை புரிததலும் வேண்டும். **ஐ. கருத்திட்ட முகாமைத்தவக் கூறு**பிராந்தியக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட முகாமைத்துவக்குழுவொன்று (க.மு.க. (PMU) தாபிக்கப்படுதல் வேண்டும்.**ஒ. கணக்கீடு பிராந்தியக்குழு பொருத்தமான தகைமை பெற்ற சுயேட்சையான கணக்காளர் ஒருவரை நியமித்தல் வேண்டும்.7. பிராந்திய நிதியம்.அ.** ஆறு மாவட்டங்களுக்கும் குறித்துரைக்கப்படாத (நிகழ்ச்சித் திட்ட



நிதிகளையும் செயலக நிதிகளையும் கொண்ட சுனாமிக்கு பின்னரான கரையோர நிதியம் ஒன்றிருத்தல் வேண்டும். (பிராந்திய நிதியம்) குறித்துரைக்கப்படாத (நிகழ்ச்சி திட்டம்) நிதிகள் பிரத்தியேகமாக வெளிநாட்டு நிதிகளை கொண்டிருக்க வேண்டிய அதே வேளையில் செயலக நிதிகள் வெளிநாட்டு நிதிகள் உள்ளூர் நிதிகள் ஆகிய இரண்டையும் கொண்டிருத்தல் வேண்டும்.**ஆ.** திறத்தவர்கள் பிராந்திய நிதியத்தின் சட்டக்காப்பாளராக இருப்பதற்கென பொருத்தமான பல தரப்பு முகவர் ஒருவரை நியமித்தல் வேண்டும்.**இ.** பிராந்திய நிதியத்தின் நோக்கம் ஆறு மாவட்டங்களினதும் சுனாமியால் பாதிக்கப்பட்ட இடப்பரப்புக்களில் நிவாரண, புனர்வாழ்வு, புனர்நிர்மான, மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு நிதி வசதியளிப்பதற்கும், அதனைத் துரிதப்படுத்தவதற்கும் தகுந்த அங்கிகரிக்கப்பட்ட நடைமுறைகளின் படி நிதிகளை துரிதமாக கிடைக்கச்செய்வதாகும்.**ஈ.** திறத்தவர்களும் சட்டக்காப்பாளர்களும் பிராந்திய நிதியத்தில் தாபிப்பதற்கும் தொழிற்படுவதற்குமான கட்டமைப்பு முறையொன்றின் மீது உடன்படுதல் வேண்டும்.**8.** மாவட்டக்குழுக்கள்.**அ.** புவியில் நோக்கெல்லை. மாவட்டக்குழு ஒவ்வொன்றும் பிரத்தியேகமாக தத்தமத மாவட்டத்திற்குட்பட்ட ச.அ.வ. இடப்பரப்புக்கள் தொடர்பில் செயலாற்றுதல் வேண்டும்.**ஆ.** பணிகள்: மாவட்டக்குழு ஒவ்வொன்றும் அதன் மாவட்டத்திற்குள் பின்வரும் பணிகளை நிறைவேற்றுதல் வேண்டும்.**1.** தேவைகளை இனம் காணுதல்**2.** தேவைகளை முன்னுரிமைப்படுத்தல்**3.** பல்வேறு பங்காளிகளிடமிருந்தும் கருத்திடப் பிரேரணைகளை பிறப்பித்தலும். பெறுதலும், கணிப்பீடு செய்தலும், முன்னுரிமைப்படுத்தலும், அத்துடன் பிராந்தியக்குழுவிற்கு விதப்புரைகளைச் சமர்ப்பித்தலும்.4. கருத்திட்டத்தின் முன்னேற்றத்தை கண்காணித்தலும் அதனைப்பற்றி பிராந்தியக்குழுவிற்கு அறிக்கையிடுதலும்.**இ.** அமைப்பும் முடிவெடுத்தலும்.ஏற்கனவே தாபிக்கப்பட்ட நன்கு பணியாற்றும்

மாவட்டக்குழுக்கள் அவற்றின் பணிகளைத் ˙தொடருதல் வேண்டும். மாவட்டக்குழுக்கள் அவற்றின் அமைப்பு மற்றும், முடிவெடுத்தலும் தொடர்பிலான பிரச்சினைகளை மேலும் கலந்துரையாடி அவற்றின் மீது முடிவெடுக்கலாம். போதியளவிலான முஸ்லிம் பிரதிநிதித்துவம் உள்ளடக்கப்படவேண்டும். மாவட்ட குழு தகுந்த ஆண் பெண் சமநிலையையும் கொண்டிருக்க வேண்டும்.**ஈ. அமைவிடம்:** மாவட்டக் குழு ஒவ்வொன்றும் அதன் மாவட்டத்திற்குள் அமைந்திருத்தல் வேண்டும். **உ. சேவையாற்றும் செயலகம்** சிறிய சேவையாற்றும் செயலகம் ஒன்று மாவட்டக்குழுக்களுக்கு செயலக நிர்வாக சேவைகளை வழங்க வேண்டும்.**9. நிறைவேற்றுகை**இப்புரிந்துணர்வு ஒப்பந்தம் இணைப்புப் பிரதிகளில் நிறைவேற்றப்படலாம். 2 வாசகங்களும் சமமான சான்றுறுதி கொண்டவையாகும்.

## மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

இலங்கை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் 1996ஆம் ஆண்டு ஜுன் மாதம் தாபிக்கப்பட்டது. இலங்கையின் சிறப்பான நிலைபாட்டுக்காகவும் மற்றும் முரண்பாடுகளை தீர்த்துக் கொள்வதற்காகவும் பலமிக்க நிறுவனமும் சிறந்த வளர்ச்சியும் பாரிய தேவையாகவுள்ளது. இச் செயற்பாடுகளில் கட்சி ஈடுபாடுகளின்றி சிவில் சமூகத்திற்குரிய பல குழுக்களுக்கு மிகவும் முக்கியமான மற்றும் பயன்படக்கூடிய வகையில் ஒத்துழைப்பு வழங்க முடியும் என்ற பாரிய நம்பிக்கையுடன் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

பொது மக்களுக்கான கொள்கை தயாரிப்பின் போது எமது நிறுவனத்தின் எதிர்பார்ப்பானது, வன்முறைகள் அற்ற விதத்தில் மோதல் தவிர்ப்பு மற்றும் ஜனநாயக ஆட்சி முறைக்காக நடவடிக்கை எடுக்கின்றதும் பரந்தளவில் பரவியுள்ள கொள்கை ரீதியான மாற்றுக் கருத்துக்களின் மீது இலக்கைக் கொண்டதுமான செயற்பாடு மற்றும் தலையீடு அவற்றின் அடிப்படை செயற்பாடுகளாகும். அதற்கேற்ப பாரிய ஆராய்ச்சி நடவடிக்கைகள் பலவற்றை இந் நிறுவனத்தினால் ஏற்றுக்கொள்ள நேரிடுவதோடு, நடைமுறைப்படுத்தப்படக்கூடிய மாற்றுக் கொள்கைகளை அடையாளம் காணுதல் மற்றும் அபிவிருத்தி செய்தல் அதனூடாக மேற்கொள்ளப்பட வேண்டியதாயுள்ளது.

ISBN 955-8037-93-1

அச்சு : க்ளோப் பிரின்டிங் வர்க்ஸ்
தொலைபேசி : 011-239739